லூசிபரின் சுயரூபம்

டெரிக்பிரின்ஸ்

Originally published in English under the title
"LUCIFER EXPOSED"

Published by Derek Prince Ministries – Asia/Pacific
PO Box 2029, Christchurch, New Zealand 8015
admin@dpm.co.nz

Printed by Derek Prince Ministries

TA/3000/1008/SR
ISBN 9788189250812

"LUCIFER EXPOSED" (Tamil)
"Lucifarai Velipaduthi Kattudhal"

Published by permission in the Tamil language.
Translated into Tamil language by:
Mrs. Mabel Christina Jothi Bai M.A., M.Ed.,M.Phil

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
18/32 Mangammal Salai, Renganagar
Trichy - 620 021, Tamil Nadu, S.India.
E-mail: rhemavg@gmail.com
Phone : 00-91-431-2459464 / 2457181
Fax: 00-91-431-2459564

DPM

Derek Prince Ministries
www.derekprince.org

பொருளடக்கம்

அத்தியாயம் 1:
கண்ணுக்குப் புலப்படாத நமது விரோதிகள்

"புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத் தக்கதாக உங்களை மயக்கினவன் யார்?"

-கலாத்தியர் 3:1

1963 ஆம் ஆண்டில், நான் அமெரிக்க ஐக்கிய நாட்டில் முதன் முறையாக இருக்கும் பொழுது வாஷிங்டன் சியாட்டிலுள்ள ஒரு பெந்தேகோஸ்தே சபைக்குப் போதகராகும்படி அழைக்கப்பட்டேன். அந்நாட்களில் நான் சூதுவாதற்றவனாகவும், அமெரிக்க சபை வாழ்வில் நடைபெறும் காரியங்களுக்குப் பழக்கமில்லாதவனாகவும் இருந்தேன். அச்சபையின் நிர்வாகக் குழுவின் பன்னிரெண்டு அங்கத்தினர்களும் என்னை ஏகமனதாக வரவழைப்பதாக எனக்கு வந்த அழைப்பு கூறிற்று. எனவே எனது மனைவி லீதியாளும் நானும் எங்களது உடைமைகளை எடுத்துக் கொண்டு, நாங்கள் வாழ்ந்த மினோபோலிஸிலிருந்து சியாட்டலுக்குப் பயணமானோம்.

நாங்கள் சியாட்டலுக்கு வந்தபின், நிர்வாகக்குழுவின் பன்னிரெண்டு அங்கத்தினர் மட்டுமே அவ்வாலயத்தின் ஞாயிறு

ஆராதனைக்கு வந்தனர் என கண்டு கொண்டேன். மேலும் ஒரு மாதத்திற்குப் பின்பு ஒருவர் தவிர மற்ற அனைவரும் ராஜினாமா செய்தனர். எனது மனைவியும் நானும் ஓர் இக்கட்டான நிலைமையின் மத்தியில் இருப்பதை உணர்ந்தோம். இச்சபை ஆவியின் அபிஷேகம் பெற்ற இருநூறு நல்ல பெந்தெகொஸ்தே மக்களால் நிரம்பி இருந்தது. அவர்கள் நலமானதைச் செய்ய விரும்பினர். அவர்கள் துன்மார்க்கமான பின்மாறும் மக்களல்ல. அவர்களைச் சந்திக்கும்போது, அவர்கள் என் மீது மரியாதை கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் குழப்பம் அடைந்தவர்கள் போலக் காணப்பட்டனர். நான் செய்ததையோ அல்லது சொன்னதையோ அவர்கள் பொருட்படுத்தவில்லை. உண்மையான பதில் ஏதும் அவர்களிடமிருந்து வரவில்லை. இது எனக்கு ஒரு திகைப்பை உண்டுபண்ணும் நிலையாக இருந்தது.

லீதியாள் ஒரு ஜெபவீராங்கனை. கர்த்தாவே “இவர்களிடம் என்ன குறையுள்ளது? என்று எங்களுக்குக் காட்டும்’’ என்று இருவருமாக ஜெபித்தோம். தேவன் தெளிவாக எங்களைக் கலாத்தியர் 3:1க்கு வழி நடத்தினார். “*உங்களை மயக்கினவன் யார்?*” இப்பகுதியை வாசித்தது எனது இறையியலையே மாற்றினது. பல பாஷை பேசித் தண்ணீர் திருமுழுக்குப் பெற்ற பெந்தெகொஸ்தே விசுவாசிகளா மயக்கப்பட்டனர்? இதை மேலும் அலசி ஆராய வேண்டியது அவசியமாயிற்று.

> “காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.”

முன்னாள் போதகரின் மனைவி, நிர்வாகக்குழு அங்கத்தினர் ஒருவருடன் காதல் கொண்டாள். அவரும் அவளுடன் காதல் மோகம் கொண்டார். பின்னர் இவர்கள் ஒரு திட்டம் போட்டதினால், போதகரின் மனைவி போதகரை விவாகரத்து செய்தாள். குழுவின் அங்கத்தினரும் தனது

மனைவியை விவாகரத்து செய்தார். பின்னர் போதகரின் மனைவி நிர்வாகக்குழு அங்கத்தினரை மறுமணம் செய்தார். அவளின் முன்னாள் கணவனான போதகர் அவ்விடம்விட்டு வேறு இடத்திற்குப் பெயர்ந்து போனார். விசுவாசத்தையும் விட்டுவிட்டார்.

போதகரின் முன்னாள் மனைவி அதே சபையின் புது போதகராக மாறினார். இப்பெண் தனது சபையாரைத் தனது கண்களால் மட்டுமே கட்டுப்பாடு செய்தாள். சபையில் ஏதாவது பிரச்சனைகள் வரும்போது எவர் என் பக்கம், கையை உயர்த்துங்கள் என்பாள். கையை உயர்த்தாதவர் மீது தனது ஆழ்ந்த பார்வையைச் செலுத்துவாள். அவர்களை அப்படியே ஆழமாகப் பார்த்துத் தன் கண்களால் மயக்கிவிடுவாள்.

ஒருமுறை நாங்கள் அந்தப் பிரச்சனையை அடையாளம் கண்டறிந்தோம். உடனடியாக நாங்கள் இதற்காக ஜெபிக்க ஆரம்பிக்க வேண்டும் என்று அறிந்து கொண்டோம். இதன் விளைவாக சபையாரின் மத்தியில் சில அதிசயமான செயல்கள் நடைபெற்றன. ஆனால் இந்த அனுபவமானது ஆவியானவரின் ஆட்சியின் முழுமையான ஒரு புதிய கோணத்தை என்னில் தனிப்பட்ட முறையில் தோற்றுவித்தது. பரிசுத்த பவுல் உங்களை மயக்கினவன் யார்? என்று வினவுகிறார். அது பேச்சின் உருவகம் மட்டுமல்ல. பவுல் இவ்வாறு ஆவிக்குரிய உண்மையைக் கூறுகிறார்.

கண்ணால் காணக்கூடாத எதிரிகள்.

வல்லமையான, விரைந்து செயல்படக் கூடிய எதிரிகள் உனக்கு விரோதமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், உனக்கு இவ்விதமாக விரோதிகள் இருக்கிறார்கள் என்பதை நீ அறியாமல், எச்சரிக்கை இல்லாமல் இருப்பது மிகவும் ஆபத்தான ஒரு நிலையாகும். கிறிஸ்தவர்களான நாம் எதிர்கொள்ளும் எதிரிகள் மாம்சமும் இரத்தமுமுள்ள மனிதர்களல்ல, அவைகள் பார்க்க முடியாத ஆவிகளாகிய

உயிரினங்கள். இந்தப் புத்தகத்தில் நாம் அறியப்போகிற பொருள்கள் மனித உணர்வினால் உணரப்பட முடியாத செய்திகளாகும்.

வேதாகமத்தில் 1 கொரிந்தியர் 2:9ஆம் வசனத்தில் சொல்லப்பட்டபடி "கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" என்பதாகும். இந்தக் காரியங்கள் பார்க்கக் கூடாதவைகளாகவும் ஆவிக்குரியவைகளாகவும் உள்ளன. அவைகளை வேதாகமத்தின் மூலமாக மட்டும்தான் புரிந்து கொள்ள முடியும். இங்கு இதைத்தவிர நம்பத்தகுந்த தகவல்களுக்கான ஆதாரங்கள் வேறு எதுவுமில்லை.

அநேக மக்கள் நாம் பார்க்கின்ற, தொட்டு உணர்கின்ற, கேட்கின்ற, மற்றும் ருசிக்கின்ற பொருட்களே உண்மையாக மெய்யானவை என்று கற்பனை செய்து கொள்ளுகின்றனர். காலாகாலமாக தத்துவ ஞானிகள் நாம் பார்க்கின்ற, தொட்டு உணர்கின்ற, கேட்கின்ற, மற்றும் ருசிக்கின்ற பொருட்கள் மெய்யாக உண்மையானவைகள் அல்ல என்ற முடிவுக்கு வந்துள்ளனர். அவைகள் ஏமாற்றும் இயல்புடைய மாயமான தோற்றமுடையவைகளாகவும் தற்காலிகமானவைகளாகவும் உள்ளன. இந்தத் தத்துவஞானிகள் இவைகளை நீ உன்னுடைய புலன்களால் சார்ந்திருக்க முடியாது என்று எச்சரிக்கின்றனர்.

நாம் பார்க்கும் பொருட்கள் கணநேரம் தோன்றி மறைகின்றவைகளாயிருக்கின்றன என்று பரிசுத்த பவுல் சொல்லுவதை வேதம் ஒத்துக்கொள்கிறது. கண்ணால் காணக்கூடாத பொருள்கள் நித்தியமானவைகள். மற்றுமொரு வகையில் சொல்லப்போனால் நம்முடைய புலன்களின் உலகம் கடந்துசெல்கிறது. எனவே அவைகள் பாதிதான் உண்மையானவைகள். ஏனென்றால் அவைகள் நீடித்து நிலை நிற்பதில்லை. II கொரிந்தியர் 4:18 ஐப்பார்க்கவும். "ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்." ஆனால் நாம்

காணக்கூடாத ஆவிக்குரிய உலகமானது நம் புலன்களால் உணரமுடியாத, மனதால் உணரக்கூடியது மட்டுமே. இது மெய்யானதாகவும் உண்மையானதாகவும் இருக்கிறது. இது மட்டுமே நிலைத்து நிற்கக்கூடியது.

ஆகவே காணக்கூடாத எதிரிகள் என்ற செம்பொருளுக்கு நாம் வரும்பொழுது, நாம் நமது மனஅளவில் ஒத்துப் போகக்கூடிய வகையில் ஆரம்பிக்க வேண்டும். நான் என்னுடைய உள்ளத்தில் பார்க்கும், தொடும், கேட்கும், ருசிக்கும் பொருட்களை வைத்து என்னை ஒரு வரையறைக்குள் குறைத்துக்கொள்ளப் போவதில்லை. நான் என்னுடைய இதயத்தையும் மனதையும் பரிசுத்தஆவியின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டு வேதத்தில் பதியப்பட்டுள்ள செய்திகளுக்குத் திறந்து வைக்கப்போகிறேன். இவைகள் ஒரு வித்தியாசமான உலகிற்கு உரியவைகள்.

பரிசுத்த பவுல் அடிகளார் எபேசு சபைக் கிறிஸ்தவர்களுக்கு, ஞானத்தின் ஆவியையும், அவருடைய வெளிப்பாட்டின் அறிவை அறிந்து கொள்ளும் ஆவியையும் வழங்கும்படி தேவனிடத்தில் ஜெபித்து வேண்டிக்கொள்ளுகிறார். (எபேசியர் 1:17ஆம் வசனத்தைப் பார்க்கவும்) நானும் உங்களுக்காக இவ்வண்ணமாகவே வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் அவருடைய வசனத்திற்கு நம்முடைய இதயக்கதவுகளைத் திறந்து வைக்கும்போது, தேவன் நமக்கு ஞானத்தையும் வெளிப்பாட்டையும் தருவாராக! ஏனென்றால் நாம் வெளிப்பாட்டின் மூலமாக அறிந்து கொள்ளக்கூடிய செய்திகளையே, நாம் பகிர்ந்து கொள்ளுகிறோம். நாம் பகிர்ந்துகொள்ளப் போகிற சாராம்சம் என்னவென்றால் இரண்டு எதிரான இராஜ்யங்கள் ஒன்றுக் கொன்று போரிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவைகள் இயற்கையான இராஜ்யங்களாகிய பிரிட்டன், ஸ்வீடன், அமெரிக்கா போன்ற தேசங்களல்ல. அவைகள் கண்களால் காணக்கூடாத ஆவிக்குரிய இராஜ்யங்களாகும். ஒன்று உன்னத தேவனின் இராஜ்யம் மற்றொன்று சாத்தானின் இராஜ்யம்

ஆகும்.

விடிவெள்ளி நட்சத்திரம்

ஏசாயா பதினான்காம் அதிகாரத்தில் லூசிபர் என்று அழைக்கப்படுகிற ஒரு நபர் அறிமுகப்படுத்தப்படுகிறார். லூசிபர் என்னும் வார்த்தை இலத்தீன் மொழியின் வேர்ச்சொல்லில் "ஒளியைக் கொண்டுவரும் ஒருவன்" என்று பொருள்படும். எபிரெயத்தில் இந்த வார்த்தையானது "விடிவெள்ளி நட்சத்திரம்" என்று மொழி பெயர்க்கப்படுகிறது. எந்த மொழியிலும் லூசிபர் என்பவன் ஒரு பிரகாசமான, ஒளி வீசக்கூடிய, மகிமையான உயிருருவான வரைபடம் போல விஸ்தரிக்கப்படுகிறான். அவன் ஒரு "பிரதான தூதனாக" குறிப்பிடப்படுவதை நான் நம்புகிறேன். "Arch" அதாவது "பிரதான" என்ற வார்த்தைக்குக் கிரேக்க வேர்ச்சொல்லின்படி 'ஆட்சி செய்தல்' என்று பொருளாகும். இதே வார்த்தை "Arch Bishop" பிரதான பேராயர் என்ற சொல்லிலும் வருகிறது. இதன் பொருள் மற்ற எல்லாப் பேராயர்களையும் ஆளும் பேராயர் என்பதாகும். இதைப் போல *பிரதான தூதன்* என்பதும் மற்ற தூதர்களை ஆளுகை செய்யும் ஒரு தூதனாவான். ஆகவே தேவனின் பரலோக இராஜ்யத்திலுள்ள சேனைகளில் லூசிபரும், பிரதான தூதர்களாகிய மிகாவேல் காபிரியேல்[1] என்பவர்களைப் போல ஒரு முக்கியப் பிரதான தூதனாவான்.

ஒரு கட்டத்தில் லூசிபர் ஒரு பெரிய தவறிழைத்தான். அவன் தனக்குத்தானே உண்டாக்கிக்கொண்ட தமது மகிமையைத் தன்னைப் படைத்த தேவனுடைய மகிமைக்கு சரிசமானமாக நினைத்து அவருக்கு எதிராகப் போராடினான்.

---

1 பிரதான தூதன் மிகாவேலுக்கான வேதாகம ஆதாரங்கள் தானியேல் 10:13,21; 21:1; யூதா 9; வெளிப்படுத்தின விஷேசம் 12:7; பிரதான தூதன் காபிரியேலுக்கான வேதாகம ஆதாரங்கள் தானியேல் 8:16; 9:21; லூக்கா 1:26.

இந்தக் கருத்தில் லூசிபர் இயேசுவுக்கு விரோதமாக தன்னை ஒப்புமையாக்கிக்கொண்டது மிகவும் சுவையானதாகும். லூசிபர் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு சிருஷ்டியாகும். அவன் தேவனுக்குச் சரிசமமானவனல்ல. ஆனால் அவன் தன்னைத் தேவனுக்குச் சரிசமமாக எண்ணி மகிமையைத் தேடினதால் வீழ்ந்தான். பிலிப்பியர் 2:6ஆம் வசனத்தில் சொல்லப்பட்டபடி *"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் . . . "* இயேசு கிறிஸ்து தேவனுக்கு சரிசமமாக எண்ணப்பட்டாலும் அவர் தன்னைத்தான் தாழ்த்தினார். ஆகவே எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டார்.

திரும்பவும் ஏசாயாவில் லூசிபரின் எதிர்ப்புக்கான தூண்டுதலை நாம் காணலாம்.

> ***அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையில் விழ வெட்டப்பட்டாயே!*** *(ஏசாயா 14:12)*

என்று கூறப்பட்டுள்ளது.

இந்த வார்த்தையைக் கூர்ந்து கவனித்தீர்களானால் "நான் செய்வேன்" என்பது மற்ற இரண்டு வசனங்களில் 5 முறைகள் கூறப்பட்டுள்ளது. இது தேவனால் படைக்கப்பட்ட சிருஷ்டியானது தேவனுடைய சித்தத்திற்கு எதிராக தன்னுடைய சித்தத்தை ஏற்படுத்தினதை வெளிக்காட்டுகிறது.

> ***"நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,***
>
> ***நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே."*** *(ஏசாயா 14:13-14)*

லூசிபரின் ஆவல் என்னவென்றால் தேவனுடைய உன்னத நிலைக்குச் சரியாகத் தன்னையும் உயர்த்துவதாகும். அவன் தன்னை மிகவும் ஞானமுள்ளவனாகவும், மிகவும் அழகுள்ளவனாகவும், மிகவும் மகிமையுள்ளவனாகவும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் தனக்குத்தானே, நானே தேவனாக இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டான். லூசிபர் தேவனுடைய தூதர்களில் மூன்றில் ஒரு பங்கானவர்களின் உண்மையான சேவையை அவர்கள் மனதளவில் கெடுத்து அவர்களைத் தன் பக்கமாக இழுத்து, தனது எதிர்ப்பிலும் தனது விழுதலிலும் பங்குபெறச் செய்தான் என்று வேதாகமம் உரைக்கிறது. இதற்கு மறு உத்தரவாக தேவன் *"ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்"* (ஏசாயா 14:15) என்று கூறுகிறார்.

எசேக்கியேல் 28இல் இதே படுபயங்கரமான ஜீவியைப் பற்றி மற்றொரு காட்சியைக் காண்கிறோம். இந்த அதிகாரம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒரு புலம்பலாகவும் அல்லது அதிகார அறிவிப்பாகவும் உள்ளது. இதன் முதல் பகுதி தீருவின் இளவரசனை மையமாகக் கொண்டுள்ளது. இரண்டாம் பகுதி தீருவின் அரசனைப் பற்றியதாகும். இதை ஆழ்ந்து பரிசோதிக்கும்போது தீருவின் இளவரசன் ஒரு மனித அவதாரம் உடையவன். அவன் தன்னைத் தேவனாக உரிமை கொண்டாடினாலும் அவன் ஒரு மனிதனே என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மற்றொரு பக்கம் நோக்கினால் சரிசமமாக பார்த்தால் தீருவின் அரசன் மனிதனல்ல. இந்த அதிகாரத்தில் நமக்கு, சாத்தான் எவ்வாறு செயல்படுகிறான் என்று ஒரு தோற்றம் கொடுக்கப்பட்டுள்ளது. நமக்குத் தீருவின் அரசன் ஒரு மனிதனாக ஆட்சி செய்கிறான். மேலும் அவன் பின்னணியில் பார்க்க முடியாத அதிகார எல்லை உண்டு. நமக்குச் சாத்தானாக ஆட்சிபுரிகிற தீருவின் ராஜா உண்டு. இந்த மனித ஆட்சியாளன் முழுவதுமாக ஒரு பொம்மையைப் போலவே உள்ளான். கண்ணால் காணமுடியாத ஆட்சியாக வரும் கம்பியின் மூலமாகவே அவனது அசைவுகள் எல்லாம் கட்டளையிடப்படுகிறது. நீ

இந்த உண்மையைப் பார்க்க ஆரம்பிக்கும்போது வரலாறும் அரசியலும் ஒரு வித்தியாசமான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. நாம் பெரும்பான்மையான பெரியவர்கள் என்று பெயர் பெற்றவர்களை அதாவது வரலாற்றில் இகழப்பட்ட இவர்களைப் பரிசோதித்துப் பார்க்கும்போது இப்படிப்பட்ட கயிறுகளால் கட்டப்பட்டு அவர்களது ஒவ்வொரு அசைவும் மேலாளுகை செய்யப்படுவதற்குரிய சான்றுகளை நாம் காண முடியும்.

"நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்.

"நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும், பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது; நீ சிருஷ்டிக்கப் பட்ட நாளில் உன் மேள வாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது."

(எசேக்கியேல் 28:12-13)

இது விஸ்தாரமாக வேத வல்லுநர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். அதாவது லூசிபர் பரலோகத்தின் பாடல் துதி ஆராதனைகளுக்கு பொறுப்பு வகித்தவர் என்பதாகும். அவன் ஒரு இசை வல்லுநராக இருந்தான். இன்று மக்களைப் பிடித்து இழுப்பதற்கு தொடர்ந்து இசையையே உபயோகிக்கிறான்.

"நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினாய்.

நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்.

“உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்து நீ பாவஞ்செய்தாய்; ஆகையால் நான் உன்னை தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேரூபாய் இருந்த உன்னை அக்கினி மயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப் போடுவேன்.”

(எசேக்கியேல் 28:14-16)

இப்பொழுது நாம் சிறிது நேரம் இந்தப் பகுதியில் காணப்படும் ஒரு முக்கியமான வார்த்தையான *“வியாபாரத்தின்”* என்ற வார்த்தையைச் சோதனை செய்து பார்த்தோமானால் எபிரெயத்தில் என்ன பொருள் என்றால் மேலும் கீழும் செல்லும் ஒரு கோள்சொல்பவர், ரகசியமாக எதிர்ப்பை உருவாக்கும் ஒரு எதிர்ப்பாளர் என்பதாகும். இன்று நாம் அதைப் பிரச்சாரம் அல்லது ஆதரவு திரட்டுதல் என்று அழைக்கிறோம். இவ்வண்ணமாகவே லூசிபர் தூதர்களின் நம்பகத் தன்மையைக் கெடுத்து விஷத்தை ஏற்றினான். முன்னும் பின்னுமாகப் போய் என்னைப் பாருங்கள்! நான் எவ்வளவு அழகுள்ளவனாகவும் அறிவுள்ளவனாகவும் இருக்கிறேன் என்பதைப் பாருங்கள். நான் தேவனை விட மிகச் சிறந்த ஒரு ஆட்சியாளரை உண்டாக்க முடியும் என்பதை நீங்கள் ஏன் சிந்திக்கமாட்டேன் என்கிறீர்கள். தேவன் உங்களை உண்மையாகவே பாராட்டமாட்டார் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் என்னோடு இணைந்தால் நான் என்னுடைய இராஜ்யத்தில் மிகவும் உயர்ந்த பதவியை அதாவது தற்பொழுது நீங்கள் இருக்கும் நிலையைவிட உயர்ந்ததை உங்களுக்குத் தருவேன் என்று கூறுவான்.

> காரியங்களை வாய்க்கச் செய்வதற்கு லூசிபர் முகஸ்துதியையும் பொய்யையும் வழியாகப் பயன்படுத்துகிறான்.

‘உலக வியாபாரம்’ என்ற வார்த்தையின் சில

உபயோகங்களின் விளக்கத்தின் நுண்ணிய தன்மையை நாம் பார்ப்போம். *“உன் ஜனங்களுக்குள்ளே அங்கும் இங்கும் கோள்சொல்லித் திரியாகயாக; பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்படவேண்டாம்; நான் கர்த்தர்.”* (லேவியராகமம் 19:16) இந்த வசனம் மாயமானவைகளைப் பற்றி விவரிக்கிறது. அதாவது பொய்யான தோற்றத்தையும், குற்றஞ்சுமத்துவதையும் விவரித்துச் சொல்கிறது. லூசிபர், தேவனை ஒரு சர்வாதிகாரி, ஒரு கொடுங்கோலாட்சியாளர், தன்னுடைய சொந்த மேன்மைக்காகவும் மகிமைக்காகவும் தன்னையே கவனித்துக் கொள்ளுகிறவர், தனக்கு மிகவும் விசுவாசமாக சேவை செய்யும் தூதர்களை ஒரு போதும் பாராட்டாதவர் என்று குற்றஞ் சுமத்தினான்.

நீதிமொழிகள் 11ஆம் அதிகாரத்தில் இதே வார்த்தை திரும்பவும் உபயோகிக்கப்படுகிறது. *“புறங்கூறித் திரிகிறவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான்; ஆவியில் உண்மையுள்ளவனோ காரியத்தை அடக்குகிறான்”* (வசனம்13) நாம் இதில் ஒரு வித்தியாசத்தைக் காண்கிறோம். கோள் சொல்லுகிறவன் என்பதற்கு எதிரான வார்த்தை உண்மையுள்ள ஆவி என்பதாகும்.

நீதிமொழிகள் 20ஆம் அதிகாரத்தில் இதே வார்த்தைக்கான மற்றொரு விரிவான நிகழ்வு உள்ளது. *“தூற்றிக்கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான்; ஆதலால் தன் உதடுகளினால் அலப்புகிறவனோடே கலவாதே”* (வசனம் 19). ஆகவே கோள்சொல்லுகிறவனும் உதடுகளினால் அலப்புகிறவனும் ஒருவருக்கொருவர் மிக நெருக்கமானவர்கள். மற்றொரு வகையில் பார்த்தோமானால் லூசிபர் இந்தத் தூதர்களை முகஸ்துதி செய்து இந்தத் தூதர்களுக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட சலுகையை விடத் தான் அவர்களுக்கு மேலும் சிறந்தவற்றைத் தருவதாகச் சொல்லி தன்னை நம்ப வைத்தான். ஏனென்றால் நான் இதே செயல்கள் மனிதர்கள் மத்தியில், பல நேரங்களில் சபைகளிலும் மற்ற இடங்களிலும்

நடைபெறுவதைப் பார்த்திருக்கிறேன். மேலும் தெள்ளத் தெளிவாக இதே நபர் வரலாற்றின் எல்லா செயல்களிலும் பின்னால் இருந்து செயல்படுவதைக் காணலாம். புறங்கூறுதலும் பொய் கூறுதலுமே லூசிபரின் செயல்களைச் சாதிக்கும் கருவிகளாகும்.

எரேமியா 6:28, 9:4 மற்றும் எசேக்கியேல் 22:9 ஆகியவற்றில் இந்த வார்த்தை 'இழிவாகப் பேசுபவன்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது எபிரெயத்திலும் அதே வார்த்தையாகும். அதாவது ஒரு கோள்சொல்லுபவன் அல்லது அவதூறாகப்பேசுபவன் என்பதாகும். இவன் அங்கும் இங்கும் சென்று அதிருப்தியையும் அவநம்பிக்கையையும், முகஸ்துதியின் மூலமாகவும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதின் மூலமாகவும், விதையாக விதைக்கிறான்.

லூசிபரின் தற்பெருமை

எசேக்கியேல் 28ஆம் அதிகாரத்திற்குத் திரும்பவும் நாம் வரும்பொழுது லூசிபரின் விழுதலுக்கு என்ன காரணம் என்பதைச் சுருக்கமாகக் காணலாம்.

"உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்"
(எசேக்கியேல் 28:17)

லூசிபரின் ஆரம்ப உள்நோக்கம் என்ன? முதல் பாவம் என்ன? முதல் பாவம் பரலோகத்தில்தான் இடம் பெற்றது! பூலோகத்தில் இல்லை! அது குடிபோதை அல்ல. அது விபச்சாரம் அல்ல. அது பொய் பேசுதலும் அல்ல. அது தற்பெருமையேயாகும். இதுவே மற்ற எல்லாப் பாவங்களிலும் பயங்கரமான பிரதானமான பாவமாகும். இங்கு சபைகளுக்குச் செல்லும் அநேகர் விபச்சாரம் செய்வது, குடியில் இருப்பது ஆகியவற்றைப்பற்றி சிந்தித்துப் பார்க்காவிட்டாலும் தற்பெருமை எவ்வளவு ஆபத்தானது என்பதை அறிந்துகொள்ளாமல் தற்பெருமையில் ஆழ்கின்றனர்.

பிரதான தூதனாகிய லூசிபர் மிகவும் அழகுள்ளவனாக இருந்ததால் அவனுக்குள் பெருமை தலைதூக்கியது.

"உன் அக்கிரமங்களின் ஏராளத்தினாலும், உன் வியாபாரத்தின் அநீதத்தினாலும் உன் பரிசுத்த ஸ்தலங்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினாய்"
(வசனம் 18)

லூசிபர்தான் பரலோகத்தில் தேவனின் பரிசுத்த ஸ்தலத்திற்குப் பொறுப்பாளியாவான். அவன் துதி ஆராதனைக்கு மூலகாரணமாவான். அவன் தேவனுடைய பிரசன்னம் வெளிப்படும் இடத்தை மூடியிருக்கும் கேரூப் ஆவான். அவன் பாடல்களுக்கும் பொறுப்பானவன் ஆவான். அவன் ஒரு கலைஞன். அவன் எல்லாத் திறமைகளும் பெற்றவனாவான். பின்பு அவன் எதிராளியாகி கீழே விழுந்தான். காரணம் தற்பெருமையேயாகும்.

அத்தியாயம் 2
யுத்தத்திற்குத் தயாராகுதல்

"சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி"

-1 நாளாகமம் 21:1

ஒரு காலத்தில் லூசிபர் தேவனுடைய படைப்புகள் எல்லாவற்றிலும் அதிக ஞானமுடையவனாகவும் மிகுந்த அழகுள்ளவனாகவும் இருந்தான். ஆனால் வேதம் சொல்லுகிறது *.... உன் இருதயம் மேட்டிமை கொண்டு . . .* (எசேக்கியேல் 28:2-9ஐப் பார்க்கவும்) அவன் தன்னுடைய ஞானத்தினாலும் அழகினாலும் பெருமையை வளர்த்துக் கொண்டதினிமித்தமும் தேவனுக்கு விரோதமாக எதிர்ப்பு தெரிவிக்கத் திட்டம் தீட்டினதினிமித்தமும் அவன் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து கீழே தள்ளப்பட்டான். மேலும் அவனோடு கூட அவனைச் சார்ந்த வஞ்சகமான தூதர்களும் கீழே தள்ளப்பட்டார்கள்.

லூசிபரின் இந்தப் போராட்டத்தின் விளைவுகளை மடங்கடிப்பதற்காக தேவன் ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்கினார். லூசிபரின் எதிர்ப்புக்குப் பெருமையே ஆணித்தரமான காரணமாயிருந்ததினால் தேவன் இதற்கு மாறாக வித்தியாசமான வகையாக லூசிபரின் இடத்தை

நிரப்பும்படியாக மற்றொரு உயிரைப் படைத்தார். தேவனின் இந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்காகப் படைக்கப்பட்டவனே மனிதனாவான். தேவன் எபிரெய மொழியில் சொல்லப்பட்டதுபோல 'ஆதாம்' என்ற பெயரை தன் மனதிற்கொண்டு இந்த மனித குலத்தின் முதல் மனிதனுக்கு ஆதாம் என்ற பெயரே பொருத்தமானது என்று கருதி ஆதாம் என்று பெயர் சூட்டினார்.

தேவனின் மாறுபட்ட திட்டம்

மற்ற எல்லாப் படைப்புகளிலும் ஆதாமைப் பூரண அழகுள்ளவனாக தேவன் படைத்தார். ஆதாமைப் படைத்ததின் நோக்கத்தில் சில சிறப்புத் தன்மைகள் உள்ளன. தற்பெருமைக்கு எதிராகப் போரிடுவதற்காகவே சிருஷ்டி கர்த்தாவின் மனதில் ஆதாம் வரையப்பட்டிருந்தான். நாம் அறிந்த மற்ற படைப்புகள் எல்லாவற்றிலும் ஆதாம் வித்தியாசமான ஒரு மூலப்பொருளிலிருந்து (ஆதாரத்திலிருந்து) படைக்கப்பட்டான். மிகவும் கீழானவனாகவும் தாழ்மையானவனாகவும் காணப்பட்டான். ஆனாலும் தேவன் அவனை மிகவும் மேலான நிலைக்குவரும் திறனுடையவனாகச் செய்தார். தேவன் ஆதாமில் கீழானவற்றையும் மேலானவற்றையும் சேர்த்துப் படைத்தார்.

ஆதியாகமத்திலே ஆதாமின் படைப்பைப்பற்றி ஒரு விளக்கம் காணப்படுகிறது.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்."

(ஆதியாகமம் 2:7)

எனக்கு, இதுவே தெளிவான காட்சி. மேலும் நான் அதை எப்படி விவரித்தேனோ அப்படியே நடைபெற்றது என்றும் நம்புகிறேன். நான், புதிய ஏற்பாடு வெளிக்காட்டும் விதமாக யாரால் எல்லாப் பொருட்களும் படைக்கப்பட்டதோ

அவரையே நான் மிகப்பெரிய சிருஷ்டி கர்த்தாவாகக் காண்கிறேன். அவரே என்றும் நிலைத்திருக்கும் தேவகுமாரன், என்பதே தேவனின் வார்த்தையாகும். ஆதாம் தேவ தன்மையுடைய இரண்டாவது மனிதராவார். அவரை, அந்தத் தோட்டத்திலே கீழே குனிந்து, தன்னுடைய பரிசுத்தமான விரல்களால் மண்ணைப் பிசைந்து ஒரு பழுதற்ற உருவத்தை உண்டாக்கியதை நான் கண்டறிகிறேன். ஆனால் இறுதியாக அது பழுதற்றதாக இருந்தாலும் அது சாதாரண மண்ணே ஆகும். பிறகு படைப்பாளர் மேலும் கீழே குனிந்தார். அவர் தன்னுடைய பரிசுத்தமான உதடை மண்ணால் செய்யப்பட்ட உதடுகளின் மேல் வைத்தார். அவரது பரிசுத்தமான நாசியை அந்த மண்ணான உருவத்தின் நாசியின்மேல் வைத்து அவர் அவனுக்கு ஜீவ சுவாசத்தை நாசியிலே ஊதினார்.

இந்தப் பத்தியிலே படைக்கப்பட்ட மனிதன் அல்லது ஆதாமைப்பற்றி முக்கியமான ஐந்து உண்மைகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் முதலாவதாக வேதாகமத்தில் முதல் முறையாக தனிப்பட்ட மனிதனுடைய பெயர் அறிமுகப்படுத்தப்படுகிறது. தேவாதி தேவன் மனிதனைப் (ஆதாமை) படைத்தார். 'தேவாதி தேவன்' என்ற பரிசுத்தமான தனிப்பட்ட பெயர் மெய்யான தேவனுக்கு உண்டு. நாம் அதை பொதுவாக *'யெகோவா'* என்று அழைக்கிறோம். தற்கால அறிஞர்கள் அது தோராயமாக *'யாவே'* என்று இருக்கலாம் என்கிறார்கள். ஆனால் இங்கே நாம் முக்கியமாக நினைவுகூற வேண்டியது என்னவென்றால் அது ஒரு தனிப்பட்ட பெயராகும். அதேபோல் மனிதன்(ஆதாம்) என்பதும் ஒரு தனிப்பட்ட பெயராகும். ஆகவே தேவன் தனிப்பட்ட நிலையில் தனிப்பட்ட மனிதனை அவருடன் உறவு

"நம் ஒவ்வொருவருக்குமுள்ள முழு அனுபவத்தின் பெரும்பாகம் நம்மிலுள்ள உயர்ந்தவைக்கும் தாழ்ந்தவைக்கும் ஏற்படக்கூடிய போராட்டமே."

கொள்ளும்படி படைத்தார். ஆகவே இது படைப்பாளியின் பெரிய ஆவலை எடுத்துக்காட்டுகிறது. அதாவது அவர் தான் படைத்த படைப்பினிடையே மனிதனுக்கு மனிதன் ஐக்கியம் கொள்ளுவதைப் போல இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

இரண்டாவதாக, தேவன் மனிதனைப் படைக்க கீழே குனிந்தார் என்று பார்க்கிறோம். அவர் புழுதியிலே கீழே குனிந்து சரீரத்தை உண்டாக்கினார். அவர் இன்னும் கீழே தாழ்வாகக் குனிந்து தன்னுடைய உதடை அந்த மண்ணான உதடு மேலும் வைத்து அவருடைய தெய்வீக சுவாசத்தை அந்த சரீரத்திற்குள்ளே ஊதினார். எனவே மனிதனைப் படைப்பதற்கு தேவன் கீழே குனிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

மூன்றாவதாக, தேவன் தம்மையே மனிதனுக்கு பங்களிக்கிறார். அவர் தன்னுடைய சொந்த சுவாசத்தையே மண்ணான சரீரத்திற்குள் செலுத்தினார்.

நான்காவதாக, தேவன் உயர்ந்ததையும் தாழ்ந்ததையும் ஒன்றாக இணைத்ததின் விளைவாக தேவன்தானே, பூமியிலுள்ள புழுதியிலிருந்து மனிதனை நேரடியாக உருவாக்கினார். நீங்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கும்பொழுது உங்களிலே ஏதாவது கொஞ்சமாவது புரிந்து கொள்கிறீர்களா? உங்களிடத்தும் கொஞ்சம் உயர்வுகளும் தாழ்வுகளும் உண்டு.

நம் ஒவ்வொருவருக்குமுள்ள முழு அனுபவத்தின் பெரும்பாகம் நம்மிலுள்ள உயர்ந்தவைக்கும், தாழ்ந்தவைக்கும் ஏற்படக்கூடிய போராட்டமேயாகும்.

ஐந்தாவது உண்மை என்னவென்றால் மனிதன் தேவனிடத்தில் உறவுகொள்வதில் இரண்டு விதமான திறனைப் பெற்றிருக்கிறான். அவனுடைய ஆவி தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டபடியால் அவன் தேவனோடு உறவு கொண்டவனாக இருக்கிறான். ஆனால் அவனுடைய சரீரம்

பூமியிலிருந்து உருவாக்கப்பட்டதால் உலகத்தோடும் உறவு உடையவனாக இருக்கிறான். எனவே மீண்டும் சில விஷயங்கள் நம்முடைய அனுபவத்தில் உண்மையுள்ளவைகளாக இருப்பதை நாம் காண்கிறோம். நமக்குள்ளாக இருக்கும் சில விஷயங்கள் மனிதனுக்கு மனிதன் உறவு கொள்ளுவதுபோல தேவனிடத்தில் உறவு கொள்ளும் படியாக அதாவது அவரோடு ஐக்கியம் கொள்ளும்படியாகச் செய்கிறது. ஆனால் அங்கே நம்மிடத்திலுள்ள சில விஷயங்கள் மிகவும் பூமிக்குரியதாக பூலோகத்தோடு உறவு உள்ளதாக இருக்கிறது.

இங்கே தேவனுடைய மாற்றுத்திட்டம் நமக்குப் படம்பிடித்துக் காட்டப்படுகிறது. உருவாக்கப்பட்ட கேரூபின் கீழே விழுகிறான். எனவே தேவன் பெருமையான எண்ணத்தை முறியடிக்கும்படியாக ஒரு வித்தியாசமான ஆதாரமான மற்றொரு விதமான ஜீவனை பூமியிலிருந்து உருவாக்கி அவனுக்கு அவருடைய தெய்வீக சுவாசத்தைக் கொடுத்தார்.

சாத்தானுடைய எதிர் தாக்குதல்

சாத்தான் ஏற்கெனவே விழுந்த தூதன். தேவனுக்கும் மனிதனானவனுக்கும் எதிரியானவன். பதிலுக்குப் பதிலாக செயல்படுகிறான். அவன் மனிதனிடத்தில் விரோதம் வைத்திருப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவதாக அவன் மனிதனிடத்தில் காணப்படும் தேவசாயலைத் தாக்க நினைத்தான். நீங்கள் மற்ற படைப்புகளைவிட மனிதன் தேவனின் தன்மையைக் கண்கூடாக வெளிப்படையாக பிரதிபலித்ததைக் காணலாம். சாத்தான் தேவனைத் தொடவே முடியாது. ஆனால் அவன் தேவனுடைய தன்மையைத் தரித்துக் கொண்டுள்ள மனிதனுக்கு விரோதமாக யுத்தத்தை உருவாக்க முடியும். அவனுடைய விருப்பம் என்னவென்றால் அந்த உருவத்தைப் பரிசுத்த குலைச்சலாக்குவது, அதை அழித்துவிடுவது, அதைக்

தேவலப்படுத்துவதுமாகும். இதற்காக அவன் சிறிதும் களைப்படையாமல் உழைத்தான்.

இரண்டாவது காரணம் சாத்தானுக்கு மனிதன் மேல் பொறாமை, ஏனென்றால் சாத்தானின் ஆட்சிக்குரிய எல்லையில் மனிதன் வைக்கப்பட்டான். மனிதன் படைக்கப்பட்ட நேரத்திலிருந்து அவனை ஒரு விரோதியாகக் கருதி அவனை ஒன்றுமில்லாமல் போகப்பண்ணுவது சாத்தானுக்கு அவசியமாயிற்று.

சாத்தான் மனிதனைக் கவிழ்ப்பதற்கு, அவனைக் கீழே விழச் செய்வதற்கு எது காரணமாக இருந்ததோ அதே தந்திரத்தைக் கையாண்டான் என்பது நகைப்பிற்குரியது. அந்த நிலைமை ஆதியாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. சாத்தான் வலுசர்ப்பமாக உருவெடுத்து, ஆதாமையும் ஏவாளையும் தேவன் வைத்திருந்த தோட்டத்திற்குள் வந்து, அவர்களை கீழ்ப்படியாமல் போகும்படிச் செய்து, தேவனுக்கு விரோதமாக எதிர்ப்புத் தெரிவிக்கும்படி சோதித்தான். இதுவே அவர்கள் ஏமாற்றப்பட்டதற்கும் கீழே விழுந்துபோனதற்கும் ஆதாரமாகும்.

> ***“தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.***
>
> ***ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்;***
>
> ***ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும்***

வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை;

நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது."

(ஆதியாகமம் 3:1-5)

வியக்கத்தக்க வண்ணமாய் இச்சம்பவம் நம் அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. ஏவாள் வலுசர்ப்பமாகிய சாத்தானின் சோதனையால் வஞ்சிக்கப்பட்டாள். அவள் கையை நீட்டிப் பழத்தைப் பறித்துத் தன்னுடைய கணவனைத் தன்னுடைய கீழ்ப்படியாமைக்கு ஒத்துப்போகும்படிச் செய்தாள். சாத்தான் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் எதிராகச் செயல்பட்டு அவர்களை விழுந்து போகும்படிச் செய்த சோதனையில் மூன்று முக்கியமான படிகள் உண்டு.

சாத்தானுடைய முதல் தாக்குதல் என்னவென்றால் அவன் ஆதாமையும் ஏவாளையும் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகச் செயல்படும்படித் தூண்டினான். தேவன் ஆதாமிடத்தில் இவ்விதமாகச் சொல்லியிருந்தார். *"ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்."* (ஆதியாகமம் 2:17)

சாத்தான் கர்த்தருடைய வார்த்தையைப்பற்றிய கேள்வியைக் கேட்டு அவனிடத்தில் அணுகினான். அவன் ஏவாளிடத்தில் *"நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது."* (ஆதியாகமம் 3:1) சாத்தான் அவர்கள் மறுதலிக்கும்படியாக மிகவும் சாமர்த்தியமாக நேரடியாக ஒரு கேள்வியைக் கேட்டான்.

அவனுடைய நோக்கம் என்னவென்றால் தேவனுடைய வார்த்தையை அவர்கள் அவமதிக்க வேண்டும் என்பதாகும். ஏவாள் இந்தக் கேள்விக்குப் பதிலளித்தவுடன் அவன் தேவனுடைய மகிமையைக் குறைக்கும்படி முயற்சித்தான்.

அடுத்ததாக வலுசர்ப்பம் அவளிடத்தில், *"அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்" என்றது* (ஆதியாகமம் 3:4-5). இந்த வாசகத்திற்குத் தன்னையே திருஷ்டாந்தமாக வலியுறுத்தினான். இதைச் செயல்படுத்துவது எப்படி என்றால் தேவனை ஒரு பொல்லாத கொடுங்கோலராக அதாவது ஆதாமையும் ஏவாளையும் படைத்த பின்பு அவர்களை அவர்களது தகுதிக்குக் கீழான நிலையில் வைத்திருந்ததாகக் காட்டினான். சாத்தான், தங்களுடைய செயல் திறனினால் அவர்கள் இன்னும் முன்னுக்கு வரமுடியும் என்பதைத் தேவன் அறிந்திருந்தார் என்று சுட்டிக்காட்டுகிறான். அவர் அவர்களை எந்தக் காரணமுமில்லாமல் தனக்குக் கீழ்ப்பட்டவர்களாகவே ஒரு எல்லைக்குள் வைத்திருந்தார். ஆகவே முதலாவது தேவனது வார்த்தைக்குரிய மேன்மையைக் குலைத்தான். பின்பு தேவனுடைய ஆளுமைத்தன்மையையும் குறைத்தான். அவன் அவர்களுக்கு, அவர்களை மிகவும் நேசித்த இரக்கமுள்ள சிருஷ்டி கர்த்தாவைப் பற்றி ஒரு பொய்யான தோற்றத்தை உண்டாக்கினான். அவன் தேவனை ஒரு கொடுங்கோல் ஆட்சியாளராகச் சித்தரித்து, தேவனுடைய வார்த்தையையும் அவருடைய பண்பினையும் குறைத்துப் பேசலானான்.

மூன்றாவது நிலையாக ஆதாம் ஏவாளுக்கு அவனுடைய விழுதலுக்குக் காரணமாயிருந்த அதே ஆயுதத்தைக் கடைப்பிடித்தான். அதாவது தேவனுக்குச் சரிசமமாகுவதன் மேன்மையை அவர்களுக்கு முன்பாக வைத்தான். அவன் *"நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்*

படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்" (ஆதியாகமம்3:5) என்று கூறினான். இதன் விளைவாக அவன் அவர்களிடத்தில் "நீங்கள் இனிமேல் தேவனைச் சார்ந்து இருக்கவேண்டிய அவசியமில்லை. தேவனுக்குச் சரிசமமான போதுமான அறிவு உங்களுக்குக் கிடைக்கும்" என்றான். இது அவனுக்கு ஏற்பட்ட சோதனையில் அவன் எவ்வாறு கீழே விழுந்தான் என்பதைத் துல்லியமாக காட்டுகிறது. *"நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்"* (ஏசாயா 14:14) என்று கூறினான். இப்பொழுது அவன் ஆதாம் ஏவாளிடத்திலே "நீங்கள் தேவனைப் போலாவீர்கள். தேவனுக்கு அடிமைகள் போலவும் அவரையே சார்ந்தும் வாழ்கிற நிலை உங்களுக்குத் தகுதியானதல்ல. உங்களுக்கு மேலான வாழ்வு கிடைக்கும். உங்கள் சிருஷ்டி கர்த்தாவுக்கு அடிமைபோல அவரைச் சார்ந்திருப்பதை விட்டுவிட்டு உங்களுடைய அறிவினால் நீங்கள் மேலும் மேலும் உயர்ந்து இந்நிலையிலிருந்து சுதந்தரமாக வெளியே வரலாம்" என்று கூறினான்.

ஆதாமுடைய பாவமும் சாத்தானுடைய தவறைக் கார்பன் தாளில் வைத்து பிரதி எடுத்தது போலவே உள்ளது என்பது மிகவும் தெளிவாக உள்ளது. சாத்தானும் ஆதாமுமாகிய இருவரும் சமமான நிலையிலே படைக்கப்பட்டார்கள்- ஆசீர்வாதமானவர்களாகவும், அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாகவும் தேவனால் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் இருவருமே தற்பெருமையினால் தேவனுக்கு சரிசமமான நிலையை அடைய விரும்பினார்கள். மேன்மை அடைய நினைத்தார்கள் ஆனால் விழுந்து போனார்கள். *"தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்"* (லூக்கா14:11) என்பதை நினைவுகூற வேண்டும்.

இன்னும் கீழே

ஆதாமின் வீழ்ச்சிக்குத் தேவனது மறுமொழி யாது? மனிதனின் படைப்பில் தேவன் மண்ணின் தளம் வரை

குனிந்தவர், படைப்பிலிருந்து மீட்பு வரைத் தம்மைத் தொடர்ந்து அதிகமாகத் தாழ்த்தினார். பெருமைக்குத் தேவன் கூறும் மறுமொழி தாழ்மை. எந்த அளவிற்குத் தேவன் பெருமையைச் சந்தித்தாரோ அந்த அளவிற்குத் தம்மைத் தாழ்த்தினார்.

"பெருமைக்குத் தேவனுடைய பதில் தாழ்மையே."

மனிதன் விழுந்து போனான். அவன் எதிர்த்து நின்றதால் விரோதம் பெருகியது. தேவன் அவனை விட்டுவிடவில்லை. தேவனுக்கு அதற்காக நன்றி செலுத்த வேண்டும். மனித அவதாரமாக வந்த இயேசுகிறிஸ்துவைத் தேவன் மிகவும் தாழ்ந்த நிலைக்குத் தாழ்த்தினார். வீழ்ந்துபோன மனிதனுடன் தன்னை இனம்கண்டுகொண்டு அவனுடைய குற்ற உணர்வை நீக்கினார். இவை அனைத்திற்கும் சிகரமாக வீழ்ந்துபோய் மீட்கப்பட்ட மனிதர்களை இவ்வுலகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்தார். இதன் மூலம் உயர்விற்கு வழி தாழ்மையே எனக் காட்டினார்.

நாம் சில வேத வசனங்கள் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். முதலாவதாக எப்படி கிறிஸ்து மனுக்குலத்திற்குத் தன்னை அறிமுகப்படுத்தினார்? அதன் வஞ்சகத்தை எப்படி நீக்கினார் என்று காணலாம்.

ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.
(எபிரெயர் 2:14-15)

ஆரம்பத்தில் ஏற்கெனவே நான் குறிப்பிட்டபடி ஆதாம் தேவனுக்கு விரோதமாய்ச் செயல்பட்டபோது அரசனாக

வேண்டியவன் ஒரு அடிமையாக மாறினான். அதுவும் சாத்தானுக்கு அடிமையாகவும், சாவுக்கு அடிமையாகவும், ஊழலுக்கு அடிமையாகவும் மாறினான். அதன் பின்பு அவன் சுதந்தரமாக இருக்கவில்லை. ஆனால் அவனை அந்த அடிமைத்தனத்திலிருந்து மீட்கும்படியாக இயேசு, ஆதாமின் சுபாவத்தை மனித ரூபமெடுத்து தன்மேல் ஏற்றுக்கொண்டார். இந்த மனித்தன்மையை ஏற்றுக்கொள்ளும்படியாக உன்னையும் என்னையும் போலவே அவர் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் வந்தார். இதனுடைய முக்கியத்துவம் யாதெனில் அவருடைய மரணமேயாகும். சாவின்மேலும் சாத்தானின்மேலும் அதிகாரம் உடையவராகிய அவர் மரணபயத்திலும் அடிமைத்தனத்திலும் மூழ்கியிருந்த நம்மை விடுவித்தார்.

இயேசு தரித்துக்கொண்டது என்னவென்றால் முழுமையான மனிதத்துவமாகும். விழுந்துபோன படைப்புகளாகிய எல்லா மனிதர்களையும் மீட்கும்படியாக இயேசு மண்ணுருவானார். இதுவும் வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

> ***“நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.”***
>
> *(1 பேதுரு 2:24)*

சிலுவையிலே இயேசு நம்முடைய பாவங்களையும் நம்முடைய அக்கிரமங்களையும் ஏற்றுக்கொண்டார். மனித குலத்தின் பாவங்களையும் அக்கிரமங்களையும் அவர் தாமே சுமந்தார். நம்முடைய பாவங்களையும் தண்டனையையும் அவர் ஏற்றுக்கொண்டார். நம்முடைய காயங்கள் அவருடைய காயங்களாயின. நம்முடைய மரணத்திற்குப் பதிலாக அவர் மரணமடைந்தார். நம்முடைய கீழ்ப்படியாமைக்குப் பதிலாக நமது பிரதிநிதியாக அவர் செயல்பட்டார்.

விழுந்துபோன ஆதாமுக்காக அவர் சிலுவையில்

தொங்கினார். அவர் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார். நம்மை இரட்சிப்பதற்காக அவர் தன்னையே ஏகபலியாக ஒப்புக்கொடுத்தார்.

> ***“ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்க்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்”*** *(1 பேதுரு 3:18)*

என்று இந்த எளிமையான வாசகம் கூறுகிறது.

இதுவே முழுமையான ஏற்பு ஆகும். போராட்டம் செய்யும் அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் அவர் தேவனுக்கு விரோதமாய்ச் செயல்புரிபவர்களை ஏற்றுக்கொண்டார். நம்முடைய மீறுதல்களுக்காக அவர் மரித்து நம்மை மரணத்திலிருந்து மீட்டெடுத்து தேவனோடு ஒப்புரவாக்கினார்.

தேவன் மனிதனோடு தன்னை இணைத்து இனம் கண்டுகொண்டதற்கு அப்பாற் பார்க்கும்பொழுது நாம் அவருடன் மனத்திரும்புதல் மூலமும் விசுவாசத்தின் மூலமும் அவருடன் நம்மை இணைத்து இனம் கண்டுகொள்ள முடியும். அவருடைய மரணத்தில் மட்டுமல்ல அவர் மகிமைப்படுத்தப்பட்டதிலும் பங்குகொள்ளமுடியும். இதுதான் அவருடன் இணைந்து கொள்வதில் உள்ள இரகசியம். கிறிஸ்து நம்முடன் இருக்கிறார். விசுவாசத்தின் மூலம் நாம் கிறிஸ்துவுடன் இணையக்கூடும்.

> ***“தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்து தம்முடைய மிகுந்த அன்பினாலே,***
>
> ***அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.***
>
> ***கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில்***

விளங்கச்செய்வதற்காக,

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்.” *(எபேசியர் 2:4-7)*

நம்முடைய இரட்சிப்பு நாணயத்தின் மறுபக்கமாகும். அதாவது அவருடன் இணைத்துக்கொள்ளுதலில் எதிரான பக்கமாகும். முதலாவது விழுந்துபோன மனித குலமாகிய நம்மோடு தம்மைத்தாமே இணைத்துக் கொண்டார். நம்முடைய ஸ்தானத்தை அவர் எடுத்துக்கொண்டார். நமது பாவத்திற்குப் பரிகாரம் செய்தார். நாம் மரிப்பதற்குப் பதிலாக அவர் மரித்தார். நம்முடைய தவறுகளை அவர் ஏற்றுக்கொண்டார். இந்த உண்மைகளை அறிந்தபின்பு நாமும் அவர் மேல் வைக்கும் விசுவாசத்தினால் அவரோடு ஐக்கியமாகிறோம். அவர் மரணத்திற்குப் பின் வருகின்ற எல்லாவற்றிலும் நாம் அவரோடு இணைந்து கொள்ளுகிறோம். இந்த இயேசுவோடு இணைதலைப்பற்றி எபேசியர் 2ஆம் அதிகாரத்தில் மூன்று பெரிய படிகள் உள்ளன. நம்மைக் கிறிஸ்துவுக்குள் ஜீவனுள்ளவர்களாய்ப் படைத்தார். தேவன் நம்மை எழுப்பினார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும் நமக்குப் பங்களிக்கிறார். ஆனால், அது அத்துடன் முடிந்துபோவதில்லை. பரலோக இராஜ்யத்தில் தேவன் நம்மை அவரோடு உட்காரவைக்கிறார். கிறிஸ்து ஒரு சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். தேவனும் நம்மோடு உட்கார்ந்திருக்கிறார். நம்மையும் கிறிஸ்துவோடு உட்காரும்படிச் செய்கிறார். இயேசுவோடு நாம் இணைவதில் மூன்று மேலான படிகள் காணப்படுவதை நாம் கவனிக்கவேண்டும்: அதாவது நம்மை அவரோடு வாழ வைக்கிறார், அவரைப்போல உயிரோடெழச் செய்கிறார் மற்றும் அவரோடு கூட உட்காரும்படிச் செய்கிறார். இது தேவனின் மாறாத கொள்கை: மேலே செல்லுவதற்கு வழி கீழேதான் உள்ளது. நாம் தாழ்விலிருந்து உயர்வுக்குப் போக வேண்டும்.

> தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான், தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்.

தேவன் தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார் என்ற நியதியை, வீழ்ந்து போன மனுக்குலம் எழுச்சியடையச் செய்ததின் மூலம் உலகமனைத்திற்கும் இச்சட்டத்தை தெளிவாக்கினார். மீட்பின் பின்னணியில் உள்ள இவ்வுண்மையை அறியாமல் விட்டுவிட வேண்டாம். இது சரித்திர சம்பவம் மட்டுமன்று. இது சர்வலோகத்தைத் தழுவி நிற்கும் தேவசட்டம்: தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். தன்னை உயர்த்துகிறவர்கள் தாழ்த்தப்படுவார்கள். (மீண்டும் லூக்கா 14:11ஐப்பார்க்கவும்)

ஒரு தியாகபலி

இயேசு தன்னைத் தியாக பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தது மனிதவர்க்கத்தின் ஒவ்வொரு தேவைக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட அடிப்படையான ஈவு ஆகும். தேவன் வித்தியாசமான செயல்களை வித்தியாசமான நேரங்களில் செய்வதற்குப் பதிலாக, பின் வருமாறு செய்தார் அதாவது *“ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்”* (எபிரெயர் 10:14) என்று வேதம் சொல்லுகிறது. எபிரெய ஆக்கியோன் இயேசு தன்னை ஏக பலியாக ஒப்புக்கொடுத்த பின்பு *“இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து,”* என்று விளக்குகிறார். (வசனம் 12) ஏன் வலது பாரிசத்தில் உட்கார வேண்டும்? ஏனென்றால் அவர் அதை திரும்பவும் செய்யப்போகிறதில்லை.

சிலுவையின் மூலமாக இயேசு சாத்தானுக்கும் அவன் இராஜ்யத்திற்கும் ஒரு முழுமையான, நிலையான, மாற்ற முடியாத தோல்வியை ஏற்படுத்தினார். அவர் அதே பணியை மீண்டும் செய்யப்போவதில்லை. சாத்தான் ஏற்கெனவே தோற்கடிக்கப்பட்டவன். நீங்களும் நானும் சாத்தானைத் தோற்கடிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், இயேசு

ஏற்கனவே சாத்தானைத் தோற்கடித்து ஜெயித்துப் பெற்ற வெற்றியை நாமும் சுதந்தரித்து அதைத் தொடர்ந்து கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

“ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதி யுள்ளவர்களாக்கினவரும்,” *(கொலோசெயர் 1:12)*

நம்முடைய சுதந்தரம் ஒளியில் உள்ளது. அதிலே சிறிதளவாகிலும் இருள் இல்லை. இதை அவர் எவ்வாறு செய்து முடித்தார்?

“இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்.

(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.” *(வசனம் 13,14)*

ஆகவே, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நமக்கு மீட்பு உண்டாயிருக்கிறது. நாம் இருளின் அதிகாரத்திலிருந்து மீட்கப்பட்டு மாற்றப்பட்டோம். நாம் தேவ குமாரனின் அன்பான இராஜ்யத்திற்குள்ளே எடுத்துச் செல்லப்பட்டோம்.

ஆட்சி அல்லது வல்லமை என்பதற்கான பொதுவான கிரேக்கச் சொல் அதிகாரம் என்பதே. எனவே ஆட்சி அல்லது அதிகாரம் ஆகிய இதைப்பற்றிப் பேசும்பொழுது சாத்தானுக்கு அதிகாரம் உண்டு என்பதை நாம் மிக முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவனுக்கு ஏன் அதிகாரம் உள்ளது? ஏனென்றால் அவன் தேவனுக்கு எதிராக எதிர்க்கிறவர்களை ஆளுகிறவனாக இருக்கிறான். யார் தேவனை எதிர்த்துப் போரிடுகிறார்களோ அவர்கள் தானாகவே சாத்தானின் அதிகாரத்தின் கீழ் வந்துவிடுகிறார்கள். அவன் இருளின் இராஜ்யத்தை உடையவனாக இருக்கிறான்.

“அக்கிரமங்களினாலும் பாவத்தினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். . .”

(எபேசியர் 2:1)

இது சரீரத்திற்குரிய மரணமல்ல! இது ஆவிக்குரிய மரணம், இது நம் எல்லாருக்கும் பொருந்தும். இப்படியாகத்தான் நாம் எல்லோரும் இருக்கிறோம். நாம் எல்லோரும் தேவனுக்கு மரித்தவர்கள் ஏனென்றால் நாம் சோதனையிலும் பாவத்திலுமே வாழ்கிறோம்.

“அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்ற படியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள்.”

(வசனம் 2)

வானமண்டலத்தை ஆளுகை செய்யும் அதிகாரம் சாத்தானுக்கு உண்டு. வான மண்டலம் என்பதற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் உண்டு. அவற்றில் ஒன்று ஆங்கிலத்தில் ஈதர் என்னும் வார்த்தையாகும். மற்றொரு ஆங்கில வார்த்தை ஆகாய மண்டலம் என்பதாகும். கிரேக்கத்தில் உள்ள வித்தியாசம் கீழே தரப்பட்டுள்ளது. ஈதர் என்பது மேலே உள்ள அரிதான வளிமண்டலம். ஆகாய மண்டலம் என்பது கீழே உள்ள வளிமண்டலம். பூமியை ஒட்டியுள்ள பரப்பாகும். இதிலே உபயோகித்துள்ள வார்த்தையின் இரண்டாவது அர்த்தம் என்னவென்றால் பூமியின் தளத்திலே ஆளுகை செய்பவனாக ஆளுகையின் அதிகாரியாக சாத்தான் உள்ளான். இது பூமியை ஒட்டியுள்ள பரப்பாகும். எபேசியரில் அவனைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது.

“. . . கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற. . . ” (வசனம் 2)

அந்த மனிதர்களிடத்தில் அவன் ஏன் கிரியை செய்கிறான்? ஏனென்றால் அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள்.

நமக்கு இரண்டே தெரிந்து கொள்ளுதல் உண்டு. ஒன்று நாம் சாத்தானின் எல்லைக்குள் இருக்க வேண்டும். அல்லது தேவனின் எல்லைக்குள் இருக்க வேண்டும். அங்கே மூன்றாவது கருத்துக்கே இடமில்லை. நம்மைத் தேவனால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளராகிய இயேசுவிடம் அர்ப்பணித்துக்கொண்டால் நாம் தேவனுடைய இராஜ்யத்தில் இருப்போம். ஆனால், இயேசுவை நாம் தேவனால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளராக ஏற்றுக்கொள்ளாமல், அவரைத் தள்ளிவிட்டால் நாம் சாத்தானின் இராஜ்யத்தில் இருப்போம். ஏனென்றால் நாம் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாகிறோம். தேவனுக்கு எதிர்த்து நிற்கும் பிள்ளைகள் யாவரையும் சாத்தானே முழுமையாக ஆட்சி செய்கிறான். அவர்கள் பல பாஷை பேசுபவர்களாக இருந்தாலும், பயனில்லாமல் இருக்கிறது. எதிர்ப்பாளர் அனைவரையும் சாத்தானே ஆட்சி செய்கிறான்.

"அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின் படியே நடந்து நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து . . . "

(வசனம் 3)

நாம் எல்லாரும் இதைச் செய்தோம். நாம் எல்லாருமே! நம்முடைய குற்றங்கள் மாம்சத்திற்குரியவை மட்டுமல்ல. நம்முடைய மனதும்கூட தேவனை விட்டுப் பிரிந்துபோகிறது. வேதம் சொல்லுகிறது இந்த ஜென்ம சுபாவமானது அல்லது மாம்ச சிந்தையானது தேவனுக்கு விரோதமான பகை. (ரோமர்8:7ஐப்பார்க்கவும்) உன்னுடைய மண்டை ஓட்டிற்குள்ளாகவே இந்த மாம்ச சிந்தை இருப்பதனால் அதுவே தேவனுக்கு ஒரு விரோதியாகிறது. எபேசியர் 2ஆம் அதிகாரத்தில் தொடர்ந்து வாசிப்பது

"சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்." *(வசனம்3)*

இது ஒரு மிகவும் முக்கியமான வாசகமாகும். நாம்

கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாகவே பிறந்தோம். இது மனிதவர்க்கத்தின் அனுபவப்பூர்வமான ஒரு உண்மையாகும். எத்தனைப் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை குறும்புக்கார பிள்ளைகளாக்க பயிற்சி கொடுக்க வேண்டியதிருக்கிறது? ஒருவருக்கும் இல்லை! ஏனென்றால் ஆதாமின் பின் சந்ததியார் ஒவ்வொருவரிலும் எதிர்க்கும் மனப்பான்மை இயற்கையாகவே உள்ளது. ஆதாம் பாவம் செய்யும் வரைக்கும் அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. இதன் விளைவாக ஆதாமின் பின்சந்ததியார் எதிர்க்கும் ஆற்றலை இயற்கையாகவே தன்னுள் கொண்டிருந்தனர். இந்த இயல்பு நம்மைச் சாத்தானின் அதிகாரத்திற்குள் கொண்டுவருகிறது.

சாத்தானிடத்திலிருந்து தப்பிக்கும் வழி

தேவன், சாத்தானின் இராஜ்யத்திலிருந்து தேவனுடைய இராஜ்யத்திற்குள் வருவதற்கு வழியைக் காட்டுகிறார். இது எனக்கு மிகவும் தெளிவானது. சில வருடங்களுக்கு முன்பாக நான் ஜாம்பியா தேசத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது நான் அந்தத் தேசத்தின் மேற்குப் பகுதியில் நெடுந்தொலைவில் இருந்தேன். அதாவது ஜாம்பெசி ஆற்றின் எல்லையின் வலது பகுதியிலிருந்தேன். இதுவே ஜாம்பியாவையும் (Zane) ஜேனையும் பிரிக்கும் இடமாகும். இங்கு எனக்கு நானூறு அல்லது ஐந்நூறு ஆப்பிரிக்க அங்கத்தினர்களை உடைய சபை ஒன்றுண்டு. நான் அவர்களுக்கு ஆச்சரியமான ஒரு உண்மையைச் சொல்ல முயற்சித்துக் கொண்டிருந்தேன். தேவன் நம்மைச் சாத்தானின் இராஜ்யத்திலிருந்து தேவனின் இராஜ்யத்திற்குள்ளாக்க வழி வகுத்துள்ளார் என்பதே அவ்வுண்மை. நான் அவர்களிடத்தில் இந்த ஜாம்பெசியின் நதியின் கிழக்குப்பகுதியில் நாம்

> "நாம் பாலத்திலேயே தேங்கி நிற்க தேவன் விரும்பவில்லை. வேறொரு அரசில் பிரவேசித்து இயேசுவுடன் இப்பொழுதே ஆட்சி செய்ய விரும்புகிறார்."

இருளின் இராஜ்யத்தில் இருக்கிறோம். ஆனால் இந்த ஆற்றின் மறுபகுதியிலே ஒளியின் இராஜ்யம் உள்ளது. நாம் இந்த இருளின் இராஜ்யத்தை விட்டுக் கடந்து ஒளியின் இராஜ்யத்திற்குள் செல்வதற்கு ஒரு பாலம் தேவைப்படுகிறது. தேவன் நமக்கு ஒரு பாலத்தைக் கொடுத்திருக்கிறார் என்று சொன்னேன். அங்கே ஒரே ஒரு பாலம்தான் உள்ளது. அதுதான் இயேசு கிறிஸ்துவின் சிலுவை. இந்தப் பாலத்தை உபயோகித்தால் நீங்கள் இருளின் இராஜ்யத்தை விட்டு வெளியே வந்து தேவகுமாரனின் அன்பான இராஜ்யத்திற்குள் கடந்து வரலாம்.

தேவன் நம்மை அந்தப் பாலத்தில் சும்மா நின்று கொண்டிருப்பதை விரும்பவில்லை. அவர் நம்மை மற்றொரு இராஜ்யத்திற்குள்ளே கொண்டுவந்து இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கி இயேசுவோடு ஆளுகை செய்வதையே விரும்புகிறார். இதுவே நாம் சேரவேண்டிய இடமாகும். இங்கே உள்ள பிரச்சனை என்னவென்றால், கிறிஸ்தவ சபைகளிலே இலட்சோப இலட்ச மக்கள் இருளின் இராஜ்யத்திலிருந்து வெளியே வந்துவிடுகிறார்கள். ஆனால் அந்தப் பாலத்திலேயே தொங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் தேவனுடைய இராஜ்யத்திற்குள் நகருவதில்லை. அநேக மக்கள் நான் இரட்சிக்கப்பட்டேன்! என்று சொல்லுகிறார்கள். இரட்சிக்கப்படுவது ஆச்சரியத்திற்குரியதாகும். ஆனால் அதுவே முடிவாகாது. இந்தப் பாலமானது ஒரு இராஜ்யத்திலிருந்து மற்றொரு இராஜ்யத்திற்குச் செல்லும் ஒரு வழியாகும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்களாகிய நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார் என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. இங்கேயே இப்பொழுதே செய்கிறார் என்று கூறுகிறது.

கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே.

(ரோமர் 5:17)

உங்களிடத்தில் நேரடியாக ஒரு கேள்வியைக் கேட்கின்றேன். இப்பொழுது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? நீங்கள் பாலத்தின் மேலே தொங்கிக்கொண்டிருக்கிறீர்களா? அல்லது நீங்கள் இயேசுவோடு ஆளுகை செய்துகொண்டு வாழ்கிறீர்களா? ஒவ்வொருவரும் மறுமை வாழ்வில் இவ்வாறு ஆளுகை செய்வோம் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அது ஆச்சரியமானதுதான். இப்பொழுது தேவன் எப்படி நம்மை நினைக்கிறார் என்பது முக்கியமல்ல. இந்த வாழ்க்கையில் இனி நாம் எவ்வாறு இருக்கிறோம் என்பதே முக்கியமாகும்.

இயேசு கிறிஸ்து எதை நிறைவேற்றினார்?

எப்படி நிறைவேற்றினார்? என்பதை நாம் கவனிப்பது மிகவும் அவசியமாகிறது.

துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்.

(கொலோசெயர் 2:15)

அவர் சிலுவையின் மூலமாக எல்லாத் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார்? அவர்களை என்ற வார்த்தை எவர்களை பிரதிநிதியாக்குகிறது. அது சரிதான், அது சாத்தானையும் அவனுடைய அன்பிற்குரியவர்களையும் குறிக்கிறது. *"ஆட்சியாளர்களையும் அதிகாரிகளையுமே"* இயேசு சிலுவையில் உரிந்து கொண்டார் என்று மற்றொரு மொழிபெயர்ப்பானது அடையாளங் காட்டுகிறது.

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும்,

(இதே வசனத்தைக் கொலோசேயர் 2:15இல் காணலாம்)

இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின்

சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு."

(எபேசியர் 6:12)

எனக்கு எனது பத்தாவது வயதிலிருந்து கிரேக்க மொழியைக் கற்றுக்கொள்வதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. (உண்மையாக இது எப்பொழுதும் கிடைக்கும் வாய்ப்பல்ல என்று என்னை நம்ப வேண்டும்). ஆனால் நான் பல்கலைக்கழகம் வரையிலான நிலையில் கிரேக்கத்தைக் கற்றுக்கொடுக்க தகுதியுடையவனாக இருந்தேன். அதற்காக நான் எப்பொழுதுமே சரியாக செய்வேன் என்று அர்த்தமல்ல. ஆனால் நான் பெற்றுக்கொண்ட தகவல்களினால் நான் தகுதியைப் பெற்றுள்ளேன் என்பது எனது எண்ணமாகும். உண்மையாக ஒருவரும் கிரேக்க மொழியைப் பற்றிய திறமைசாலிகளல்லர். ஏனென்றால் வரலாற்றில் அது ஒரு குழப்பத்தை உண்டாக்கும் அல்லது சிக்கலை உருவாக்கும் மொழியாகவே எப்பொழுதும் உள்ளது. ஆனால் நான் Prince Version ஐ உங்களுக்கு முன் வைக்கிறேன். அது மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் இடையில் உள்ள போராட்டத்தைப்பற்றிக் கூறுகிறது. நம்முடைய மல்யுத்தம் சரீரத்தைப் பெற்றுள்ள மனிதர்களுக்கு விரோதமானதல்ல.

> "சாத்தான் ஆராதனையை ஏற்றுக்கொள்வானானால் அவன் தேவனோடு சமம் என்று உரிமைகோருதலை உறுதிப்படுத்தும்."

நாம் மனிதர்களோடு போராடுவதல்ல. நம்முடைய மல்யுத்தமானது மிகவும் அதிகாரமுள்ள உயர்நிலையில் அமைக்கப்பட்ட இராஜ்யத்துடன் நடைபெறுகிறது. அவைகளுக்கு ஆளுநர்கள், உப ஆளுநர்கள், மற்றும் உப உப ஆளுநர்கள் உண்டு. ஒவ்வொரு ஆளுநரும் சாத்தானின் ஆளுகைக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு பொறுப்பாளியாவர். சாத்தான் இந்த முழு உலகத்தையும் பகுதிபகுதிகளாகப் பிரித்து இந்த ஆளுநர்களின் மூலமாக அவற்றின் மேல் அதிகாரம் செலுத்தும்படி நாடுகிறான். பிரின்ஸ் மொழிபெயர்ப்பில் எபேசியர் 6:12இல் *"பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு"* என்பதைக் காண்கிறோம்.

நான் இங்கே தைரியமாக *'துரைத்தனம்'* என்ற வார்த்தையை உபயோகிக்கிறேன். ஏனென்றால் இந்த கிரேக்க வார்த்தை மிகவும் ஆணித்தரமாக உள்ளது. மேலும் அதிகாரம் செலுத்தும் குணாதிசயமானது சாத்தானின் செயலாகும். தேவன் ஒருபோதும் இவ்வாறு அதிகாரம் செலுத்துபவர் அல்ல. ஆகவே நீ அதிகாரத்திற்கு உட்பட்டாயானால் அது நீ தேவனோடு செயல்படவில்லை என்பதை உறுதியாக்கும். நாம் சந்திக்கும் இந்த அதிகாரங்களைத்தான் *"பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு"* என்று நான் ஆதாரத்தோடு கூறுகிறேன். சாத்தானின் குறிக்கோளானது, ஸ்திரமாக, விடாமல் பின் தொடர்ந்து வருவது ஆகும். இவ்வாறு இப்பிரபஞ்சத்தின் அதிபதியாக அவன் வருகிறான்.

இதுவே கடைசிகாலம் என்பதை நாம் ஒருவகையில் தெளிவாகப் பார்க்கிறோம். அந்தக்கடைசி காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனமானது இந்த முடிவுகாலத்தில் தான் சாத்தான் மிகவும் குறுகிய காலத்திற்குத் தற்காலிகமாக வெற்றி பெற்றவனாக விளங்குவான் என்று நான் புரிந்து கொள்கிறேன். இதை அவன் குறிப்பிட்ட ஒரு மனிதனை எழுப்பி அவன் மூலமாக செயல்படுத்துவான், அவனே அந்திக்கிறிஸ்து என்பவனாவான். அவன் சாத்தானால் ஆளப்படுகிற ஒரு மனிதனாக இருப்பான். சாத்தான் இவ்வுலகத்தின் பெரும்பகுதியை வசப்படுத்துவான்.(யாருடைய பெயர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்படவில்லையோ அவர்களே ஆகும்) இவர்கள் அந்திக் கிறிஸ்துவை வணங்குவார்கள். அந்திக் கிறிஸ்துவை வணங்குபவர்கள் சாத்தானையே வணங்குவோராவர். ஏனென்றால் அவன் சாத்தானின் தூண்டுதலினால் செயல்படுபவனாவான்.

எல்லாவற்றிற்கும் மேலானவனாக சாத்தான் தான் வணங்கப்பட வேண்டும் என்று ஏன் விரும்புகிறான்? தேவனுக்கு நிகராகத் தான் வரவேண்டும் என்பதே அவனுடைய ஆவல். அதுவே அவனுடைய விழுதலுக்கும் காரணமாயிருந்தது. சாத்தான் தான் விழுவதற்கு முன்பு இருந்த நிலையில் தற்பொழுது இல்லை. ஆனால் இன்னும் அவன் ஒரு வழியில் பிறர் தன்னை வணங்குதல் மூலம் தேவனுக்கு சரிசமமாக உரிமை பாராட்டுகிறான். ஆனால் இந்த உரிமை தேவனுக்கு மட்டுமே உரியதாகும். ஆனால் சாத்தான் வணங்கப்பட்டால் அது அவன் தேவனுக்குச் சமமானவன் என்பதை உறுதிப்படுத்தும். இராஜ்யங்களுடைய போராட்டங்களைக் குறித்து நாம் உண்மையாக அறியும் போது சாத்தானுடைய பிரதான விருப்பம் அவன் மற்றவர்களால் ஆராதிக்கப்பட வேண்டும் என்பதே. ஆராதிப்பது என்பது நமக்கு மேல் வல்லமையுள்ள ஒருவரைத் தான் என்று முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டும். சாத்தானை வணங்கிய மக்களை நான் எதிர்கொண்டு திருத்த முற்பட்டிருக்கிறேன், என்னை நம்புங்கள்! அவர்களை இதிலிருந்து விடுவிப்பது ஒரு மிகப்பெரிய யுத்தமாகும். ஏனெனில் சாத்தானுக்கு இவர்கள் மேல் உரிமையான அதிகாரம் உண்டென்று அவன் உணருகிறான்.

எபேசியர் 6:12ஆம் வசனத்தில் சொல்லப்பட்டது போல் சாத்தானின் இராஜ்யத்திற்கு இறுதியான விளக்கம். *“வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு”* என்பதாகும். சாத்தானுடைய தலைமையிடம் நரகத்தில் அல்ல. அவைகள் வானுலகில் உள்ளது. சபையிலுள்ள சில பாரம்பரிய மொழி வேதாகமத்தில் இப்பொருள் பற்றிக் கூறப்பட்டவையோடு ஒத்துப்போவதில்லை. சாத்தான் நரகத்தில்தான் இருக்கிறான் என்று சொல்லுவோர்க்கு அவன் அங்கே இருந்தால் நலமாயிருக்கும். ஆனால், அவன் அங்கே இல்லை என பதில் உரைப்பேன். சாத்தான் எல்லா இடங்களிலும் இருக்கிறான். இந்த எச்சரிக்கையைத்தான் பேதுரு எழுதினார்.

“பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்.” (1பேதுரு 5:8)

இயேசு கிறிஸ்து சாத்தானின் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துபோட்டார் என்ற உண்மையை நாம் இப்பொழுது சோதித்துப் பார்க்கலாம். அவர் அவனுடைய எல்லா ஆயுதங்களையும் எடுத்துப் போட்டார். கிரேக்க மொழி அதிக திட்டவட்டமாக கூறுகிறது. அவர் அவர்களுக்கு ஒன்றையும் மீதியாக வைக்கவில்லை. அவர் இதை எப்படிச் செய்தார்?

தடுப்புச் சுவரைத் தகர்த்தல்

மனுக்குலத்திற்கு விரோதமாக சாத்தான் பயன்படுத்தும் முதல் ஆயுதம் குற்ற உணர்வை அவர்கள் உள்ளத்தில் தோற்றுவிப்பதே என்பதை நன்கு புரிந்து கொள்தல் வேண்டும். இயேசு இவ்வித குற்ற உணர்விலிருந்த மனிதனுக்கு விடுதலையளித்திருக்கிறார். நமக்குத் தெரிந்த சத்தியத்தை உற்று நோக்குவோம். ஆதாமைப் படைப்பதற்கு முன்பாகவே சாத்தானைத் தேவன் மேற்கொண்டுள்ளார். ஆதாமைப் படைத்தபொழுது ஏற்கெனவே சாத்தான் வீழ்ந்து போன தேவ தூதன்; தேவனுக்கு விரோதி. தேவனுடைய படைப்புகளுக்கெல்லாம் விரோதி சிறப்பாக மனித விரோதி. தான் தெரிந்து கொண்ட மேட்டிமையின் பாதையிலேயே மனிதனையும் தேவனுக்கு விரோதமாக திசை திருப்பிவிட்டுள்ளான். நீங்கள் தேவனைப் போலாகலாம் என்று அவன் கூறியது ஆரம்பத்தில் அவன் கொண்டிருந்த எண்ணம்.

தேவனுடைய உணர்ச்சியைப் பற்றியும் எண்ணங்களைப் பற்றியும் சாத்தான் அதிகமாக அறிவான் என்று நாம் நிதானிக்கலாம். மேலும் அவன், அவர் மனிதவர்க்கத்தின் மேல் கொண்டுள்ள அன்பைப் பற்றியும் அறிவான். யோபுவின் புத்தகத்தில், நாம் தேவ சமூகத்தில் தேவ தூதர்கள் வந்து

தோன்றும் போது சாத்தானும் அவர்களின் நடுவில் வந்திருந்தான். (யோபு 1:6 ஆம் வசனத்தைப் பார்க்கவும்) அந்தச் சமயத்தில், தேவப் பிரசன்னத்தில் அவன் இன்னும் சில காரியங்களையும் வைத்திருந்தான். அதற்குப் பின்பு சாத்தானை சாத்தான் என்று சரியாகக் கண்டுபிடித்ததே தேவன்தான் என்று இந்தப் பகுதி சுட்டிக்காட்டுகின்றது. ஏனென்றால் அவன் ஒளியின் தூதனாக வேஷந்தரித்திருந்தான்.

> “இயேசுவினுடைய தியாக பலியின் விளைவாக தேவன் தன்னுடைய நீதியை விட்டுக் கொடுக்காமலே நம்மை மன்னிக்க முடியும்.”

சாத்தானுக்கும் தேவனுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலானது இப்படித்தான் நடந்திருக்கும் என்று நான் கற்பனை செய்கிறேன்.

சாத்தான் தேவனிடத்தில், “நீர் நீதியுள்ள தேவன் நீர் நியாயம் உள்ள தேவன் நானோ ஒரு எதிரி, இதை நானும் அறிவேன். அதைப்பற்றி எனக்குச் சிறிதளவும் சந்தேகமே இல்லை. அந்த அக்கினிக் குழம்பைப் (குளத்தை)பாருங்கள். விரும்பப்படாத புகை அதிலிருந்து எழும்பி வருவதைப் பாருங்கள். அங்கிருந்துதான் நான் தலையெடுத்துள்ளேன் என்பதை நானறிவேன். அது எனக்காவும் என்னைச் சார்ந்த தூதர்களுக்காகவுமே உருவாக்கப்பட்டது என்பதையும் அறிவேன். ஆனாலும் தேவனே நான் உம்மிடத்தில் ஒரே ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நீர் அன்பு கூரும் ஆண்களையும் பெண்களையும் பாரும். அவர்களும் என்னைப் போல பாவமுடையவர்கள்தான். அவர்கள் கூட எதிரிகள்தான். ஆகவே என்னையும் என்னைச் சார்ந்த தூதர்களையும் நீர் அக்கினிக் கடலில் தள்ளும்போது அவர்களையும் கூட அதே அக்கினிக் கடலில் தள்ளவேண்டும். தேவனே! இதை ஞாபகம் வைத்துக்கொள்ளும். நீர் நீதியுள்ளவர் என்பதற்கு இச்செயல் அவசியம்” என்றான்.

பல நூற்றாண்டுகளாக தேவன் சாத்தானுக்குப் பதில் சொல்லவில்லை என்பதை நாம் கற்பனை செய்து கொள்ள வேண்டும். ஆனால் தேவன் தனக்கு ஒரு திட்டம் வைத்துள்ளார். அந்த திட்டம் இயேசுவே. இயேசு கிறிஸ்து வந்தபோது கடைசி ஆதாமாக வந்தார். ஆதாமின் வர்க்கத்திற்கு ஒரு இறுதியான பிரதிநிதியாக வந்தார். அவர் எல்லாப் பாவங்களையும் எல்லா ஆக்கினைகளையும் எல்லாப் பாவத்தின் விளைவுகளையும், ஆதாமுடைய மீறுதல்களையும் தானே சுமந்து கொண்டார். அவர் இறுதி ஆதாமாக மரித்தார்; அவர் இறுதி ஆதாமாக அடக்கம்பண்ணப்பட்டார்; அவர் திரும்பவும் இரண்டாவது மனிதனாக உயிர்த்தெழுந்தார். புதிய மனிதவர்க்கத்தின் தலைவராக வந்தார். இவ்விதமாக இயேசு ஆதாமின் மனிதவர்க்கத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்தார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற அவர்களுக்கு ஆதாமின் பாவம் அவர்கள்மேல் சுமத்தப்படுவதில்லை. இயேசுவின் தியாகபலியின் விளைவாக இயேசு நம்மை சமரசம் பண்ணாமல் மன்னிக்கிறார். அவர் சாத்தானின் விவாதத்தை இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் நீக்கினார். ஆக்கினைத் தீர்ப்பில்லாமல் நம்மை நீதிமான்களாக தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட ஆவண செய்துவிட்டார். நாம் கொலோசெயரை சுருக்கமாகப் பார்த்தோமானால் எப்படி இயேசு நம்முடைய பாவத்தை நீக்கினார் என்பதைக் காணலாம்.

“உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து;

நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராத படிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து”

(கொலோசெயர் 2:13,14)

இயேசுவின் மரணத்தின் வழியாக அவருடைய நீதியை விட்டுவிடாமல் நம்முடைய பழைய கீழ்ப்படியாமையாகிய பாவத்தை மன்னிக்க முடியும். அவைகள் எல்லாவற்றையுமா? ஆம் அவைகள் எல்லாவற்றையுமே! நம்முடைய ஒரு பாவம் மன்னிக்கப்படாவிட்டாலும் தேவனுடைய வழியில் செல்வதற்கு நமக்கு எந்த உரிமையும் கிடையாது. நம்முடைய கடந்தகாலப் பாவச் செயல்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன என்பதனை அவர் உறுதிப்படுத்தியுள்ளார். எனவே, நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

"எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து,

சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் நமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,"

(எபேசியர் 2:14-15)

இதைவிடத் தெளிவானது வேறு எதுவும் இருக்க முடியாது. அவர் நியாயப்பிரமாணங்களின் சட்ட திட்டங்களை ஒழித்து விட்டார்.

"இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப் பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை."

(ரோமர் 3:20)

நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதினால் எந்த மனிதப்பிறவியும் தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்படுவதில்லை என்று இந்த வேத பகுதி எடுத்துக்காட்டுகின்றது. இந்தப் பிரச்சனை நியாயப்பிரமாணத்திலல்ல. இந்தப் பிரச்சனை நமக்குள்தான் இருக்கிறது. நாம் இதைக் கடைப்பிடிக்க முடியாது. அதிக வித்தியாசமான பகுதிகளையுடைய இந்த நியாயப்பிரமாணத்தை நாம் ஒன்றைவிட்டு ஒன்றைத் தாண்டிச் சென்று கடைப்பிடிக்க முடியாது. "நான் பகுதி A யை மட்டும் கடைப்பிடித்துவிட்டு B யையும் C யையும் விட்டுவிட முடியாது. நான் பகுதி D யைக் கடைப்பிடிப்பேன். மற்ற ஒரு சில பகுதிகளையும் கடைப்பிடிப்பேன்." என்று சொல்ல முடியாது. ஏனென்றால் சட்டம் என்பது ஒரே சட்டம்தான். நீ அவைகள் எல்லாவற்றையும் எல்லாச் சமயங்களிலும் கடைப்பிடித்தாலும் நீ அதன்மூலம் நீதியைப் பெற்றுக்கொள்ள முடியாது. இதிலே வேறொரு சலுகையும் கிடையாது.

"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது"

(ரோமர் 6:14)

நியாயப்பிரமாணமும் கிருபையும் ஒன்றுக்கொன்று தனித் தன்மையுடைய இரண்டில் ஒன்று. நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருப்போமானால் நாம் கிருபையின் கீழ் வரமுடியாது. நாம் கிருபையின் கீழ் வந்தோமானால் நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் வரமுடியாது. நாம் இரண்டையும் ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியாது. நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தோமானால் பாவம் நம்மீது ஆட்சி செய்யும். நாம் கிருபையின் கீழ் இருந்தோமானால் பவுல் சொல்லுவது போல், பாவம் நம்மை ஆட்சி செலுத்த முடியாது. ஏனென்றால் நாம் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.

விடுதலையுடன் வாழ்வது

"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்." (ரோமர் 8:14)

நாம் எப்படி தேவனுடைய குமாரர்களாயும் குமாரத்திகளாயும் வாழ முடியும்? பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்படும்போது மாத்திரமே. இந்த முக்கியமான உண்மையானது அநேக கிறிஸ்தவர்களிடத்தில் தப்பிப்போவதைக் கவனித்திருக்கிறேன். நாம் இரட்சிக்கப்பட்டதைக் குறித்தும், பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் பெற்றதையும், தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்றதையும் பற்றிப் பேசிக்கொள்ளுகிறோம். இது வாசலுக்குள் செல்வதற்கு ஒரு ஆரம்பமேயாகும். வாழ்க்கையானது தினமும், ஒவ்வொரு மணி நேரமும் ஒவ்வொரு கணமும் பரிசுத்தஆவியினால் நடத்தப்படுவதாகும்.

"விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும் படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்."

(ரோமர் 10:4)

நாம் விசுவாசித்தால் கிறிஸ்து நீதிச் சட்டத்தின் முடிவாக இருப்பார். தேவனுடைய வசனத்தின் ஒரு பகுதியாகிய சட்டத்திற்கு முடிவு என்றல்ல. இஸ்ரவேலர்களின் கலாச்சாரத்தின் சட்டத்திற்கு முடிவாகவும் அல்ல. ஆனால் தேவனுடைய நீதியைச் சம்பாதிப்பதற்கு நீதிச்சட்டம் முடிவுற்றுக் காணப்படுகிறது. புரோடெஸ்டெண்ட் ஆனாலும், கத்தோலிக்கர்கள் ஆனாலும், பிற இனத்தவன் ஆயினும் விசுவாசிக்கும் யாவருக்கும் இது பொருந்தும். இது ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்கவில்லை. இயேசுவின் மரணத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களுக்கு நீதியுண்டாவதினால் நீதிச்சட்டம் முடிவுறுகிறது.

"ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களல்ல."

(கலாத்தியர் 5:18)

இவ்விரு வழிகளில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமேயன்றி இரண்டையும் பின்பற்ற முடியாது. இயேசு குற்ற உணர்வினின்று நம்மை மீட்டு ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலையாக்கினார். தேவனிடம் நீதியைப் பெற நீதிச்சட்டம் தேவையில்லையென அதை நீக்கினார். நீதியைப் பெற்றுக்கொள்ள நீதிச்சட்டத்தின் மேல் நம்பிக்கை வைத்தால் நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லாமல் போகாது. நீதிச்சட்டத்தைப் பின்பற்றும்பொழுது வேண்டியதைச் செய்தோமென்ற உணர்வில்லாமற் போகும். ஒவ்வொரு நாள் முடிவிலும் ஏதாவது ஒரு நீதிச்சட்டத்தின் ஒரு பகுதியை மீறினோமென்னும் உணர்வு உண்டாகும்.

நாம் சட்டம், ஒழுங்கைக் கடைப்பிடிக்காமலும் அல்லது கீழ்ப்படியாமலுமிருக்க வேண்டும் என்று நான் பரிந்துரைக்கவில்லை. நான் என்ன சொல்லுகிறேன் என்றால் நாம் சட்டங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் தேவனிடத்திலிருந்து நீதியைப் பெற்றுக்கொள்ள ஒருபோதும் முடியாது. நாம் இப்படிச் செய்ய முயற்சித்தோமானால் தேவனை அவமதிப்பவர்களாக இருப்போம். ஏனென்றால் இதன் விளைவாக நாம் அவரிடம் *"இயேசு கிறிஸ்து மரிப்பதற்கு அவசியமில்லை அவர் இல்லாமலேயே நான் இதைச்செய்து முடித்திருக்க முடியும்"* என்று சொல்வோமானால் இது எவ்வளவு பயங்கரமான செயலாயிருக்கும்! இயேசு கிறிஸ்துவின் மரணம் தேவையற்றது என்று சொல்வது மிக்க பயங்கரமாகும். ஆகவே ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கு இரண்டு உண்மைகள் அடிப்படையாக உள்ளன. முதவாவது நம்முடைய பழைய பாவங்களெல்லாம் முழுமையாக மன்னிக்கப்படும். எல்லாப் பாவங்களுமே மன்னிக்கப்படும். இரண்டாவதாக நாம் தேவனுடைய நீதியைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அத்தியாயம் 3

இருளின் இராஜ்யத்திற்கு எதிரான தொடர் யுத்தம்.

“ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.”

-எபேசியர் 6:13

ஆவிக்குரிய யுத்தத்தில் கிறிஸ்து தெளிவான வெற்றி பெற்றார். எனினும் நம் வாழ்வில் நாம்தான் அந்த நீதியை நிலைப்படுத்த வேண்டும். இதை நாம் புரிந்து கொள்வது முக்கியமாக உள்ளது. நாம் வெற்றியைப் பெற இது தவிர வேறு வழியில்லை. வெற்றியடைய நீதிச்சட்டம் தேவையில்லை. நான் ‘வெற்றி சிறந்தேன்’ என்று இயேசு கூறுகிறார். அவர் அடைந்த வெற்றியை நம் வாழ்வில் அமல்படுத்த வேண்டும்.

ஆம் இதே கொள்கையை இயேசு உயிர்த்தெழுந்த பின்பு தன்னுடைய சீஷர்களுக்குக் காட்சி கொடுக்கும்போது இவ்வாறு கூறினார்.

“அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை

நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது."

(மத்தேயு 28:18)

இயேசு இந்த அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டது தெளிவாகிறது. இந்த அதிகாரத்தை நாம் உபயோகப்படுத்த வேண்டும். ஒரு வகையாக பார்த்தால் இந்த அதிகாரத்தை நாம் பயிற்சி செய்யாவிட்டால் அது முழுமையாக பயனற்றதாகப் போய்விடும். ஒரு கோணத்தில் பார்த்தால், அவரின் அதிகாரத்தை, நாம் பயன்படுத்தும் வரை பலனற்றதாய் இருக்கும். நமக்காக இயேசு நிறைவேற்றினதை உலகம் முழு அளவில் அறியவேண்டுமானால் நாம் அவரின் சார்பில் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். எல்லா நாடுகளில் உள்ளவர்களையும் அவரது சீடராக்க வேண்டும். இது தெளிவான வேத கோட்பாடு. இயேசு எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டார். நாம் அதைச் செயல்படுத்த வேண்டும்.

நாம் இரண்டு தவறுகள் செய்யாமலிருப்பதற்குக் கவனமாக இருக்கவேண்டும். முதலாவதாக நாம் சிந்திக்க வேண்டியது என்னவென்றால் நாம் வெற்றியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இயேசு அந்த வெற்றியைப் பெற்றுவிட்டார். அந்த வெற்றியை நாம் பெற்றுக்கொள்ள நாம் நிறைவேற்ற வேண்டிய சில படிகள் உண்டு.

நாம் முதற்படியாகச் செய்ய வேண்டியது என்னவென்றால் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை நாம் முழுமையாக தரித்துக்கொள்ள வேண்டும். எபேசியர் 6இல் பரிசுத்த பவுல் வானுலகின் சாத்தானின் இராஜ்யத்தைப் பற்றிக் கீழே வருமாறு கூறுகிறார்.

"ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்."

(எபேசியர் 6:13)

இந்த சர்வாயுதவர்க்கத்தை நாம் எடுத்துக்கொள்ளுவதில் கவனம் செலுத்தவேண்டும். சர்வாயுதவர்க்கம் தானாக நம்மிடத்தில் வராது. தேவனும் அதை நம்மிடத்தில் வைக்க முடியாது. நாம் தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். பவுலடிகளார் கிறிஸ்தவர்களாக இருக்கிற மக்களுக்கு எழுதும் பொழுது, சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளும் பொறுப்பை அவரவர்க்கே கொடுத்துள்ளார்.

பாதுகாப்பிற்குரிய சர்வாயுதவர்க்கம்

முதலாவதாக பவுல், 2 கொரிந்தியரில் எழுதும் போது சொல்லுவதை நாம் பார்ப்போம். இது அப்போஸ்தலர்களுக்கோ போதகர்களுக்கோ மட்டுமல்ல அது எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பொருந்துவதாகும்.

"நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல."

(2 கொரிந்தியர் 10:3)

நாம் மாம்ச சரீரத்தில் வாழ்கிறோம். மேலும் நாம் ஒரு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். ஆனால் இந்த யுத்தம் சரீரத்திற்குரியவையல்ல. அப்படியானால் இந்த யுத்தம் மாம்சத்திற்குரியதும் அல்ல. அது ஆவிக்குரிய யுத்தமாகும்.

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்திற்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.

அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். *(வசனம்4-5)*

கிங் ஜேம்ஸின் புதிய மொழிபெயர்ப்பு சொல்லுகிறது “தர்க்கங்கள்”. அடுத்த மொழிபெயர்ப்பு கூறுகிறது “எண்ணங்கள்” (Young’s Literal Translation) அல்லது “எதிர் பார்ப்புகள்”. நாம் *அறிவு* மற்றும் *எண்ணம்* என்ற வார்த்தைகளையும் கூட இந்த வசனத்தில் பார்க்கிறோம். தர்க்கங்கள், தேவனை அறியும் அறிவு, மேட்டிமை, அறிவு மற்றும் எண்ணம் ஆகிய ஐந்து வார்த்தைகள் உள்ளன. இவையெல்லாம் மனதைப் பொறுத்ததுதான் என்பதை அறிகிறோம். இங்குதான் யுத்தம் நடைபெறுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முயற்சிக்கும் ஒவ்வொருவரும் இதைக் கண்டறிந்திருப்பார்கள் என்று நான் நிச்சயிக்கின்றேன். நாம் எப்பொழுதும் இதை இறையியல் அடிப்படையான உண்மை என்பதை அறிந்திருக்கமாட்டோம். ஆனால் இந்தச் செய்தியின் உண்மை தெளிவானது. மிக அதிகமான நமது போராட்டங்களெல்லாம் நமது மனதிற்குள்ளாகவே நடைபெறுகிறது.

நம்முடைய யுத்தத்தைப் பற்றி மற்றொரு கருத்தையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் எல்லோருமே யுத்தத்திற்குள் இருக்கிறோம் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். நம்முடைய இராஜ்யம் சாத்தானுடைய இராஜ்யத்தோடு யுத்தம் செய்கிறதா? நாம் தேவனுடைய இராஜ்யத்தைச் சேர்ந்த குடிமக்கள், நாம் சாத்தானோடு யுத்தம் செய்கிறவர்களாவோம்.

அரண்களின் தன்மை

தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஆயுதங்கள் மிகவும் வலிமையானவை. இவை அரண்களின் மதில்களைக் கீழே இழுத்துத் தள்ளுவதற்கு உதவுபவை. யாருடைய மதில்களை நாம் கீழே இழுத்துத் தள்ளுகிறோம்? சாத்தானுடையதை. எந்தப் பகுதியில்? மனதிற்குள்ளே!

மக்களின் மனதிற்குள்ளே சாத்தான் அநேக வித்தியாசமான மதில்களைக் கட்டுகிறான். ஆனால் இவை

எல்லாவற்றையும் தொகுத்துக் கூறுவதற்கு நான் ஒரே ஒரு வார்த்தையைத்தான் தெரிந்தெடுக்க வேண்டும். அதுதான் தப்பெண்ணம் என்பதாகும். இதற்கு அர்த்தம் என்னவென்றால் உண்மையை அறிந்து கொள்ளும் முன்பே தப்பான எண்ணம் கொள்ளுதலாகும். இவ்வாறு தப்பெண்ணம் கொள்ளுகிற மனிதனின் ஒரே மாதிரியான வாசகம் என்னவென்றால் நான் தீர்மானம் பண்ணிவிட்டேன். உண்மையைக் கூறி என்னைக் குழப்பாதீர்கள் என்பதாகும். இதிலே பல வகைகள் உண்டு. இந்த தப்பெண்ணத்தை உண்டாக்குவது சாத்தானின் பல வகையான அரண்களில் ஒன்றாகும். நற்செய்தியானது மக்களின் மனதில் சென்று தனது கிரியையைச் செய்யாதபடி தடுத்து மக்களின் மனதில் இவ்வாறு தவறான எண்ணங்களை உருவாக்குவது சாத்தானின் செயலாகும்.

> “மக்களின் மனதிற்குள்ளே சாத்தான் அநேக வித்தியாசமான மதில்களைக் கட்டுகிறான்”

இதை நாம், கள்ளப்போதகர்களிடமும், தவறான மதங்களில் மக்கள் ஈடுபடுவதிலும் பரவலாகக் காணலாம். ஒரு விசுவாசி அவர்களுக்கு வேதத்திலிருந்து வசனங்களைத் துல்லியமாக எடுத்துக் கூறமுடியும். ஆனால் அவர்கள் அதைக் கேட்க முடியாது. ஏனென்றால் அவர்கள் மனதில் முற்றிலுமாக முன் கூட்டியே திட்டமிட்டுள்ளனர். அவர்கள் உங்களுக்கு ஒரு பொருத்தமான பதிலை வைத்திருப்பார்கள். இவ்வாறு தங்கள் மனதில் ஒரு மதிலை உருவாக்குவதால் உண்மையான தேவனுடைய வார்த்தை அவர்களுக்குள் நுழையாதபடி அந்த மதில் தடை செய்கிறது.

இஸ்லாமியர்களுடன் உரையாடும்போது இது தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சில உண்மைகளை நம்பினாலும், அவரே மேசியா என்றும்,அவர் கன்னியினிடத்தில் பிறந்தவர் என்றும் ஏற்றுக்

கொண்டாலும் இரண்டு காரியங்களை அவர்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். முதலாவது, இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்பதை, முகம்மது நபி ஒரு தேவதூதன் இயேசுவை சிலுவையில் அவர் மரிக்கும் முன்பு மாயமாக எடுத்துச் சென்றுவிட்டார் என்று போதித்தார். இரண்டாவதாக, அவர்கள் அவர் 'பிதாவின் சுதன்' என்பதையும் உணர்ச்சிவசப்பட்டு எதிர்க்கிறார்கள். இவைகளே இஸ்லாமியர்களின் மனதில் உள்ள அரண்களாகும். ஒரு இஸ்லாமியன் இயேசுவில் நம்பிக்கை வைத்து நீண்டதூரம் செல்லுவான் ஆனால் அவனை இயேசு பிதாவின் சுதன் என்று ஏற்றுக்கொள்ளச் சொன்னால் அதற்கு ஒத்துக்கொள்ளமாட்டான். அவனுக்கிடையே ஒரு தடுப்புச்சுவர் வந்துவிடுகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட அசாதாரண ஆயுதங்கள் மட்டுமே இந்தச் சுவரைத் தகர்த்து எறிய முடியும்.

நமது ஆயுதங்களின் தன்மை

எபேசியரில் சொல்லப்பட்ட சில ஆயுதங்களைப் பற்றி நாம் கவனிப்போம்.

"ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதி என்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்;

சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்;

பொல்லாங்கன் எய்யும் அக்கினி -யாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்க தாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்."

(எபேசியர் 6:13-18)

சத்தியமென்னும் வார்க்கச்சை

வேதாகமத்தில் ஒரு வார்த்தை அடிக்கடி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அது "உங்கள் அரையில் கச்சையைக் கட்டிக்கொள்ளுங்கள்" என்பதாகும். இதை புரிந்து கொள்ளுவதற்கு நாம் பின்வருவதை உணர்ந்துகொள்ள வேண்டும். அதாவது வேதாகம காலத்தில் ஆண்களும் பெண்களும் முழங்கால்களுக்குக் கீழே வரும்வரை நீண்ட ஆடைகளை அணிந்திருப்பார்கள். ஏதாவது துரிதமாக வேலை செய்யவேண்டுமானால் முதலாவது ஒரு மனிதன் செய்ய வேண்டியது என்னவென்றால், கால்களின் தாராளமான அசைவுகளுக்கு ஏற்றாற் போல் ஆடைகளை முழங்கால்களுக்கு மேல் தூக்க வேண்டியதாயிருக்கும். இதைச் செய்வதற்கு அந்த நபர் இடையில் கச்சையணிந்து தன் நீண்ட ஆடையைத் தன் கச்சையில் சொறுகிவைப்பார். இவ்வாறு செய்த பின்புதான் அவன் வேலைக்குத் தயாராவான். இவ்வாறு ஒருவன் செய்யும் வரைக்கும் அவன் வேலையில் இறங்க முடியாது. ஏனென்றால் நீளமான ஆடையானது அவனுக்கு முட்டுக்கட்டையாய் இருக்கும்.

இது நம்மில் எவ்வாறு செயல்படுகிறது. மதத்திற்கடுத்த

பேச்சும் நடைமுறையும் அளவிற்கு மிஞ்சிய நீண்ட ஆடை உடுத்தியவர்கள் தடுமாறியது போல நம்மைத் தடுமாறச் செய்கிறது. பிறரைப் பரிசுத்தஆவி உணர்த்துவது போல நம்மையும் உணர்த்தும்பொழுது நேர்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். மதத்திற்குரிய சில பதங்களைப் பயன்படுத்தித் தப்பிக்க முற்படக்கூடாது. உண்மையான கிறிஸ்தவனாய் விளங்குவதற்கு இது தடையாயுள்ளது. நாம் மதத்திற்கடுத்த சொற்களின் பின்னே அடைக்கலம் தேடக்கூடாது.

நீதி என்னும் மார்க்கவசம்

சரீரத்தின் பகுதிகளில் மார்க்கவசமானது இருதயத்தைப் பாதுகாப்பதாக அமைகிறது. நான் சாலொமோன் சொல்லும் இந்த வார்த்தையினால் எப்பொழுதும் ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருக்கிறேன்.

"எல்லாக்காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்."

(நீதிமொழிகள் 4:23)

நாம் இருதயத்தில் எதைச் சிந்திக்கிறோமோ அதுவே நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ நம்முடைய வாழ்க்கையை முழுமையாக தீர்மானிக்கிறது. ஆகவேதான் நாம் நம்முடைய இருதயங்களை எல்லாத் தீமையினின்றும் பாதுகாக்க அது அவசியமாகிறது. ஆகவே நீதி என்னும் மார்க்கவசம் இருதயத்தின் பாதுகாப்பிற்கு அவசியம் என்று பவுலடிகளார் கூறுகிறார்.

பவுல் மீண்டும் இந்த சர்வாயுதவர்க்கத்தைப் பற்றி மற்றொரு நிருபத்திலும் திரும்பக் கூறுகிறார். *"விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும்"* (1 தெலோனிக்கேயர் 5 : 8) அவர் இந்த மார்க்கவசத்தைப் பற்றி மற்றொரு கண்ணோட்டத்தில் வருணிக்கின்றார். நாம் இந்த இரண்டு பகுதிகளையும் ஒன்றாக இணைக்கும்பொழுது இந்த நீதியென்னும் மார்க்கவசம் என்பது விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும் உள்ளடக்குகின்றது. இது பரிசுத்த பவுலின்

மனதினுள்ளே இருக்கின்ற நீதியின் வகையைக் குறித்துச் சொல்லுகிறது. வேலையின் நீதி அல்ல, மத சம்பந்தமான சட்டத்தின் நீதியல்ல. ஆனால் இந்த வகையான நீதி விசுவாசத்தினால் மட்டுமே உண்டாகிறது.

நற்செய்தி என்னும் பாதரட்சை

இந்த வகையான ஆயுதம் பாதரட்சையாக அறியப்படுகிறது. நான் அழுத்தமாகச் சொல்வது சமாதானத்தின் நற்செய்தியாகிய ஆயத்தம் என்னும் பாதரட்சையாகும். ரோம வீரர்கள் அணியும் தோல் காலணியானது கன்றுக்குட்டியின் தோலினால் செய்யப்பட்ட வாரை உடையதாகும். இந்தக் காலணிகள் அவர்கள் மேல் அழுத்தமாகப் பொறுத்தப்பட்டுள்ளது. வேதம் நாம் காலணிகளை அணிந்து தயாராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. நாம் சமாதானத்தின் சுவிசேஷத்தைக் கூறி அறிவிப்பதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும். உண்மையென்னவென்றால், நம்முடைய இருதயத்திற்குள் சமாதானம் இல்லை என்றால் இதை மற்றவர்களுக்குக் கொடுக்க நம்மிடத்தில் ஒன்றும் இருக்காது. நாம் வேதத்தை அறிந்து கொள்ள வேண்டும். அதை விசுவாசிக்க வேண்டும். நாம் மக்களுக்குத் தேவனின் வார்த்தையின் உண்மையைச் சுட்டிக்காட்டுவதற்கு தகுதியுடையவர்களாய் இருக்க வேண்டும். இதுவே சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தமாகும்.

விசுவாசமென்னும் கேடயம்

நாம் புதிய ஏற்பாட்டில் இரண்டு விதமான கேடயங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். ஒன்று சிறிய வட்டமான கேடயம். மற்றொன்று நீளமான நீள்வட்ட வடிவத்தில் உள்ள முழு மனிதனையும் மறைக்கக் கூடிய கேடயமாகும்.

இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது நீளமான நீண்ட வட்டமுடையதாக மனிதனை முழுவதும் மூடக்கூடிய

கேடயமாகும். இதுவே விசுவாசக் கேடயமாகும்.

இரட்சண்யம் என்னும் தலைச்சீரா

இந்தத் தலைச்சீரா மனிதனுடைய எந்தப் பாகத்தைப் பாதுகாக்கின்றது? மனதைப் பாதுகாக்கிறது ஏனென்றால் என்னுடைய சொந்த தத்தளிப்பினாலும் மன உளைச்சலினாலும் சீக்கிரத்தில் தேவன் எனக்கு என்னுடைய மனதைப் பாதுகாக்கும்படிக் காட்டினார். அவரிடத்தில் நான் எப்படி என்று கேட்கும் பொழுது அதற்குரிய பதில் தேவனுடைய வார்த்தையினால் வந்தது. **அதுவே இரட்சண்யம் என்னும் தலைச்சீராவாகும்.**

தேவன் அதை எனக்குத் தெளிவாக வெளிப்படுத்தின போது நான் இரட்சிக்கப்பட்டேன் என்று எனக்குத் தெரியும் என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன். அப்படியானால், நான் ஏற்கனவே இரட்சண்யம் என்னும் தலைச்சீராவை அணிந்துள்ளேன் என்று அர்த்தமாகுமா? பரிசுத்த பவுலடிகளார் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற மக்கள் இரட்சண்யம் என்னும் தலைச்சீராவை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வேதத்தில் சொல்லும் பொழுது இதற்குரிய பதில் எனக்குக் கிடைத்தது.

நாம் இரட்சிக்கப்பட்டதினால் இந்தத் தலைச்சீராவை இயல்பாகவே பெற்றுக் கொண்டுவிட்டோம் என்பதல்ல. நாம்தான் அதை அணிந்து கொள்ளுவது அவசியமாகிறது என்பது தெளிவாகிறது.

1தெசலோனிக்கேயரில் மிகவும் பயனுள்ள இதற்கொத்த மேற்கோளை நாம் காண்கிறோம். *"இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்."* (1 தெசலோனிக்கேயர் 5:8) இது, தலைச்சீராவின் தன்மையானது நம்பிக்கை என்று நான் கண்டு பிடிப்பதற்கு மிகவும் உதவியாக இருந்தது. எப்படி விசுவாசம்

நம்முடைய இருதயத்தைப் பாதுகாக்கிறதோ அப்படியே நம்முடைய மனதை மன உளைச்சலுக்கும் அதைரியத்திற்கும் எதிராக நம்பிக்கை நம்முடைய மனதைப் பாதுகாக்கிறது. வேதத்தில் சொல்லப்பட்டுள்ள விசுவாசம் என்பது இருதயத்தைச் சார்ந்ததாகும். *"நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்"* (ரோமர் 10:10). ஆனால் நம்பிக்கையானது மனதிலே இருக்கிறது. எபிரெய ஆக்கியோன் கூறுகிறார் *"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."* (எபிரெயர்11:1) ஆகவே இருதயத்தில் உள்ள விசுவாசத்தின் அடிப்படையில் நாம் மனதிற்குள்ளே நம்பிக்கை வைக்க வேண்டும். இந்த நம்பிக்கை நமது மனதைப் பாதுகாத்துக்கொள்கிறது.

ஆவியின் பட்டயம்

ஆவிக்குரிய ஆயுதங்களின் பட்டியலில் இன்னும் ஒரு வகையான ஆயுதம் உண்டு. அதுதான் தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயம். லோகோஸ் ('LOGOS') மற்றும் ரேமா ('RHEMA') என்ற வார்த்தைகளின் துல்லிய வித்தியாசங்களை நம்மில் பலர் அறிவோம். 'லோகோஸ்' என்பது தேவனுடைய நித்திய ஆலோசனையைக் குறிக்கும். 'ரேமா' என்பது பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையைக் குறிக்கும். எபேசியர் 6ஆம் அதிகாரம் ஆவியின் பட்டயமானது தேவனின் பேசுகின்ற வார்த்தையாகும் என்று கூறுகிறது. மற்றொரு வகையில் அது நமக்குப் பக்கத்தில் உள்ள மேஜையின் மேல் இருக்கின்ற வேதாகமம் அல்ல. நாம் நம்முடைய வாயினால் தேவனுடைய வசனத்தைப் பேசும் பொழுது செயல்படுவதாகும். அதுதான் வசனம். இவ்வாறுதான் இயேசு கிறிஸ்து வனாந்தரத்தில் சாத்தான் தன்னைச் சோதிக்கும் போது வசனத்தை உபயோகித்து ஜெயித்தார். இயேசு "இவ்வாறு எழுதப்பட்டுள்ளது" என்று மூன்று முறை கூறினார். (மத்தேயு 4: 4-10; லூக்கா 4: 4-10) இவ்வாறு எழுதப்பட்டுள்ள வார்த்தையே நித்தியமானவையாகவும்

தேவனால் பேசப்படுபவையாகவும் உள்ளது. இதுவே சாத்தானைப் பின்னாகப் போகும்படி விரட்டும் ஆயுதமாகும்.

ஏழாவது ஆயுதம்

நாம் இந்த ஆறுவகையான ஆயுதங்களை அலசிப் பார்ப்போமானால் அவைகள் நமக்கு மிகவும் தேவையானதும் நம்மைப் பாதுகாக்கக்கூடியவைகளாகவும் இருப்பதைக் காணலாம், பட்டயத்தைத் தவிர. பட்டயம் தாக்கப் பயன்படும் ஒரு ஆயுதம். பின்பு நாம் அவசியமாக அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் நம்முடைய கரம் எவ்வளவு தூரம் செல்லுகின்றதோ அவ்வளவு தூரம் வரைக்கும் அது செயல்படும். நாம் சாத்தானின் இராஜ்யத்தை இந்த மற்றொரு ஆயுதம் இல்லாமல் தகர்த்துக் கீழே தள்ள முடியாது.

இந்த ஆறு வகையான நல்ல ஆயுதங்களை நான் வேதத்தில் பார்க்கும்பொழுது (இது என்னுடைய சொந்த உற்று நோக்கல் ஆகும்) ஏழாவதைக் காண விழைகின்றேன். ஆகவே நாம் இந்த ஆறுவகையான ஆயுதங்களைப் பட்டியலிடும்போது நாம் ஏழாவதொன்றைப் பார்த்து சோதித்தறிய வேண்டியதுள்ளது. இந்த ஏழாவது ஆயுதத்தைப் பற்றி இந்தப் பகுதியின் இறுதியில் எடுத்துக்காட்டப்படுகிறது என்று நம்புகிறேன். *“ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.”* (எபேசியர் 6:18)

ஜெபம் எல்லையற்ற ஆற்றலுடையது. கை நீட்டும் தூரத்திற்கும் அப்பால் சென்று ஜெபம் தடைகளைத் தகர்க்கும். அது நமது கண்டம் விட்டுக் கண்டம் தாண்டும் ஏவுகணை. அதை எங்கிருந்தும் ஏவி எவ்வளவு தூரத்தில் உள்ளதையும் தாக்க முடியும். ஜெபம் என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்துவதின் மூன்று முக்கியக் குறிப்புகள் உண்டு: தேவனுடைய வார்த்தை (லோகோஸ்), இயேசுவின் நாமம், இயேசுவின் இரத்தம்.

ஜெபமானது ஒரு வல்லமையான ஆயுதமாக இருந்தாலும் அதைச் செலுத்துவதற்கு ஒரு பொருள் தேவைப்படுகிறது. எந்த ஒரு ஏவுகணையையும் செலுத்துவதற்கு ஒரு பொருள் தேவைப்படும். அணுகுண்டைப் போடுவதற்கு ஒரு பொருள் அவசியமாகிறது. எந்த ஒரு துப்பாக்கிக்கும் சுடுவதற்கு தோட்டா தேவைப்படுகிறது. பழங்காலத்தில் அம்பை செலுத்துவதற்கு ஒரு வில் தேவை. இவ்வாறாகவே ஜெபமாகிய ஆயுதத்திற்கும் ஒரு உந்துதல் தேவைப்படுகிறது என்று நான் பரிந்துரைக்கிறேன். ஜெபத்தை “செலுத்துவதற்கும்” ஒரு வழி தேவைப்படுகிறது. சாத்தானின் இராஜ்யத்திற்கு விரோதமாக செலுத்தப்படும் இந்த ஏழாவது ஆயுதத்திற்கு முக்கிய பாகங்களாகிய ஆயுதம் தேவனின் வார்த்தை, இயேசுவின் நாமம் மற்றும் இயேசுவின் இரத்தம் ஆகியனவாகும். சாத்தானின் இராஜ்யத்திற்கு விரோதமாக இதை எவ்வாறு செயல்படுத்த முடியும்? என்னுடைய அனுபவம் என்னவென்றால் இந்த ஏழாவது ஆயுதத்தைச் செலுத்துவதற்கு நாம் நான்கு முக்கிய வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது ஜெபம், துதித்தல், போதித்தல், சாட்சிகூறுதல் ஆகியவையாகும்.

> “நம்முடைய புயம் எட்டக்கூடிய தூரத்தை மிஞ்சுவதற்கு ஜெபமே வழி.”

ஆனால் இந்த நான்கும் செலுத்தப்படும் வழிகள் பயனுள்ளதாக இருக்க தேவ வார்த்தை, இயேசுவின் நாமம், இயேசுவின் இரத்தம் என்பவைகளால் நிறைக்கப்பட்டிருக்க வேண்டும். (ஜெபத்தினுடைய பிரதான ஆயுதமாகும்).

நமக்குத் தேவையான தேவனின் வல்லமை

“பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன்

உண்டுபண்ணினீர்."

(சங்கீதம் 8:2)

"யார் எதிரி? யார் பழிவாங்குபவன்? " சாத்தானே! யார் மற்ற எதிரிகள்? சாத்தானுடைய இராஜ்யம், சாத்தானுடைய ஆட்சி மற்றும் வானுலகத்தில் உள்ள அதிகாரங்கள்.

நாம் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை உணர்ந்துகொள்வது அவசியம். கிறிஸ்தவம் இயற்கைக்கு அப்பாற்பட்ட மதமாகும். நான் ஒரு முறை அப்போஸ்தலர் நடபடிகளைப் படித்தேன். அப்போஸ்தலர் நடபடிகளில், இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளியரங்கமானவைகளை நீக்கினால் என்ன நடக்கும் என்று ஆராய்ந்து பார்த்தேன். (உள்ளத்தில் நடைபெறும் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகள் மட்டுமல்ல, புலன்களால் அறியப்படுகிறவைகளுமாகும்) 28 அதிகாரங்களுள்ள அப்போஸ்தலர் நடபடிகளில் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை ஒதுக்கினால், ஒரு அதிகாரம் கூட நிறைவாயிருக்காது என்பதைக் கண்டுபிடித்தேன். நமது சொந்த பெலனால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற முடியாது மற்றும் வல்லமையாக செயலாற்ற முடியாது. மேலும் சபை எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை வேதத்தில் கூறுவது இப்புத்தகமே. பரிசுத்தஆவியின் மேலான உதவி நமக்குத் தேவை. அந்த ஆற்றல் 1கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் கூறப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவியின் கனிகளே.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலினால் கூறப்பட்ட வேத வசனத்தைப் பார்க்கும்பொழுது *"தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது."* (1கொரிந்தியர் 4:20) என்பது தெரிகிறது.

அது இறையியலுக்கான ஒரு செய்தி அல்ல. அது தர்க்கத்திற்குரிய ஒரு விஷயமுமல்ல. அது ஒரு அறிவுப் பூர்வமான ஆதாரமான செய்தியல்ல. இது தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையான செயல் விளக்கமாகும்.

இலட்சக்கணக்கான இஸ்லாமியர் சூழ்ந்துள்ள இக்காலத்தில் திருச்சபைக்குத் தேவையான பிரதான காரியம் இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலாகும். இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக ஆற்றல் மட்டுமே இஸ்லாமியர்களின் கவனத்தை ஈர்க்க முடியும். இதற்கு நமக்குப் பெரும் வாய்ப்புள்ளது. நாம் அவர்களிடம் செல்லுவதைவிட இதன் மூலம் அவர்கள் நம்மிடம் வருவார்கள். கடந்த காலத்தில் நாம் அவர்களின் நாடுகளுக்குச் சென்று அறிவிப்போமானால் சிறையிலிடப்படுவோம் அல்லது சிரச்சேதம் செய்யப்படுவோம். ஆனால் தேவன் இஸ்லாமியர்களை நம்மிடம் வரும்படி வழி வகுத்துள்ளார். இதைக் குறித்து சபை செய்வது யாது என்பதே கேள்வி. திருச்சபை விழித்தெழுந்து 'இயேசு ஜீவிக்கிறார்' என்பதனை தெய்வீக ஆற்றல் மூலம் நிரூபித்துக்காட்டுவோம்.

நம்முடைய ஆவிக்குரிய போரின் உச்சக்கட்டம்

தேவனுடைய இராஜ்யத்திற்கும் சாத்தானின் இராஜ்யத்திற்கும் இடையில் நடக்கின்ற போரில் நம்முடைய பங்கு என்ன என்று கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்தப் போரின் உச்சக்கட்டத்தைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷசத்தில் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டுள்ளதை நாம் கவனிக்கலாம்.

"வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும், யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.

வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று.

உலகம் அனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய

பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்."

(வெளிப்படுத்தின விசேஷம் 12:7-9)

இந்த வேத பகுதியானது நமக்கு மிகவும் முழுமையான விளக்கத்தை ஒரே ஒரு வார்த்தையில் விளக்குகிறது. *பிசாசு* என்னும் வார்த்தைக்கு கிரேக்கத்தில் 'டயபோலாஸ்' ('diabolos') அவன் *"கோள் சொல்லுகிறவனாகவும்", "பொய்யின் அதிபதியாகவும்"* இருக்கிறான். சாத்தான் என்பவன் "ஒரு பகைவன்" அல்லது "ஒரு எதிர்ப்பாளன்" ஆவான். அவன் தேவனை எதிர்க்கும் கோள்காரன், தேவ ஜனங்களை, தேவ திட்டத்தைத் தடுக்க, உலகம் முழுவதையும் ஏமாற்றுகிறவனாகத் திகழ்கிறான்.

இந்தப் பெரிய வலுசர்ப்பம் பரலோகத்திலிருந்தும் அவனுடைய இராஜ்யத்திலிருந்தும் தள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இது யுத்தத்தின் உச்சக்கட்டம் அல்ல. ஆனால் நாம் வெற்றி கொள்வதே முக்கியமாகும்.

"அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய இராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப் போனான்."

(வசனம் 10)

இந்தப் பகுதியில் இதைத் தேவதூதர்கள் பேசுகிறார்கள். ஆகவே அவர்கள் நம்முடைய சகோதரர்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் நம்மைப் பற்றிதான் பேசுகிறார்கள். ஆகவே சாத்தான் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறான்? நம்மைப் பழித்துக் கொண்டிருக்கிறான். எங்கே? தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக. இது ஒரு அதிர்ச்சியைத் தரக்கூடிய உண்மை. அப்படித்தானே? சாத்தான்

இரவு பகலாக இவ்வாறு குற்றஞ்சுமத்திக் கொண்டிருக்கிறான்! அவனுடைய முழுமையான நோக்கம் என்னவென்றால் நாம் குற்றவாளிகள் என்று நிரூபிப்பதுதான். (ஒரு குறிப்பு என்னவென்றால் அவன் குற்றம் சுமத்தும் ஆயுதத்தை உபயோகிக்கும்போது அவனை எப்படிச் சமாளிப்பது என்று அறிந்து கொள்ளாவிட்டால் உண்மையில் அவனைத் தோற்கடிக்க நம்மால் முடியாது.)

மிகவும் வல்லமையான இரகசியம்.

தேவன் எனக்கு வெளிப்படுத்தின வேதாகமத்திலுள்ள மிகவும் வல்லமையான இரகசியம் என்ன என்பதை நான் இப்பொழுது பகிர்ந்துகொள்ளுகிறேன். நான் இதை மிகமிக மதிப்புள்ளதாகக் கருதுகிறேன்.

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

(வெளிப்படுத்தின விசேஷம் 12:11)

இந்த வசனம் என்ன சொல்லுகிறது என்று கவனித்துப் பாருங்கள். *"அவர்கள் அவனை ஜெயித்தார்கள்".* அவர்கள் என்பது யார்? அது நம்மைக் குறிக்கிறது. அவன் என்பது யார்? அது சாத்தான். இது சாத்தானுக்கும் சபைக்கும் இடையில் உள்ள போராட்டம் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

சாட்சியானது நான்கு வகையான செலுத்தும் ஆயுதங்களில் ஒன்று என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். நாம் தனிப்பட்ட முறையில் சாட்சி கொடுக்கும் போது சாத்தானை வெற்றி கொண்டுவிட்டோம் என்று பொருளாகும். தேவனுடைய வார்த்தை சொல்லுவதென்னவென்றால், இயேசுவின் இரத்தம் இதை நமக்குச் செய்கிறது. நம்முடைய சாட்சி இதை

நம்முடையதாக்குகிறது. இது வேதத்தின் பொதுவான உண்மையை எடுத்துக்காட்டி நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கு உரித்தாக்குகிறது.

இதை வலுவாக கடைப்பிடிப்பதற்கு நாம் தேவனுடைய வார்த்தை இயேசுவின் இரத்தத்தைப் பற்றி என்ன சொல்லுகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இதை நாம் செய்ய முடியாது. இயேசுவின் இரத்தத்தைப் பற்றி வேதத்தில் சொல்லப்பட்ட வாசகத்தை நாம் சோதித்துப் பார்ப்போம்.

மீட்பு

இயேசுவின் இரத்தத்தால் நாம் மீட்கப்படுகிறோம்.

. . . இவருடைய (இயேசுவினுடைய) இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.

(எபேசியர் 1:7)

"மீட்பு" என்பது கிரயம் கொடுத்து திரும்ப வாங்கப்படுவது. சாத்தானின் இராஜ்யத்திலே நாம் இருந்தோம். சாத்தானின் இராஜ்யத்திலிருந்து விலைகொடுத்து வாங்கப்பட்டோம். நமது மீட்பின் விலை, பேதுரு சொன்னது போல் வெள்ளியோ பொன்னோ அல்ல, *"அது குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்."* (1பேதுரு 1:19)

கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு, . . . சேர்க்கப்பட்டவர்கள், அப்படி சொல்லக்கடவர்கள்.

(சங்கீதம் 107:2)

இதை நமது சொந்த சாட்சியாககொண்டு, உரத்த சத்தமாகக் கூறுவோம். "இயேசுவின் இரத்தத்தின் வழியாக

நான் பிசாசின் கரத்திலிருந்து மீட்கப்படுகிறேன்."

சுத்திகரிக்கப்படுதல்

இயேசுவின் இரத்தத்தால் நாம் சுத்திகரிக்கப்படுகிறோம்.

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

(1 யோவான் 1:7)

இப்பகுதியில் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தைகள் எல்லாம் தொடர் நிகழ்காலமாகும். நாம் தொடர்ந்து நடப்போமானால், தொடர்ந்து ஐக்கியப்பட்டிருப்போம். இயேசுவின் இரத்தம் தொடர்ந்து நம்மைச் சுத்திகரிக்கும். இது நிபந்தனைக்குட்பட்டது என்பதை மனதில் கொள்ளவும். நாம் ஒளியில் நடக்காவிட்டால், இரத்தம் நம்மைச் சுத்திகரிக்காது. வெளிச்சத்தில் நடப்பதினால் உடன் விசுவாசிகளோடு ஐக்கியம் கொண்டுள்ளோம். நாம் ஐக்கியத்தின் வெளியே இருந்தால் வெளிச்சத்திற்கு வெளியேதானிருப்போம். வெளிச்சத்திற்கு வெளியே இருக்கும்போது, இரத்தம் நம்மைச் சுத்திகரிக்காது. இந்த முக்கியமான சத்தியத்தை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

இதை நாம் சத்தமாக சொல்லுவதினால், நமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறோம். 'நான் வெளிச்சத்தில் நடக்கும் போது, இயேசுவின் இரத்தம் என்னை இப்போதும், தொடர்ந்தும், எல்லாப் பாவத்திலிருந்தும் சுத்திகரித்துக் கொண்டிருக்கிறது.'

நீதிமான்களாக்கப்படுதல்

இயேசுவின் இரத்தத்தால், நாம்

நீதிமான்களாக்கப்படுகிறோம்.

இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, . . . (ரோமர் 5:9)

நீதிமான்களாக்கப்படுதலின் அர்த்தம், "குற்றவாளி அல்ல என்று விடுவிக்கப்படுதல். நான் ஒருபோதும் பாவமே செய்ததில்லை என்று நேர்மையாளனாக்கப்படுதல்."

இதைத் தனி சாட்சியாக உரத்த சத்தமாகக் கூறலாம். "இயேசுவின் இரத்தத்தால், நான் நீதிமானக்கப்பட்டேன். குற்றமற்றவனென விடுவிக்கப்பட்டேன், பாவமே செய்யவில்லை என நேர்மையாளனாக மாற்றப்பட்டேன்" என்று கூறலாம்.

பரிசுத்தப்படுத்தப்படல்

இயேசுவின் இரத்தத்தால் நாம் பரிசுத்தம் செய்யப்படுகிறோம்.

அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.

(எபிரெயர் 13:12)

பரிசுத்தமாக்கப்படுதல் என்பதற்கு எதிர்மறையாகவும் நேர்மறையாகவும் அர்த்தம் உண்டு. எதிர்மறையாக "அது பாவத்திலிருந்து பிரித்தெடுத்து தனியாக வைக்கப்படுதல்" என்று பொருள்படும். நேர்மறையாக "அது தேவனின் பரிசுத்தத்தில் பங்குபெறுபவராக அமைக்கப்படுதல்" எனப் பொருள்படும்.

இதை நமது தனிப்பட்ட சாட்சியாக உரத்த குரலில் கூறலாம். "இயேசுவின் இரத்தத்தின் மூலம், நான் பாவம், சாத்தானின் இராஜ்யம் ஆகியவற்றினின்று பிரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு தேவனின் சொந்த தூய்மையில்

பங்காளனாக ஆக்கப்பட்டேன்."

இந்த வல்லமையான சான்றுகளை ஒன்றாய் வைத்து, ஓர் தனி அறிவிப்பாக இதைச் சொல்லுவோம்.

"இயேசுவின் இரத்தத்தின் மூலம், பிசாசின் கையிலிருந்து நான் மீட்கப்பட்டேன். நான் வெளிச்சத்தில் நடக்கும் போது, இயேசுவின் இரத்தம் இப்போதும், தொடர்ந்து எல்லாப் பாவத்தினின்றும் என்னை சுத்திகரித்துக் கொண்டிருக்கிறது. இயேசுவின் இரத்தத்தால் நான் நீதிமானாக்கப்பட்டு, குற்றமற்றவனாய் விடுவிக்கப்பட்டு பாவமே செய்யவில்லை என நேர்மையாளனாக மாற்றப்பட்டேன். இயேசுவின் இரத்தத்தின் மூலம் நான் நீதிமானாக்கப்பட்டேன். பாவம் மற்றும் சாத்தானின் இராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டு, தேவனின் தூய்மையில் பங்காளனாக ஆக்கப்பட்டேன்."

இந்த அறிக்கையைச் செய்தபின் நாம் தேவனைத் துதிப்பதற்கு அது ஏதுவாகும்.

அத்தியாயம் 4

சிலுவையின் வல்லமை

"சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது."

-(1 கொரியர் 1:18)

சிலுவையிலே, இயேசுவின் மீட்பின் பணியின் பழமையான நிறைவுபடுத்துதலைப் பற்றி இறுதி சில அத்தியாயங்களில் நான் விளக்கியுள்ளேன். நமது வாழ்வில் வரக்கூடிய ஒவ்வொரு தேவையையும் அது உள்ளடக்கியது. அது ஓர் பூரண வேலை. சிலுவையின் சாதனையால், இயேசு சாத்தானுக்கும், அவன் இராஜ்யத்திற்கும் ஓர் முழுமையான, நித்தியமான, மாற்றமுடியாத தோல்வியை ஏற்படுத்தினார். இராஜ்யத்தின் நற்செய்தி இதுவே.

இப்பணிக்குப் பிசாசானவனின் பதில் என்னவாயிருக்கும் என்று யூகிக்கின்றீர்கள்? இதைப் பற்றி அவன் என்ன செய்ய விரும்புவான்? சிலுவையின் சாதனையைக் குலைத்துப் போட தன்னால் இயன்றதைச் செய்வான். சிலுவையின் சாதனையை முக்கியமில்லாததாக்க முயற்சிப்பான். ஏனெனில் அப்போதுதான் மனுக்குலத்தின்மேல் தன் அதிகாரத்தை

திரும்பவும் நிலைநாட்டப் பார்ப்பான். அதைத்தான் பிசாசு செய்தான், செய்திருக்கிறான், செய்து கொண்டே இருக்கிறான். திட்டமாக, அவனது முக்கிய குறிக்கோள் சிலுவையிலே இயேசுவின் மரணம் சாதித்ததை தெளிவற்றதாய் மாற்றுவதே.

சாத்தான் ஏன் சிலுவையை மறைக்கின்றான்?

சிலுவையின் வல்லமையைக் குறைப்பதற்கு சாத்தான் மூன்று விதமான காரணங்களை உபயோகிக்கிறான். முதலாவதாக, கர்த்தரின் மீட்கப்பட்ட பிள்ளைகளுக்கு சிலுவையே ஒரே ஆதாரமாக உள்ளது. வேறே ஆதாரம் இல்லை.

> ***"ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்."***
>
> *(எபிரெயர் 10:14)*

சிலுவையில் இயேசுவின் பலியினாலே, எந்த மனிதனுக்கும் வரலாற்றில் எக்காலம் வாழ்ந்தாலும் தேவையானவற்றை தேவன் செய்துவிட்டார். இவையெல்லாம் சிலுவை மூலமாக நடந்தேறின.

சிலுவையின் சாதனையினை உரிமைப்பாராட்டி பெற்றுக்கொள்வது படிப்படியாக முன்னேறுவதாகும். நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். இயேசு செய்தது பூரணமானது. முற்றுப்பெற்றது. நிறைவானது. ஆனால் நாம் அதை உரிமையாக்கிக் கொள்ள முன்னேறிச் செல்ல வேண்டும். எவரும், என்னையும் சேர்த்து, இதுவரை சிலுவையின் மூலமாக நமக்கு அளிக்கப்படுவதையெல்லாம் பெற்றுக்கொள்ளவில்லை. பரிசுத்தமாக்கப்படுதலின் வழியாய்ச் செல்லும் போது, இன்னும் தூய்மையாக்கப்படுவோம், தேவனுக்குக் கீழ்ப்படிவோம், தேவனின் எண்ணங்களை நினைப்போம், அவர் வழி நடப்போம். இன்னும் அதிகமாய் நமதாக்கிக் கொள்வோம். ஆனால் சத்துருவானவன் சிலுவையின்

வல்லமையைக் குறைக்க முயற்சிக்கும் போது, அரசனின் பிள்ளைகளாய் வாழ வேண்டிய நாம் பிச்சைக்காரர்களாயும் வறியவர்களாயும் வாழ ஆரம்பித்துவிடுவோம். சிலுவையின் மூலமாக நமக்கு வரவேண்டிய தேவன் ஏற்படுத்தின ஆசீர்வாதங்களையெல்லாம் அழித்துவிடுவதே சாத்தானின் நோக்கமாகும். சாத்தான் மிக சூழ்ச்சித் திறமுடையவன். எங்கே அடிக்க வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும். சிலுவையை முக்கியப்படுத்தாதபோது சபை தன் கீழ்தான் என்று அவனுக்குத் தெரியும்.

> சிலுவையை முக்கியப் படுத்தாத போது சபை தன் கீழ்தான் என்று சாத்தானுக்குத் தெரியும்.

சாத்தானின் தோல்விக்கு சிலுவையே காரணமாக இருப்பதால் சிலுவையின் வல்லமையை சாத்தான் மறையப்பண்ணுகிறான் என்பதே இரண்டாம் காரணமாகும். முந்தைய அத்தியாயங்களில் தேவனின் மீட்கும் பணியை கவனித்தோம். இயேசு சாத்தானுக்கு முழுமையான, நித்திய, மாற்றமுடியாத தோல்வியைக் கொடுத்தார். அதை சாத்தானால் மாற்றமுடியாது. ஆனால் அவனால் அந்த உண்மையை மறைக்க முடியும். அதன் விளைவு நமக்காக ஜெயிக்கப்பட்ட வெற்றியை நம்மால் அறிந்து கொள்ள முடியாததால், நம்மால் வெற்றி வாழ்க்கை நடத்த முடியாது.

உண்மையான கிறிஸ்தவ வாழ்விற்கு பெலன் தரும் வல்லமையான ஆதாரமாய் சிலுவை இருக்கிறது. இதுவே சிலுவையின் வல்லமையை சாத்தான் மறைப்பதற்குரிய மூன்றாம் காரணமாகும். சில கிறிஸ்தவர்களும் பிரபல மனோதத்துவர்களும் மலைப் பிரசங்கத்தை அடிக்கடி சொல்லி, அதுவே மனிதர்கள் வாழ வேண்டிய வழி என்பர். அது நல்ல பிரசங்கமாயிருந்தும், அது போதிக்கும்படி வாழ சிலுவையில் இயேசுவின் தியாகபலியே தேவைப்படுகிறது. இயேசுவின் பலி பழைய மனிதனான மாம்ச சுபாவத்தையே குறித்தது. பவுல் சொன்னதுபோல் *"நம்முடைய பழைய*

மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டான்" (ரோமர் 6:6). பின்னர் கலாத்தியரில் அவர் மேலும் கூறினது *"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்"*(கலாத்தியர் 5:24). நமது ஜென்ம சுபாவத்திற்கு சிலுவையின் படிப்பினையைக் கைக்கொள்ளாவிட்டால், அச்சுபாவம் நம்மை மேற்கொள்ளும். நாம் அதை மேற்கொள்ள முடியாது.

ரோமர் 6:6இல் பவுல் கூறுகிறார்

> ***நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். அது தான் சிலுவையின் முதற் தற்காப்பு. நமது வாழ்வில் இயேசு சிலுவையில் சாதித்ததை நாம் ஏற்றுக்கொள்ளும் போது, சாத்தான் தோற்கடிக்கப்படுகிறான்.***

சாத்தானின் "ஐந்தாம் படை"

1936 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் இடது, வலது சாரியினரிடம் உள்நாட்டுப்போர் எழுந்தது. துக்ககரமாக, ஸ்பானியர்கள் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். ஒரு இடத்தில் ஒரு ஸ்பானிய தளபதி ஓர் ஸ்பெயின் நாட்டு பட்டணத்தை முற்றுகையிட்டிருந்தார். இரண்டாம் தளபதி அவரிடம் வந்து "இப் பட்டணத்தைப் பிடிக்க உங்கள் திட்டம் என்ன?" என்று வினவினார். "நான் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளிலிருந்து முன்னேறும் நான்குப் படைப்பிரிவினை வைத்திருக்கிறேன்" என்று முதல் தளபதி பதில் கூறினார். பின்னர் சிறிது நிறுத்தி "எனது ஐந்தாம் படையினர் இப்பட்டணத்தைப் பிடிப்பார்கள்" என சொன்னார். "ஐந்தாம் படையினர் எங்கே இருக்கிறார்கள்" என இரண்டாம் தளபதி கேட்டார். "பட்டணத்திற்குள்ளே" என அவர் பதில் அளித்தார். ஐந்தாம் படையினர் உள்ளே இருந்து மக்களுக்கு விரோதமாக, அவர்கள் அறியாமல் செயல்படுபவர்களே.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உண்மையை மறைப்பதே சபையில் பில்லிசூனியத்தின் முக்கிய குறிக்கோள்.

அதுவே, சபையை அழிப்பதற்கு சாத்தானின் சூழ்ச்சியாகும். வெளியிலிருந்து ஒரு போதும் சாத்தானால் சபையைத் தோற்கடிக்க முடியாது. ஆனால் சபைக்குள்ளே ஓர் ஐந்தாம் படை அவனுக்குக் கிடைக்கும் போது, "அதுவே பட்டணத்தைப் பிடிக்கும் எனது ஐந்தாம் படை" என்று அவன் சொல்லுகிறான்.

பில்லிசூனியமாக வெளிப்படும் சாத்தானின் ஏமாற்று அதிகாரம் உள்ளே ஐந்தாம் படையாக இருக்கிறது. இந்த பொருள்பற்றி பவுல் கலாத்தியருக்கு எழுதுகிறார். உண்மையாகவே இதுவே கலாத்தியர் நிருபத்தின் மெய்ப்பொருள். கலாத்தியர் மூன்றாம் அதிகாரத்தின் ஆரம்பத்தில், பவுலின் வார்த்தைகளில் இதைத் தெளிவாக காண்கிறோம்.

> ***புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே.***
>
> *(கலாத்தியர் 3:1)*

இப்பொழுது நாம் வித்தியாசமான கேள்வியை உற்று நோக்குவோம். உங்களை ஏமாற்றியவன் யார்? நாம் பின்வருகின்ற வசனத்தைக் காண்போமானால் இந்த கலாத்தியர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். தேவன்

அவர்களுக்கு மத்தியில் அற்புதங்களைச் செய்வதைப் பார்த்தார்கள். ஆனாலும் அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். நான் சுட்டிக்காட்ட முயல்வது பின்வருமாறு: நாம் இரட்சிக்கப் பட்டது உண்மை, ஆவியில் ஞானஸ்நானம் பெற்றது உண்மை, அதிசயங்களை அனுபவித்ததும் உண்மை, ஆனால் இவைகளினால் நாம் ஏமாற்றப்படமாட்டோம் என்பது நிச்சயமில்லை. பில்லிசூனியம் என்ற ஒரு வார்த்தையில் எதிரியின் ஏமாற்றும் வல்லமை அடங்கியுள்ளது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தை என்ன நடைபெற்றது என்று விளக்குவது நமக்கு மிகவும் வெளிப்பாடாக உள்ளது.

ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?

(கலாத்தியர் 3:2)

இதில் கலாத்தியர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றிருந்தார்கள் என்பதைக் கவனிக்கவும். பவுல் அவர்களிடத்தில் பரிசுத்தஆவியை நீங்கள் எப்படிப் பெற்றீர்கள்? மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதனாலேயா? அல்லது நற்செய்தியை விசுவாசத்துடன் கேட்பதினாலேயா? என்று பவுலடிகளார் கேட்கிறார்.

ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே. அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக்கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?

(கலாத்தியர் 3:3-5)

கலாத்தியருக்கு அடிமட்டப் பிரச்சனை என்னவென்றால், இயேசு சிலுவையில் அறையப்பட்ட உண்மையை அவர்களுக்குள்ளே வந்த பொல்லாத சாத்தானின் அதிகாரம் முக்கியப்படுத்தாததேயாகும். அதனால் வந்த இரண்டு பிரச்சனைகள் மாம்சீகமும், சட்டதிட்டங்களைப் பின்பற்றுதலுமேயாம். தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற அவரைப் பிரியப்படுத்துவதாகக் கருதி மாம்சீகக் காரியங்களைச் செய்யத் தொடங்கினார்கள். சகலவிதமான சட்டதிட்டங்களை வைத்துக் கொண்டு, தேவனுடைய நீதியை அடைவதற்கு இதையே வழியாகக் கொண்டு பின்வாங்கினார்கள். அப்படிச் செய்ததினால் கிறிஸ்துவின் மரணத்தின் நோக்கத்தை இழந்தனர். இறுதி விளைவை பவுலடிகளார் இவ்வாறு கூறுகிறார்.

நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.

(கலாத்தியர் 3:10)

முக்கியமாக பவுல் சொல்லுகிறார் “நீங்கள் நீதியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு பின்னாகத் திரும்பிப் போய் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தால் நீங்கள் நியாயப்பிரமாணம் முழுமையையும் கடைப்பிடிக்க வேண்டும் இல்லாவிட்டால் சாபத்திற்குரியவர்களாவீர்கள்” என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இஸ்ரவேலர் கானான் தேசத்திற்குள் வந்தபோது முழு நியாயப்பிரமாணத்தையும் எல்லா நேரத்திலும் பின்பற்றாமல் தங்கள் மேலேயே ஒரு சாபத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். சாபத்தை ஏற்படுத்திக் கொண்டதற்கு இது காரணமாக

அமைந்தது. சட்டத்தின் சில பாகத்தைச் சில சமயங்களில் மட்டும் பின்பற்றுவது நமக்கு நன்மை பயக்காது. நாம் சட்டத்தினால் நியாயந் தீர்க்கப்படுவோமானால், முழுச்சட்டத்தையும் எப்போதும் பின்பற்ற வேண்டும். தேவனுடைய பார்வையில், நாம் ஒருபோதும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நியாயந்தீர்க்கப்பட முடியாது. இது சாத்தானின் ஒரு ஏமாற்று வேலை. அது மனிதனின் பெருமையாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

நான் ஆங்கிலேய பட்டாளத்தில் முன் ஆண்டுகளில் சேவை செய்தபோது தேவனுக்குச் சாட்சியாக மாறினேன். என் உடன் போர்வீரர்களின் வாழ்க்கைக்கு மாறுபட்ட விதமாய் வாழ்ந்தேன். உனக்கு என்ன நடந்தது என்று அநேகர் வினவினர். “புரியாத மதத்தைச் சார்ந்தவன்” என்று கேலி பண்ணினார்கள். “நான் மதகாரியங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை, இரட்சிக்கப்பட்டேன்” என்று கூறினேன். பின்னர் இரட்சிப்பைக் குறித்து அவர்களிடம் பேசினேன். ஆச்சரியமாக, அவர்கள் எல்லோரும் தாங்கள் பின்பற்றி வந்த சட்டதிட்டங்களைப் பற்றியே பதிலுரைத்தனர். தனது சொந்த வாழ்விற்கு ஒவ்வொருவரும் ஒரு ஆயத்தப்படுத்தப்பட்ட வரிசையான சட்டங்களையே வைத்திருந்தனர். சொல்லப் போனால் ஒவ்வொரு மனிதனும், தேவன் நீதியை நாடும் போது, “நான் சட்டத்தைப் பின்பற்றுகிறேன்” என்றுதான் பதில் உரைக்கின்றான். “கிறிஸ்தவ மார்க்கம் சில சட்ட திட்டங்கள் மட்டுமல்ல” என்று அநேக இடங்களில் கூறி கிறிஸ்தவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றேன். நாம் அப்படிச் செய்யும் போது சிலுவையின் தரிசனத்தை இழந்துவிடுகிறோம். இவ்வாறிருந்தால் நாம் தேவனின் வல்லமையை இழந்துவிடுவோம்.

கொல்லுதற்குரிய சமய சித்தாந்தம்

கலாத்திய திருச்சபையிலுள்ள பில்லிசூனியத்தின் இருகூறு. மதத்திற்கடுத்த காரியங்களுக்கு மேல் சட்டங்களை அதிகம் மதிப்பதும், மாம்சீகத் தன்மையுமாகும். எங்கு சட்ட

திட்டங்களுக்கு மிக அதிகமாக கருத்துச் செலுத்தப்படுகிறதோ அதன் பின்னணியில் பில்லிசூனியம் இருக்கும். தேவனுடைய நோக்கங்களுக்கு சடங்காச்சாரங்களை முக்கியப்படுத்துவது தடையாக உள்ளது. சிலர் இதை மாம்சத்திற்கடுத்த செயல் என்றும் ஒழுக்கக்கேடானது என்றும் சொல்வார்கள். மேற்கூறிய இரு காரியங்களையும் மதக்கோட்பாட்டை கைவிட்டு சட்டம் பேசுவதை வளர்க்கிறது. இது எவ்வாறு நடக்கக்கூடும்? இச்சியாதிருப்பாயாக என்று சொல்லும்போது நாம் மக்களுக்கு என்ன கொடுக்கிறோம்? என்ன நடக்கிறது? நாம் ஒரு அர்த்தத்தில் அதை வளர்ப்பவர்களாக உள்ளோம். *“ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றபடி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே”* என்று பவுல் ரோமர் 7:7இல் சொல்கிறார். எதிர்மறையான சக்திகள் மாம்சத்தில் செயல்படுகிறது. அது தவிர்க்க வேண்டியதை வளர்த்துவிடுகிறது.

> இந்தக் கோட்பாடு தேவனுடைய நோக்கத்திற்கு மிகப் பெரிய ஒரு பயமுறுத்தல் ஆகும்.

அநேக மக்கள் தாங்கள் போதுமான சட்டதிட்டங்களை உருவாக்காவிட்டால் அவர்களை நம்முடைய ஆளுகையின் கீழே வைக்கமுடியாது என்று கருதுகிறார்கள். நல்லது. அவர்கள் 15 சட்டங்களை உண்டாக்குகிறார்கள். ஆனாலும் மற்றவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே அவர்கள் 30 சட்டங்களை உருவாக்குகிறார்கள். அப்படியும் மற்றவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே மேலும் அவர்கள் 60 சட்டங்களை உருவாக்குகிறார்கள். ஆனால் மக்களை நல்லவர்களாக்க அதிகமாக சட்டங்களை

ஏற்படுத்தும்போது அதிகமாக மாம்ச இச்சைதான் ஊட்டப்படுகிறது. இந்த மாம்ச சிந்தையானது நன்மையானவைகளை உண்டாக்குவதில்லை.

பவுலடிகளாரின் எல்லா நிருபங்களிலும் கலாத்தியர் நிருபம் மிகவும் சுவைமிக்கது. கலாத்தியர் நிருபத்தில் மட்டும் பவுலடிகளார் ஜனங்களுக்கு எழுதும்போது தொடக்கத்தில் தேவனைத் துதித்து எழுதவில்லை. கொரிந்து சபைக்கு எழுதும் போது, அங்கே தேவனுடைய பந்தியில் குடிவெறி, தகாத உறவு மற்றும் விபச்சாரம் இருந்தாலும் பரிசுத்த பவுல் தேவனுடைய கிருபைக்காக நன்றி செலுத்தி ஆரம்பிக்கிறார். அவர் அந்த சபைக்குக் கொடுக்கப்பட்ட கிருபைக்காக நன்றி கூறுகிறார். ஆனால் கலாத்தியருக்கு எழுதும்போது அவர் அங்கே அதிகம் பணி செய்திருந்தாலும் ஒரு நன்றியும் செலுத்தவில்லை. அதற்குப் பதிலாக அவர் இவ்வாறு தொடங்குகிறார். *“உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்”* (கலாத்தியர்1:6) என்ன பிரச்சனை? பவுலடிகளார் சமய சித்தாந்தத்தை, விபச்சாரம் அல்லது குடிவெறி இவைகளுக்கு மேலாக மிகவும் பெரிய அச்சுறுத்தலாக கருதுகிறார். (இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மன்னித்துவிடுவது என்று ஒருபோதும் சொல்லவில்லை)

இப்பொழுது நான் இந்தச் சமயநூல்களைவிடச் சட்டத்தை சிறப்பாகக்கொள்ளும் இந்தக் கோட்பாட்டைப் பற்றி ஒரு விளக்கத்தை முன்வைக்கிறேன். முதலாவது இது தேவனுடைய நீதியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதின் மூலம் முயற்சி செய்வதாகும். தேவன் அதை முன்பாகவே, நியாயப்படுத்துவதை மாற்றிப்போட்டார். அவர் சொன்னார். . . *“நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே.”*

(கலாத்தியர்2:16). அது மிகவும் முடியாத காரியமாகும்.

இதன் இரண்டாவது கருத்து, தேவனிடத்தில் நீதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதனோடு தேவைகளைக் கூட்டுவதாகும். ரோமரில் சொல்லியிருப்பதுபோல், தேவனோடு நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ள வழிமுறைகள் மிகவும் எளிதானதாகும். நம்முடைய பாவங்களுக்காக மரித்த நம்முடைய தேவனாகிய இயேசுகிறிஸ்துவை, இரட்சகரை விசுவாசிக்க வேண்டும். அவரை மீண்டுமாக மரித்தோரிலிருந்து நம்முடைய நீதிக்காக உயிர்த்தெழச்செய்தவரை விசுவாசித்தால் நீங்கள் நீதியுள்ளவர்களாவீர்கள். (ரோமர் 4:22-25)

இதைத்தவிர தேவனுடைய நீதியைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வேறு ஒரு வழியுமில்லை. மற்றபடி எதையும் கூட்டமுடியாது. ஒரு மனிதனாலுமல்ல, ஒரு சபையினாலுமல்ல, ஒரு குழுவினாலுமல்ல, ஒரு போதகராலுமல்ல. இவர்களில் யாருக்கும் தேவனுடைய நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளதைவிட வேறு எதையும் கூட்டிக் கொள்ள அதிகாரம் இல்லை. ஒரு சில சட்டங்களை கடைப்பிடிப்பதால் தேவனுடைய பார்வையில் நீதிமானாய்க் கருதப்படுவோம் என்று சிலர் நினைக்கின்றனர். இது தேவன் புதிய ஏற்பாட்டில் கூறிய காரியங்களுக்கு மேலாக இதையும் செய்ய வேண்டுமென கருதுகின்றனர்.

அத்தியாயம் 5

பில்லிசூனியத்தின் தன்மை

"இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது."

-(I சாமுவேல் 15:23)

இந்த வசனங்கள் ராஜாவாகிய சவுலுக்கு சாமுவேல் தீர்க்கதரிசியால் சொல்லப்பட்டது. சாமுவேல் மிகவும் பாவமான இரண்டை ஒத்திட்டுப் பார்க்கிறார். அது புரட்சி செய்வதும் பிடிவாதம் பிடிப்பதுமாகும். இந்த வாசகம், இவற்றைப்பற்றி தேவன் மதிப்பிட்டுக் கூறுவதை விளக்குகிறது. இரண்டகம்பண்ணுதலும் பில்லிசூனியமும் இரட்டைப் பிறவிகள். முரட்டாட்டம் பண்ணுதலும் விக்கிரகாராதனையும் இரட்டைப் பிறவிகள்.

முதலாவது, முரட்டாட்டம் பண்ணுதலைப் பற்றிக் கவனிப்போம். முரட்டாட்டம் பண்ணுதல் ஒருவிதமான விக்கிரகாராதனை என்று வசனம் சொல்லுகிறது. இது எப்படி உண்டாகிறது? முரட்டாட்டமுள்ள மனிதர்கள் தங்கள் சொந்த கருத்துக்களை விக்கிரகங்களாக ஏற்படுத்திக்கொள்கிறார்கள்.

அந்நிலையில் இதைப்பற்றி இன்று சபையில் கவனித்தால் மிகவும் சுவையானதாக இருக்கும். பொதுவாக நாம் குடிகாரர்களையோ அல்லது பகிரங்கமாக விபச்சாரம் செய்கிறவர்களையோ ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் எத்தனை முரட்டாட்டமுள்ள ஜனங்கள் சபைகளில் இருக்கிறார்கள். தேவனுடைய கண்ணோட்டத்தில் அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்களே. சபைக்குள்ளே யாராவது மரத்தால் செய்யப்பட்ட விக்கிரகத்தைக் கொண்டுவந்து எல்லா ஜனங்களுக்கும் முன்பாக கீழே விழுந்து அதை வணங்கினால் நாம் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. ஆனால் ஐயோ! நாம் அநேக முரட்டாட்டமுள்ள மக்களைப் பொறுத்துக் கொள்கிறோம். அவர்கள் இவ்வாறு இருப்பதை நாம் அனுமதிக்கிறோம். தேவனுடைய பார்வையில் அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்களாவார்கள்.

இப்பொழுது நாம் முரட்டாட்டத்தைப்பற்றிக் கூர்ந்து கவனிக்கலாம். பில்லிசூனியத்தின் ஆணிவேர் முரட்டாட்டம் என்பதை வசனம் சுட்டிக்காட்டுகிறது. எங்கே முரட்டாட்டம் இருக்கிறதோ அங்கே பில்லிசூனியத்தை எதிர்பார்க்கலாம். இதை நான் விடுதலையின் ஊழியத்தில் கற்றுக்கொண்டேன்.

உதாரணமாக ஒரு மனிதன் பில்லிசூனியத்தின் ஆவியிலிருந்து விடுதலை பெறவேண்டுமானால் அவன் முரட்டாட்டமுள்ள குணத்திலிருந்தும் மாறுபடவேண்டும் என்பது மாற்றியமைக்க முடியாத உண்மையாகும். மேலும் நான் முரட்டாட்டத்தின் ஆவியோடு போராடும் போது நான் அங்கே பில்லிசூனியம் இருக்கிறதா? இல்லையா? என்று சோதனை செய்து பார்க்க வேண்டும். அவைகள் இரண்டும் நெருக்கமான உறவை உடையவை.

"எங்கெங்கே நீங்கள் முரட்டாட்டத்தைக் காண்கிறீர்களோ, அங்கெல்லாம் பில்லிசூனியத்தை எதிர்பார்க்கலாம்."

முரட்டாட்ட குணமானது தேவனுடைய முழுமையான அதிகாரத்தைப் புறக்கணிக்கிறது. சவுல் ராஜா இவ்வாறாகத் தான் தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தைப் புறக்கணித்தான். தேவனுடைய வார்த்தையின் அதிகாரம் இல்லாவிட்டால் நம் வாழ்வு நீண்ட காலமாக நிலைத்திருக்காது. ஆகவே நாம் புத்திர சுவிகாரமான அல்லது சரியான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் அதற்குப் பதிலாக முறையில்லாத அதிகாரத்தைப் பெறுவோம். எங்கே நாம் ஒழுங்கற்ற முறையற்ற அதிகாரத்தைப் பெறுகிறோமோ அங்கே தவறான அதிகாரத்தைப் பயன்படுத்துவோம். இந்தத் தவறான அதிகாரம் முரட்டாட்டத்திற்கு வழிவகுத்து பில்லி சூனியத்தை உருவாக்கும். ஆகவே உண்மையாக எங்கே நாம் ஒழுங்கற்ற அதிகாரத்தைக் காண்கிறோமோ அங்கே நாம் பில்லிசூனியத்திற்கும் எதிர்த்து நிற்க பழகியிருக்க வேண்டும்.

இதற்கான ஒரு மிகத் தெளிவான உதாரணத்தை 1960ஆம் வருடத்தில் அமெரிக்காவில் நாம் காணலாம். இளைஞர்கள் எல்லோரும் அதிகமாக அதிகார வடிவிலான செயல்களுக்கு எதிராக தங்களைத் திருப்பிக் கொண்டார்கள். பெற்றோர்கள், சபைகள், அரசுகள் எங்கேயானாலும் சரி எதிர்த்து நிற்கக்கூடிய சந்ததியாகவே இருந்தார்கள். அநேக ஆண்டுகளாக நான் அநேகரான இப்படிப்பட்ட எதிர்க்கும் ஜனங்களோடு எதிர் கொண்டு திருத்த முற்பட்டிருக்கின்றேன். அவர்களில் அநேகர் இன்றைக்குத் தேவனால் சந்திக்கப்பட்ட என்னுடைய நண்பர்களாயிருக்கிறார்கள். யாரெல்லாம் முரட்டாட்டத்திற்குள் செல்லுகிறார்களோ அவர்கள் எல்லோரும் மாயமந்திரம் சார்ந்த செயல்களுக்குள் செல்லுகிறார்கள் என்பதில் எந்த வித விதிவிலக்குமில்லை. அதாவது சாத்தானுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களிலும் பில்லிசூனியத்திலும் ஈடுபடுவார்கள். இதுதான் ஆவிக்குரிய அனுபவத்தின் தத்துவமாகும். முரட்டாட்டத்தில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தால் துரிதமாகவோ அல்லது காலதாமதமாகவோ பில்லிசூனியத்தின் அதிகாரத்திற்குட்படாமல் இருப்பது கூடாத காரியமாகும்.

ஒரு முறை சவுல் இராஜாவின் மாதிரியை நாம் பின்னால் சென்று பார்த்து, அவனுடைய சரிதையை நாம் நினைவுகூருவோமானால், அவர் சாமுவேலினுடைய அறிவுரைக்குக் கீழ்ப்படியாமற்போனார். கொள்ளையிடப்பட்ட எல்லா மிருகஜீவன்களையும் அழிப்பதற்குப் பதிலாக அவைகளில் சிறந்தவற்றைத் தேவனுக்குப் பலியிடுவதற்குக் காணிக்கையாக வைத்திருப்பதாகச் சொன்னான். *"தேவன் நான் உன்னுடைய பலிகளில் பிரியப்படவில்லை. ஏனென்றால், அது கீழ்ப்படியாமையினால் வந்தது"* என்றார். இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுல் எல்லா அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் துரத்திவிட்டான். (Iசாமுவேல்28:3ஆம் வசனத்தைப் பார்க்கவும்) ஆனால் அவனுடைய மரணத்திற்குச் சிறிது முன்பாக சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது கர்த்தர் அவனுக்கு, மறுஉத்தரவு அருளாததினால் அவன் தானே அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் தனது தத்தளிப்பினிமித்தம் தேடினான். இது ஏதோ எதேச்சையாக நடந்ததல்ல. இது அவனுடைய பின் விளைவுக்குக் காரணமாகும். நான் இந்தக் கருத்தை வலியுறுத்த விழைகிறேன். எங்கே முரட்டாட்ட குணம் வருகிறதோ அங்கே உடனேயோ அல்லது பின்னாலோ பில்லிசூனியம் உண்டாகும். நான் மற்றொரு கருத்தையும் அழுத்திக் கூறுகிறேன். எப்பொழுது நீங்கள் பில்லிசூனியத்தை அதட்டுகிறீர்களோ அப்பொழுது (சாத்தானுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட மாயாஜால மந்திரமாகிய அனைத்து வடிவங்களுக்கும்) நீங்கள் இந்த தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்கிறீர்கள். இதனுடைய ஆணிவேருக்கு எதிர்த்து நிற்கவில்லை ஏனென்றால் அந்த வேரானது முரட்டாட்ட குணமாகும்.

பில்லிசூனியத்தின் இரண்டு பண்புக்கூறுகள்

பில்லிசூனியத்தில் இரண்டு பண்புக்கூறுகள் உள்ளன. ஒன்று இயற்கையான பண்புக்கூறு, மற்றொன்று இயற்கைக்கு அப்பாற்பட்ட பண்புக்கூறு. அநேக ஜனங்கள் பில்லி சூனியமானது சரீரத்தில் வேலை செய்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. அது விழுந்துபோன மனிதனின் இயற்கைத் தன்மையின் விரிவாக்கமாகும்.

> ***"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாய் இருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லி சூனியம்."***

(கலாத்தியர் 5:19)

கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் மாயமந்திரத்திற்குப் பதிலாக பில்லிசூனியம் என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. எந்த மொழிபெயர்ப்பை உபயோகித்தாலும் அதே பொருள்தான் கிடைக்கும். பில்லி சூனியம் சரீரத்திற்கான ஒரு வேலையாகும். இது விழுந்து போன மனிதனின் இரட்சிப்பு இல்லாத இயற்கைத் தன்மையின் ஒரு வெளிப்பாடு என்று அர்த்தம் கொள்ளுகிறது. இது நமது மாம்சசிந்தையான தன்மையிலிருந்து வெளிவருகிறது. நம்முடைய விழுந்த நிலையில் நாம் மற்ற ஜனங்களை அடக்கியாள விரும்புகிறோம். நாம் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ அதையே அவர்கள் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். மிகவும் அடிக்கடி நாம் ஒழுங்கற்றவைகளை நடக்கும்படிச் செய்கிறோம்.

மாம்சத்தில் உள்ள பில்லிசூனியத்திற்கான மூன்று வெளிப்பாடுகள்

பில்லிசூனியம் கிரியை செய்வதற்கு மூன்று மைய வார்த்தைகள் உண்டு. இந்தக் கிரியைகள் நடைபெறும்

பொழுது இதை நீங்கள் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் அது பில்லிசூனியத்தோடுகூடிய ஒரு போராட்டமாகும். இந்த மூன்று மைய வார்த்தைகளாவன: அதிகாரம் செலுத்துதல், சூழ்ச்சித்திறனைக் கையாளுதல், மிரட்டுதல் என்பனவாகும். இதன் நோக்கம் கட்டுப்படுத்துவது அல்லது அதிகாரம் செலுத்துதல் ஆகும். இந்த அதிகாரத்தைப் பெறுவதற்காக ஒரு மனிதன் சூழ்ச்சியை அல்லது மிரட்டுதலை சூழ்நிலைக்கேற்ப கையாண்டு ஒரு காரியத்தை செய்ய வைப்பான்.

இது இயற்கையின் தளத்திற்குதான் உரியது என்பதை அறிய வேண்டும். இன்னும் இயற்கைக்கப்பாற்பட்டதைக் கருத ஆரம்பிக்கவில்லை. பில்லிசூனியம் என்பது சமுதாயத்தில் எல்லா தளத்திலும் காணப்படுகிறது. சில உதாரணங்களைத் தருகிறேன். மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒருவித ஒழுங்கினைத் தேவன் தம் குடும்பத்திற்கு வகுத்துள்ளார். கணவன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். (எபேசியர் 5:23ஐப் பார்க்கவும்.) கணவன் என்னும் தலைக்குக் கீழே செயல்படாது இருப்பதை தேவன் மாற்றியமைத்துள்ளார். கணவன் மனைவி அதிகாரத்திற்குக் கீழ் குழந்தைகள் வருகின்றனர். அவர்கள் தேவனுடைய கணிப்பின்படி பெற்றோரின் அதிகாரத்திற்குக் கீழ் வருகின்றனர். பில்லிசூனியம் ஏதோ ஒரு சமாளிப்பின் முறையில் அல்லது அடக்குமுறையின் மூலம் தேவனால் நியமிக்கப்பட்ட நியதியை மாற்றிப் போடுகிறது.

நாம் முதலாவது பிள்ளைகளை எடுத்துக் கொள்வோம். குழந்தைகள் எந்த வயதிலும் அதிகாரம் செலுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். ஐந்து வயதான பிள்ளைகூட அதிகாரத்தை உபயோகிக்கக் கற்றுக்கொள்கிறது. ஒரு வேளை ஒரு தாய் வந்த விருந்தினர்களுக்குத் திண்பண்டங்கள் கொடுத்து உபசரித்துக் கொண்டிருக்கலாம். இந்த சின்னக் குழந்தை, தனது தாய், தான் திண்பண்டம் பெற்றுக்கொள்வதை விரும்பவில்லை என்பதை அறிந்திருக்கிறது. ஆனால் அந்த குழந்தை விருந்தினர்கள் இருக்கும்போது, தாய் தரமாட்டேன்

என்று தாய் சொல்லமாட்டாள் என்பதையும் அறிந்திருக்கிறது. ஆகவே விருந்தினர்கள் அங்கு இருக்கும்போது அவள் உள்ளே வந்து அம்மா எனக்கும் ஒரு திண்பண்டம் கிடைக்குமா என்று கேட்கிறாள்? தாய் என்ன செய்திருப்பாள் என்று நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். அவள் ஒருவேளை கொடுத்திருக்கலாம். இது இப்படியாய் நடக்கும்போது அவள் அதிகாரத்திற்குட்படுகிறாள்.

பில்லிசூனியமானது தாயிலும், தகப்பனிலும்கூட காணப்படலாம். பெண்களிடத்தில் பில்லிசூனியத்தை செயல்படுத்துவது அதிக பொதுவான வழியாகும். மனிதனுக்கு அது பயமுறுத்துவதன் மூலம் செயல்படும். ஆனால் இரண்டு பேருக்குமே குறிக்கோள் ஒன்றுதான். ஒருவரையொருவர் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது. ஆகவே மனைவி தான் உபயோகித்த முறைப்படி தான் நினைத்ததைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் அவள் கண்களை குளமாக்குகிறாள். இதன் மூலம் தனது கணவரின் அன்பைப் பெற்று அவனுடைய வாழ்க்கையைத் துன்பத்திற்குள்ளாக்குகிறாள். இறுதியில் அவன் என்ன செய்கிறான்? அவன் அவள் கேட்டதைக் கொடுத்துவிடுகிறான். கணவனிடத்தில் இவ்வாறு அடிக்கடி நடைபெறுகிறது. ஆனால் கணவன் கொடியவனாக, மிகவும் பலமுள்ளவனாக மோசமான கோபக்காரனாக இருந்து, அவனுக்கு தன்னுடைய வழி பலிக்கவில்லை என்றால் அவன் கத்துகிறான், முரடனாக மாறுகிறான், பயமுறுத்துகிறான். மொத்த குடும்பமும் அவனைச் சூழ்ந்து கொண்டு அவன் சொன்னபடி செய்யும். அவர்களது தந்தை மீண்டும் ஒருமுறை கோபக்காரனாக மாறுவதைத் தடுக்கவே அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். அவன் என்ன செய்கிறான்? அவன் அவர்களை மிரட்டுகிறான். தன் சொந்த வழியின்படி செய்வதே அவனுடைய குறிக்கோளாகும்.

ஒரு கணவனுக்கும் மனைவிக்குமிடையே சில வித்தியாசங்கள் இருக்கலாம். இதற்குத் தெய்வீகமுறை என்னவென்றால் அவர்கள் முகமுகமாக இதைப்பற்றிப் பேசி

ஜெபித்து தேவனைத் தேட வேண்டும். உண்மையான விஷயங்களில் இப்படிப்பட்ட அச்சுறுத்தலை சந்திக்க வேண்டிய அவசியமிருக்காது. அது எப்பொழுதுமே பின்னால் சென்றுவிடுகிறது. இந்த உண்மையான விஷயங்கள் ஒருபோதும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுவதில்லை. இலட்சக்கணக்கான திருமண தம்பதியர் தங்களது கருத்து வேறுபாடுகளை ஒருபோதும் மனந்திறந்து பேசுவதில்லை. ஆனால் ஒவ்வொருவரும் ஒருவர் பின்னால் ஒருவர் சென்று அவனுக்கு வேண்டியதையோ அல்லது அவளுக்கு வேண்டியதையோ சாதிக்க முயற்சிக்கின்றனர். இதுதான் மிரட்டி சாதிக்கும் பாங்காகும்.

பில்லி சூனியத்திற்கான வேதாகம எடுத்துக் காட்டுகள்

பில்லி சூனியத்திற்கான வேதாகமத்திலுள்ள இரண்டு உதாரணங்களாக உயர்ந்த நிலையில் உள்ள தெலீலாளையும் யேசபேலையும் குறிப்பிடலாம். தெலீலாளைப் பொறுத்தவரையில், வேதாகமத்தில் சிம்சோன் மிகுந்த பலசாலியான மனிதனாக இருந்தபோதிலும் தெலீலாள் அவனை விட அதிக பலமுள்ளவளாக இருந்தாள். வேதாகமம் சொல்லுகிறது தெலீலாள் சிம்சோனை வற்புறுத்தினாள். அவனைத் துன்புறுத்தினாள், அவள் அழுதாள். பலவிதமான மனநிலையில் இருந்தாள். அப்பொழுது அவள் அவனைப் பார்த்து "உன் இருதயம் என்னோடு வராதிருக்க உன்னைச் சிநேகிக்கிறேன் என்று எப்படிச் சொல்லுகிறாய்? நீ உன்னுடைய பலம் எதனால் உண்டாயிருக்கிறது என்ற இரகசியத்தை சொல்லாமற்போனாய்" என்று சிம்சோனைத் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருந்தாள். (நியாயாதிபதிகள் 16:4-22 வசனத்தைப் பார்க்கவும்) ஒரு பெண்ணினுள்ளே உள்ள பில்லிசூனியத்தை சமாளிக்க ஒரு சில மனிதர்களே போதுமான பலமுடையவர்களாயிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆம் அவர்கள் மிகவும் சொற்பமே! நான் மிகவும் பலசாலியான மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் ஒரு நிறுவனத்தின் தலைவராகவோ அல்லது முதன்மை செயலாட்சி அதிகாரியாகவோ இருக்கலாம். ஆனால் மனைவியை சமாளிக்க வரும்போது அவர் அச்சுறுத்தப்படுகிறார்.

> "மாம்சத்திற்குரிய செயலான பில்லி சூனியத்திற்கு 3 முக்கிய குறிகள் உண்டு. அவை சூழ்ச்சித்திறத்துடன் செயல்படுதல், பயமுறுத்தி காரியத்தைச் சாதித்தல், அதிகாரம் செலுத்துதல் ஆகியனவாகும்."

வேதாகமத்தின் மற்றொரு எடுத்துக்காட்டு யேசபேல் ஆகும். அவள் கொஞ்சம் கூட இனிமையான பெண்மணியாக இருக்கவில்லை. ஆனால் அவள் தன் கணவனாகிய ஆகாப் இராஜாவை, தான் நினைத்ததை எப்படி செய்ய வைக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தாள். உண்மையாகச் சொல்லப்போனால் அவளே இஸ்ரவேலின் மேல் ஆட்சி செய்பவளாக இருந்தாள். நாம் ஏற்கெனவே கலந்துரையாடின கருத்துக்களுக்கு அவள் புத்துயிர் கொடுப்பவளாக இருந்தாள். அவன் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்பவளாகவும் அதிகாரத்தைப் பறித்துக்கொண்டவளாகவும் இருந்தாள். புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தின விசேஷம் 2ஆம் அதிகாரத்தில் யேசபேல் சபைக்குள்ளாக இருப்பதைப் பற்றி குறிக்கப்பட்டுள்ளது சுவையானதாக உள்ளது. புதிய ஏற்பாடு சபைக்குள்ளே பில்லிசூனியம் ஊடுருறுவுவதைப்பற்றி எச்சரிக்கிறது. ஏற்கெனவே இதை நாம் பல நிகழ்வுகளில் கண்டிருக்கிறோம்.

சபையில் அச்சுறுத்தலுக்கான அநேக எடுத்துக்காட்டுகள் உள்ளன. நாம் ஒரு எடுத்துக்காட்டான பெந்தெகொஸ்தே சபையை எடுத்துக்கொள்ளுவோம். ஒரு இளைஞனான போதகருக்கு அவரது முதல் சேகரத்தில் நூறு மக்களைக் கொண்ட சபை இருந்தது. அவர் சிறிது உணர்ச்சிவசப்படக் கூடியவராகவும், வெட்கப்படக்கூடியவராகவும் இருந்தார்.

அங்கே அவருடைய சபையில் மிகவும் பக்தியான இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். அவர்கள் சாதாரண பக்தியுடையவர்களல்ல மிக உயர்ந்த பக்தியுடையவர்கள். அவர்கள் அந்த சபையை எப்படி நடத்த வேண்டும் என்பதை அறிந்திருந்தார்கள். அவர்கள் அமர்ந்து ஜெப சிந்தையோடு இருப்பதை விட்டுவிட்டு போதகரோடு பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் பலபாஷையில் பேச மற்றொருவர் அதற்கு விளக்கம் சொல்லுவார். இறுதியாக அவர்கள் போதகர் எந்த முறையில் எப்படிச் செயல்பட வேண்டும் என்று சொல்லுவார்கள். இது என்ன? இதுவும் ஒரு அச்சுறுத்தலேயாகும். பில்லிசூனியம் ஒரு மாம்சக் கிரியையாகும். அதற்கு மூன்று விதமான குறியீடுகள் உண்டு. அவையாவன சூழ்ச்சி செய்தல், மிரட்டுதல் மற்றும் அதிகாரம் செலுத்துதல் ஆகும். இந்த மூன்று கிரியைகளுக்கும் எங்கே நீங்கள் எதிர்த்து நிற்கின்றீர்களோ அவைகளின் பின்னே பில்லிசூனியத்தின் வல்லமை இருக்கும். இந்த உண்மைக்கு உங்கள் கண்கள் திறக்கப்படும்பொழுது இதனோடு செயல் தொடர்புகொள்ளுவது மிக எளிதான காரியமாகும். அங்கே உண்மையும் துல்லியமுமான வெளிப்பாடு உண்டு என்பதைப் பற்றி நான் கூறுகிறேன். அவைகள் வேறு ஒரு நாட்டிலோ அல்லது வேறு ஒரு கோளிலோ நடைபெறவில்லை. அவைகள் நம்மைச் சுற்றிலும், நமது சபையிலும், நமது வீட்டிலும், நமது குடும்பத்திலுமே நடைபெறுகின்றன. பில்லி சூனியமானது ஒருபோதும் நன்மையானவற்றைச் செய்யாது. இயேசு சொன்னதை நினைவுகூற வேண்டும். "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்." (யோவான் 10:10) நீங்கள் திருடனை வரவேற்றால் அவன் இந்த மூன்று கிரியைகளையும் துல்லியமாகச் செய்வான் என்று எதிர்பார்க்கலாம்.

பில்லிசூனியத்தின் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்.

பில்லிசூனியமானது மாம்சத்தின் கிரியை என்பதைப் பார்த்தோம். பில்லிசூனியமானது மாம்சத்தின் கிரியை மட்டுமல்ல. ஆனால் அது பிசாசின் ஆவிக்குரிய வல்லமை என்ற உண்மையை இப்பொழுது நாம் கண்டுகொள்ள வேண்டும். இதுதான் கலாத்திய சபையிலே அசைவாடிக் கொண்டிருந்த வல்லமை என்று நான் நம்புகிறேன். நாம் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம் அது சிறிது இயற்கைக்கு அப்பாற்பட்டதைப் பற்றியதாகும். அது மனித ஆற்றலுக்கு மேலானதாகும். இயற்கைக்கு அப்பாற்பட்ட எல்லா வெளிப்பாடுகளும் தேவனிடத்திலிருந்து வருகிறது இல்லை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவைகளில் பெரும்பாலானவை சாத்தானிடத்திலிருந்து வருபவை. மனிதக்குக் கிடைக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்டவை இரண்டு ஆதாரங்களிலிருந்துதான் வருகிறது என்பதை நான் நம்புகிறேன். ஒன்று தேவனிடமிருந்து மற்றொன்று சாத்தானிடமிருந்து. எந்த இயற்கைக்கு அப்பாற் பட்ட வல்லமை தேவனிடமிருந்து வரவில்லையோ அது உண்மையில் சாத்தானிடமிருந்துதான் வருகிறது. தேவனின் இராஜ்யம் ஒரு ஒளியின் இராஜ்யம். தேவனின் இராஜ்யத்தில் நாம் யார்? தேவன் என்ன செய்கிறார் என்பதை அறிந்திருக்கிறோம். ஏனென்றால் அது வெளிச்சத்தில் நடைபெறுகிறது . ஆனால் சாத்தானின் இராஜ்யம் ஒரு இருளின் இராஜ்யம். நாம், எது நம்மை ஏமாற்றுகிறது? எது நம்மை ஆளுகிறது? எது நம்மை நடத்துகிறது? என்பதற்கு எச்சரிக்கையாய் இருப்பதில்லை. ஏனென்றால் அது இருளில் நடக்கிறது .

ஆங்கில மொழியில் விவரிக்கப்பட்டதுபோல, பில்லி சூனியத்திற்கு மூன்று முக்கிய கிளைகளாகிய இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்கள் உண்டு. அவையாவன பில்லிசூனியம், குறிசொல்லுதல், மாந்திரீகம் ஆகும். அவைகள் சாத்தானின்

இயற்கைக்கு அப்பாற்பட்ட தன்மை முழு இடத்திலும் பரந்துவிரிந்து கிடக்கிறது. நான் இதில் ஒவ்வொன்றிற்கும் வேதாகமத்திலிருந்து ஒவ்வொரு உதாரணத்தைக் காட்டி விளக்கப்போகிறேன்.

பில்லிசூனியம்

பில்லிசூனியம் என்பது ஒரு அதிகாரத்தைக் கொடுக்கும் கிளையாகும். அது உருவாக்குவது அதிகாரம். அது வசியப்படுத்துதல், சாபங்கள் ஆகிய செயல்களால் செயல்படுகிறது. தனியான மிகவும் வல்லமை வாய்ந்த பில்லிசூனியத்தின் ஆயுதமானது சாபங்களிடுவதாகும். இது மிகவும் பழமையான ஒரு பழக்கமாகும். எண்ணாகமம் 22இல் நாம் பிலேயாமின் சரிதையைப் பற்றிப் பார்க்கிறோம். அவனை ஒரு சூனியக்கார மந்திரவாதி என்று நாம் அழைக்க வேண்டும். வசனம் 10இல் பிலேயாம் தேவனிடத்தில், பாலாக் தன்னைச் செய்யச்சொன்னதை உள்ளபடி விளக்கிக்கொண்டிருந்தான்.

> ***பிலேயாம் தேவனை நோக்கி: சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்னும் மோவாபின் ராஜா அவர்களை என்னிடத்திற்கு அனுப்பி:***
>
> ***பூமியின் விசாலத்தை மூடுகிற ஒரு ஜனக்கூட்டம் எகிப்திலிருந்து வந்திருக்கிறது; ஆகையால், நீ வந்து எனக்காக அவர்களைச் சபிக்க வேண்டும்; அப்பொழுது நான் அவர்களோடே யுத்தம் பண்ணி, ஒருவேளை அவர்களைத் துரத்திவிடலாம் என்று சொல்லச் சொன்னான் என்றான்.***
>
> *(எண்ணாகமம் 22:10,11)*

இதுதான் வேதாகமப்பண்பாட்டின் பழக்கமாகிய ஒரு நிலையாகும். இதுவே யுத்தத்திற்குச் செல்லும் அரசர்களுக்கும், சண்டைக்குச் செல்லும் மற்றவர்களுக்கும் சாதாரண பழக்கமாயிருந்தது. இயற்கையான சமபூமியில் சண்டை செய்வதற்கு மட்டுமல்ல. பூமியில் அசாதாரண சக்தியோடு யுத்தம் பண்ணுவதற்கும் இவ்வாறே செய்தனர். அவர்கள் தங்களுடைய சூனியக்காரனை அழைத்துத் தங்களது விரோதிகளை சபிக்கும்படிச் செய்வார்கள். (கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு 19ஆம் நூற்றாண்டில் எகிப்து தேசத்து பார்வோன்கள் 66 வித்தியாசமான தேசங்களைச் சாபமிடும்படிச் செய்ததற்கு ஒரு பெரிய பட்டியலே உள்ளது.) போரில் எதிரிகளை எந்த இடத்தில் தோற்கடிக்க வேண்டுமோ அந்த இடத்திற்கு அழைத்து வந்து இவ்வாறு செய்ய முயற்சிப்பார்கள். கோலியாத்தும் தாவீதிற்கு விரோதமாக யுத்தத்திற்கு வரும்பொழுது அவனுடைய தேவனின் நாமத்தினாலே தாவீதை சபித்தான்.

ஒரு வகையாக நோக்குவோமானால் பழங்காலத்து யுத்தங்கள் இரண்டு தேசங்களுக்கு விரோதமான சண்டையல்ல. அவைகள் இரண்டு நாட்டுத் தெய்வங்களுக்கு இடையிலான வல்லமையைச் சோதிப்பதாகக் கருதப்பட்டது. எடுத்துக்காட்டாக தேவன் எகிப்தியர்களோடு செயல்பட்டு இஸ்ரவேலர்களை வெளியே கொண்டு வந்ததை சங்கீதம் சொல்லுகிறது. எகிப்தின் தேவர்கள்மேல் நீதியைச் செலுத்துவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது ஆளுபவர்களுக்கு மட்டுமல்ல. ஆவிக்குரிய ஆளுகை செய்பவர்களுக்கும் பொருந்தும். (யாத்திராகமம் 12:12, எரேமியா43:12; சங்கீதம் 135:8-10, 82:1) பிலேயாம் கூலிக்கு அமர்த்தப்பட்டான். ஏனென்றால் அவன் நன்றாக சாபமிடக்கூடியவன். அதுவே அவனுடைய தொழிலாகவும் இருந்தது.

குறிசொல்லுதல்

இரண்டாவது கிளையாக நாம் ஆராயப்போவது குறிசொல்லுதலாகும். இது அநேக தற்கால மொழி பெயர்ப்புகளில் "வருவது கூறல்" என்று அழைக்கப்படுகிறது. குறிசொல்லுதல் என்பது பில்லி சூனியத்தின் அறிவுப்பூர்வமான கிளையாகும். இதனுடைய உற்பத்தியானது வல்லமையல்ல. ஆனால் அறிவாகும். நான் முன்பே குறிப்பிட்டதுபோல இதுவே மனிதனைப் பாவம் செய்ய வழிநடத்தியது.

அப்போஸ்தலர் 16ஆம் அதிகாரத்தில் குறிக்கப்பட்ட வேத வசனம் மிகவும் தெளிவான உதாரணம் ஆகும். இது பரிசுத்த பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்தில் முதலாவது சேர்ந்து சுவிசேஷத்தை அறிவிக்கும்போது நடைபெற்றது.

> ***நாங்கள் ஜெபம் பண்ணுகிற இடத்திற்குப் போகையில் குறிசொல்லுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறி சொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.***
>
> *(அப்போஸ்தலர் 16:16)*

கிரேக்க மொழி "மலைப்பாம்பின் ஆவியை உடையது" அல்லது ஒரு "மலைப்பாம்பின் ஆவி" என்று சொல்லுகிறது, மற்றொரு வகையில் சொல்லப்போனால் பாம்பின் ஆவி என்பதாகும். புற சமய நம்பிக்கை உள்ள சமுதாயத்தில் பாம்புகள் வழக்கத்திற்கு மாறான அறிவிற்கும் ஞானத்திற்கும் ஆதாரமாகக் கருதப்படுகிறது என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். இந்தப் பெண் என்ன சொன்னாளோ அது முழுவதுமாக உண்மையாக இருந்தது, அது முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கது. அவள் இதை இயற்கையான வழியில் அறிந்துகொள்ளவில்லை. அவள் இதை இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் அறிந்துகொண்டாள். அவள் ஒரு சாதாரண அடிமைப் பெண். ஆனால் அவள் இந்தத் திறமையைப் பெற்றிருந்தாள். இவ்வாறு "வருவதை உரைத்தலின்" மூலம் அவள் தனது எஜமான்களுக்குப் பெருத்த ஆதாயத்தை உண்டு பண்ணினாள். (அவள் ஒரு அடிமையாக இருந்ததால் இந்த வருமானம் அவளைச் சென்று சேரவில்லை. இது அவளுடைய எஜமான்களுக்குச் சென்று சேர்ந்தது).

> ***அவள் பவுலையும் எங்களையும் பின் தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்.*** *(அப் 16:17)*

இதில் வியக்கத்தக்க உண்மை என்னவென்றால் அவள்

இறந்தகாலத்தைப் பற்றிச் சொல்லியது எல்லாம் உண்மையாக இருந்தது. தற்கால ஊழியங்களில் இப்படிப்பட்ட இளமையான பெண் சபையிலே நிரந்தர அங்கத்தினராக ஆக்கப்பட்டிருப்பாள் என்று நான் விமர்சிக்கிறேன். பரிசுத்த பவுலும் சீலாவும் யார் என்பதை அறிந்துகொண்ட முதல் பெண்மணி அவளேயாவாள். ஆனால் அவள் தேவ ஆவியினால் இதைச் செய்யவில்லை, குறிசொல்லுதலின் ஆவியால்தான் இதைச் செய்கிறாள் என்பது பவுலடியாருக்குத் தெரியும். இது பின்வருவதை உரைக்கும் ஆவியாகும். இறுதியில் அவர் திரும்பிப் பார்த்து, இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அந்த ஆவியை வெளியே வரும்படிக் கட்டளையிட்டார். அது வெளியே வந்தபின் அவளால் மீண்டும் குறிசொல்ல இயலவில்லை. அவளுடைய எஜமான்கள் மிகவும் கோபங்கொண்டு தங்களுடைய வருமானங்களை இழந்துவிட்டதால் பரிசுத்த பவுலையும் சீலாவையும் மற்றவர்களையும் நியாயாதிபதிகளுக்கு முன்பாகக் கொண்டு வந்தார்கள். (அப்போஸ்தலர் 16ஆம் அதிகாரத்தின் மீதிப் பகுதியை வாசியுங்கள்.) ஏனென்றால் ஒரு சாதாரண அடிமைப் பெண் குறி சொல்லும் ஆவியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக முழு நகரத்திலும் கலகம் உண்டாகியது.

இதன் கருத்தாவது பவுலடிகளார், இயற்கையான உலகப் பிரகாரமான தளத்தில் சாத்தானின் இராஜ்யத்தோடு மட்டுமல்லாமல் இதனோடுகூட வானமண்டலத்திலுள்ள சாத்தானின் இராஜ்யத்தோடுகூட செயல்பட்டார். ஏனென்றால் சபைக்கு விரோதமான அவர்களுடைய திட்டத்தினால் ஆத்திரம் அடைந்தார்கள். பரிசுத்த பவுல் எங்கெங்கு சென்றாரோ அங்கெல்லாம் கலகம் உண்டாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது. பின்பு 2கொரிந்தியரில் அவர் *"தன்னை மோசம்போக்குகிற சாத்தானின் தூதனை அங்கே கண்டேன்"*என்று சொல்லுகிறார். (2 கொரிந்தியர் 2:7) அது சாதாரண ஒரு உவமை அல்ல என்பதை நான் நம்புகிறேன். இது அவர் சொன்னபடியே உள்ளது. பவுலடிகளார் சென்ற

ஒவ்வொரு நகரத்திலும் கலகத்தை உருவாக்கிய சாத்தானின் தூதனோடு அவர் போராடுகிறார். ஏன் நமக்குக் கலகம் இல்லை? நாம் போதுமான அளவுக்கு சாத்தானை சட்டை செய்வதில்லை. சபை எப்படி இருக்க வேண்டுமோ அப்படியில்லாவிட்டால் அங்கே அதிகமான கலகங்கள் உண்டாகும் என்று நான் நம்புகிறேன். அதனோடு கூட அங்கே அதிக எழுப்புதலும் உண்டாகும். கலகங்கள் இல்லாமல் போகும். கஷ்டப்பட்டதற்குரிய கிரயம் மதிப்புள்ளதுதானா? என்பதைக் குறித்து நாமே முடிவெடுத்துக்கொள்ள வேண்டும்.

மாந்திரீகம்

நாம் ஆராயப்போகிற மூன்றாவது கிளையானது மாந்திரீகமாகிய கிளையாகும். அடிக்கடி ஆனால் ஒதுக்கித் தள்ளும் பாங்குடைய மாந்திரீகம் மருந்து நீர் அல்லது அழகு ஆகிய பொருள்களின் மூலமாக வேலை செய்யும். அடிப்படையாக அதிர்ஷ்டம் என்று சொல்லப்படுகிற குதிரைலாடம், குழி முயல் பாதம் ஆகியன இவற்றுள் அடங்கும். மற்றும் மனிதர்கள் அதிர்ஷ்டம் அடைவதற்காக எடுத்துச் செல்லும் எல்லாப் பொருள்களுமாகும். மாந்திரீகம் காதல் வயப்படக்கூடிய மருந்து நீர் கொடுத்தல் மூலமாகவும் செயல்படும். இது மிகவும் சாதாரணமான விஷயமாகும். ஒரு பெண்மணி "நான் இந்த மனிதன் என்னைக் காதலிக்குமாறு செய்ய வேண்டும். ஆகவே நான் மந்திரவாதியிடம் சென்று மருந்து நீர் வாங்கி அவனுடைய ஆகாரத்தில் கலப்பேன்" என்று சொல்லலாம். அதன்பின்பு அவன் அவளைக் காதலிக்க ஆரம்பிப்பான்.

> "முழுமையான போதை மருந்து பண்பாடு மாந்திரீகம் வேலை செய்வதற்கு ஒரு தெளிவான உதாரணம் ஆகும்."

என்னுடைய மனைவி ரூத்தும் நானும் ஒன்று சேர்ந்து ஜாம்பியாவில் சில கிறிஸ்தவ சகோதர சகோதரிகளோடு இருந்தோம். நாங்கள் அங்கு இருக்கின்ற சமயத்தில் பிள்ளைப்பேறற்ற மலட்டு ஸ்திரீகளாயிருந்த எல்லாப் பெண் மணிகளுக்காகவும் ஒரு ஜெபத்தை ஏறெடுத்தோம். ஆப்பிரிக்கபெண்களுக்கு அது ஒரு அவப்பேறு ஆகும். கிறிஸ்தவ பெண்மணிகள் என்று சொல்லிக்கொள்ளுகிற சுமார் நானூறு பெண்மணிகள் அந்த ஜெபத்திற்கு வந்திருந்தார்கள். நாங்கள் ஜெபத்தை ஆரம்பிக்கும் முன்பு ஒரு பெண்மணி "உங்களில் எத்தனை பேர் உங்களுடைய மலட்டுத் தன்மை நீங்குவதற்காக மந்திரவாதிகளிடம் சென்று மருந்து நீர் வாங்கிக் குடித்தீர்கள்" என்று கேள்வி கேட்டார். அதற்கு இரண்டு பேரைத்தவிர மற்ற எல்லோரும் கைகளை உயர்த்தினார்கள். இது எங்களை, நாங்கள் அடிக்கடி நிகழாத அல்லது அசாதாரண பழக்கங்களோடு செயல்படவில்லை என்று அறியச் செய்தது.

மாந்திரீகம் போதை மருந்துகள் மூலமும் செயல்படுகிறது. மாந்திரீகத்திற்கான கிரேக்க வார்த்தை நேரடியாக போதை மருந்துகள் என்ற வார்த்தையிலிருந்து பிறந்தது. முழுமையான போதை மருந்து பண்பாடு மாந்திரீக வேலை செய்வதற்கு ஒரு தெளிவான உதாரணம் ஆகும். அந்த மக்களில் பெரும்பான்மையானவர்கள் அனைவரும் இயேசுவினிடத்திற்கு வரும்பொழுது அவர்கள் அந்த வல்லமையிலிருந்து மீட்கப்படுவது அவசியமாகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 9ஆம் அதிகாரத்தில் மாந்திரீகத்தைப் பற்றிய ஒரு விளக்கத்தை நாம் இப்பொழுது பார்க்கலாம். இந்தப் பகுதி வருங்காலத்திற்குரிய ஒரு காட்சியை விளக்குகிறது. மனித வரலாற்றிலே பொல்லாதவர்கள் மீது வரக்கூடிய தேவனுடைய நியாயத்தீர்ப்பு விளங்கும்போது அவர்கள் மேல் வரக்கூடியதாகும்

அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும் கேட்கவும்

நடக்கவுமாட்டாதவைகளுமாயிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டு மனந்திரும்பவுமில்லை;

தங்கள் கொலைபாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை.

(வெளிப்படுத்தின விசேஷம் 9:20,21)

மாந்திரீகத்துடன் கூட பாலியல் விபச்சாரமும் கொடூரமும் ஒன்றாகச் செல்லுகிறது. பயங்கரமான கொடூரமும் தலையெடுப்பது நம்முடைய சமகால நாகரீகத்தில் அதிகமாக மாந்திரீகத்தின் வேலையேயாகும். நாம் இந்த காரியங்களுக்காக ஜெபிக்கிறோம். இந்த கிளைக்காக நாம் ஜெபிப்பதைத் தாண்டி நாம் ஆணிவேரான பில்லி சூனியத்தையும் எதிர்த்து நிற்பது அவசியமாகிறது.

பில்லிசூனியம் உரிமை பெறாத அதிகாரத்தை உருவாக்குகிறது.

நாம் முன்பாகவே பில்லி சூனியம் எதிர்ப்பில் வெளிப்படுகிறதென்றும் அது உரிமை பெறாத அதிகாரத்திற்கு ஆதரவாக இருக்கிறது என்றும் பார்த்தோம். எதிர்ப்புகள், சபைகளில் தனக்குரிய சில குறிப்பிட்ட செயல்கள் மூலமாக சட்டப்பூர்வமல்லாதவற்றை உருவாக்குகிறது. இந்தச் செயலில் மாறுத்தரமாக சீர்கெடச்செய்கிற உதாரணங்களை நான் கூற முடியும்.

ஆவிக்குரிய வாழ்விற்கு மேலாக இம்மைக்குரிய வாழ்வு

பில்லிசூனியமானது இம்மைக்குரிய இன்பத்தை மேலோங்கச்செய்து ஆவிக்குரியதைக் குறைக்கிறது. பழைய ஏற்பாட்டின் மாதிரிப்படி பில்லி சூனியமானது இஸ்மவேலை ஈசாக்குக்கு மேலாக பாராட்டுவது. இஸ்லாமிய மதம் என்ன

செய்கிறதோ அதில் இது திட்டமாக விளங்குகிறது. இஸ்லாமிய மதம், ஆபிரகாம் ஈசாக்கைப் பலி கொடுக்கவில்லை இஸ்மவேலையேக் கொடுத்தார் என்று போதிக்கிறது. இஸ்லாமியர்கள் இஸ்மவேல்தான் உரிமையுடைய வாரிசு என்று நம்புகின்றனர். இவ்வாறு தான் பில்லிசூனியம் ஈசாக்கை விட இஸ்மவேலை மேம்படுத்துகிறது. நிச்சயமாக இதைத் தவிர இதைவிட இன்னும் மிக அதிகமான இஸ்லாமிய மதத்திலுள்ள எடுத்துக்காட்டுகளில் “இஸ்மவேலைப்” பற்றிக் காணலாம். எந்த ஒரு செயலை நாமாகவே முயற்சி செய்து, தேவனுடைய பரிசுத்தஆவியின் வழி நடத்துதலுடன் செய்யாமலிருக்கிறோமோ அது ஒரு இஸ்மவேலாகத்தான் இருக்கும். இயேசுகிறிஸ்து ஒருபோதும் எதையும் தன்னுடைய சொந்த சித்தத்தினால் செய்யவில்லை. *“பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்.”* (யோவான் 5:19) எந்த நேரத்தில் நாம் சில காரியங்களைத் தேவனுடைய வழிநடத்துதல் இல்லாமல் தொடங்குகிறோமோ அப்பொழுது நாம் ஒரு இஸ்மவேலை உருவாக்கப்போகிறோம். ஆபிரகாமின் அனுபவம் நமக்கு ஒரு ஆணித்தரமான எச்சரிக்கையாக இருக்கிறது. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஆபிரகாம் இஸ்மவேலைப் பெற்றான். வரப்போகிற எல்லா வருடங்களிலும் ஆபிரகாமின் வாரிசுரிமையான வித்துக்கு இஸ்மவேலோடு பிரச்சனைகள் இருந்தது. தற்பொழுது இந்தப் பிரச்சனைகள் மத்திய கிழக்கு நாடுகளில் உச்சக்கட்டமாக வளர்ந்து வருகிறது.

வெளிப்பாட்டைப் பற்றிய இறையியல்

பில்லிசூனியம் இறையியலை உருவாக்கி அதனை வெளிப்பாட்டிற்கு மேலாக வைக்கிறது. இதுதான் சபைகளில் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாக இருக்கிறது. நான் மனந்திறந்து சொல்லப்போனால், இன்றைக்கு அநேக இறையியல் கல்லூரிகள் சாத்தானுடைய வேலைக்காரர்களை

வெளிக்கொண்டு வருகிறது. இது அதிர்ச்சி தரக்கூடியதுதான், ஆனால் உண்மையான வாசகம். சபையின் அதிகமான பிரச்சனைகள் மனித சிந்தனையை தெய்வீக வெளிப்பாட்டிற்கு மேலாக மேன்மைப்படுத்துவதின் விளைவே ஆகும். இது நிச்சயமாக எல்லா இறையியல் கல்லூரிகளிலும் அல்ல, ஆனால் இன்றைக்கு அநேக இறையியல் கல்லூரிகளில் இது உண்மையாகிறது.

சீடத்துவத்திற்கான கல்வி

சபைகளில் உள்ள பில்லிசூனியம் சீடத்துவத்திற்கு மேலாக கல்வியை உயர்த்துகிறது. ஒருவேளை நாம் ஒரு இறையியல் கல்லூரிக்கு அல்லது ஒரு வேதாகமப் பள்ளிக்குச் சென்று வகுப்பறைகளில் மூன்று ஆண்டுகள் உட்கார்ந்தோமானால் தலைநிறைய அறிவைப்பெற்றுக் கொள்ளுவோம். அறிவு என்ன செய்கிறது. அது மேன்மை பாராட்டுகிறது. இயேசுகிறிஸ்து இவ்வாறு செய்யவில்லை. அவர் தமது சீடர்களைத் தன்னைப் பின்பற்றி வரச் செய்து அவருக்குப் பணிவிடை செய்யும்படிச் செய்தார். நாம் நம்முடைய பயிற்சியை சேவை செய்வதற்கு உபயோகிக்காவிட்டால் நாம் தப்பான முடிவுகளையே உண்டாக்கப்போகிறோம். மக்களுக்கு அறிவைப் புகட்டுவதின் ஒரே ஒரு பாதுகாப்பு என்னவென்றால் அவர்களை சேவை செய்வதற்கு உதவி செய்வதாகும்.

பகுத்தறிதலுக்குரிய உளவியல் கல்வி

பில்லிசூனியமானது பகுத்தறிதலுக்கு மேலாக உளவியலை மேன்மைப்படுத்துகிறது. மற்றொரு வகையில் சொல்லப்போனால் உளவியல் சம்பந்தமான சிகிச்சையானது வார்த்தைகளால் செயல்படும் அறிவிற்கு மேலாகக் கருதப்படுகிறது. இயேசு கிணற்றருகில் சமாரிய ஸ்திரீயைச் சந்தித்தபொழுது அவர் அவளிடத்தில் அவளது இளமைப் பருவத்தைப்பற்றிக் கேட்கவில்லை, எப்பொழுது அவள் பிறந்தாள்? அவளுக்கு அவளது பெற்றோர்களால்

பிரச்சனைகள் இருந்ததா? அவளுடைய வாழ்க்கையில் சமுதாயத்தில் நற்பெயரைக் கெடுக்கும் கறை உண்டா? என்றெல்லாம் கேட்கவில்லை. அவர் சொன்னது “உனக்கு ஐந்து புருஷர்கள் இருந்தார்கள்” என்பதை மட்டும் சொல்ல விழைந்தார். இந்த அறிவுப்பூர்வமான ஒரே ஒரு வார்த்தையானது உளவியலின் முழுமைக்கும் மேலோங்கி நின்றது.

இயற்கைக்கு அப்பாற்பட்ட வழி நடத்துதலுக்கு மேலான திட்டங்கள்

பில்லிசூனியமானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வழி நடத்துதலுக்கு மேலாக திட்டங்களை உண்டாக்குகிறது. யூதேயாவில் நற்செய்தியைக் கூற அப்போஸ்தலர்கள் ஒருபோதும் திட்டங்களோடு வரவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால் வெளியே அனுப்பப்பட்டார்கள். அங்கே பிலிப்புவை சமாரியாவிற்கு அனுப்புவதற்கான திட்டம் ஒன்றும் தீட்டப்படவில்லை. அவனுக்கு அங்கே முடிவு வந்தது. அதன் விளைவுகள் பின் தொடர்ந்தது.

இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைக்கு மேலாக பேச்சுத்திறமை

பில்லிசூனியமானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைக்கு மேலாக பேச்சுத்திறனை மேன்மைப்படுத்துகிறது. இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு ஒருபோதும் செவியறிவு பற்றிய பயிற்சியைக் கொடுக்கவில்லை. சார்லஸ் பின்னி (Charles Finney) என்பவர் ஒருமுறை இவ்வாறு கூறினார். “*எல்லாப் பிரசங்கப் பயிற்சிகளும் மக்கள் தாங்கள் பேசுவதை அப்படியே நம்புவதைப் போல் ஆக்குவதாகும்.*” பவுல் சிறந்த அறிஞராக இருந்தபோதிலும் அவர் சொன்னது.

> ***சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது***

அறிவிக்கிறவனாக வரவில்லை.

இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்த்தமானித்திருந்தேன்.

(1 கொரிந்தியர் 2:1-2)

இதன் விளைவாக அவர் சொல்லுகிறார் "நான் பில்லிசூனியத்தை இயேசுவையும் அவரது சிலுவையையும் ஈனப்படுத்த அனுமதிக்க மாட்டேன்" இது மிகவும் முக்கியத்துவமானது. ஏனென்றால் பவுலடிகளார் ஏதென்சுக்கு செல்லும் முன்பாக கொரிந்துவுக்குச் சென்றார். ஏதென்சில் அவர் அந்த ஜனங்களை அவர்களது சொந்த மைதானத்தில் சந்திக்க முயற்சித்தார். அவர் கிரேக்க கவிகளின் வாசகங்களை எடுத்துச்சொல்லி, அறிவுப்பூர்வமான அடிப்படையில் அவர்களைச் சந்தித்தார். ஆனால் இதன் விளைவுகள் மிகவும் ஏமாற்றத்திற்குரியதாயிருந்தது. ஏதென்சிற்கும் கொரிந்துவுக்கும் நடுவில் ஒரு இடத்தில் இருக்கும்போது பரிசுத்த பவுல் "அதனுடைய முடிவு அதுவே! என்று சொல்லுவதாக நான் நிதானிக்கிறேன். இப்பொழுதிலிருந்து நான் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை முன் வைக்கப் போகிறேன்." கொரிந்து சபையிலே இதனுடைய முடிவுகள் பயங்கரமானவைகளாக இருந்தது. ஆரம்ப உலகத்தில் மிகவும் பெரிய சபைகளில் ஒன்றாக கொரிந்து சபை விளங்கி வேர்விட்டு அங்கே வளர்ந்தது.

ஆனால் பரிசுத்த பவுல் ஒரு தீர்மானத்தைச் செய்ய வேண்டியதிருந்தது. "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" (1கொரிந்தியர் 2:2) எந்தவிதக் கேள்வியுமின்றி பில்லி சூனியமானது, இயேசு சிலுவையில் அறையப்பட்ட வெளிப்பாட்டை எதிர்க்கிறது.

அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்.

உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,

(வசனம் 3-4)

இவைகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்முறை விளக்கம் மற்றும் மனிதனுடைய ஞானம் இரண்டும் ஒன்றுவிட்டு ஒன்றாக இருப்பது.

விசுவாசத்திற்கு மேலாக பகுத்தறிவு

பில்லிசூனியம், விசுவாசத்தில் நடப்பதைவிட ஞானத்தை மேம்படுத்துகிறது. தேவன் பகுத்தறிவின் வழியாக நம்மை வழி நடத்தவில்லை. அவர் நம்மை ஒவ்வொரு அடியாக படிப்படியாக நடப்பதற்கு வழிநடத்துகிறார். அவர் ஆபிரகாமை நடத்தியதுபோல நம்மையும் நடத்துகிறார். அவர் நாம் எங்கே போகப்போகிறோம் அல்லது என்ன நடக்கப் போகிறது என்று அவருடைய திட்டத்தை நமக்குக் கூறுவதில்லை. இதுதான் அடுத்த கட்டம் என்று அவர் சாதாரணமாக கூறிவிடுவார். நாம் விசுவாசத்தில் நடக்கும் பொழுது பரிசுத்தஆவியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட அச்சாரம் நமக்குக் கிடைக்கும். நாம் நமது சொந்த ஞானத்தைப் பற்றிக் கொண்டோமானால் நம்முடைய அறிவு எதைக் கொடுக்குமோ அதை மட்டுமே பற்றிக்கொள்ள முடியும்.

அன்பிற்கு மேலாக சட்டதிட்டங்களைப் பின்பற்றுதல்

இறுதியாக பில்லிசூனியமானது அன்பிற்கு மேலாக சட்டதிட்டங்களை மேம்படுத்துகிறது. அதிகமாக சட்ட திட்டங்களைக் கைக்கொள்ளும் மக்கள் கொஞ்சஞ்கூட அன்பில்லாதவர்களாக காணப்படுவது உண்மைதானே! அவர்களைவிட்டு நாம் அகன்றுபோகிறோம். அவர்கள் தங்கள்

விரல்களை நமக்கு நேராக நீட்டி "இதைச் செய்யாதே" "அதைச் செய்யாதே" என்று சொல்லுவதை நாம் விரும்புவதில்லை. அவர்கள் மற்றவர்களை நெருக்கி ஏவுகிறார்கள். யாராக இருந்தாலும் தங்களுக்குரிய விதிமுறைகளைக் கடைப்பிடிக்காவிட்டால் அவர்கள் தவறு செய்பவர்களேயாவர்.

கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்.

(கலாத்தியர் 5:6)

உண்மையான செய்தி என்னவென்றால் அதிகமாக விசுவாசமானது அன்பின் வழியாக செயல்படுகிறது. எந்த வகையான விசுவாசம் என்பதைக் கவனிக்கவும். அது இறையியலின் மூலமாக வந்த விசுவாசம் அல்ல. மற்றும் கொள்கை வேறுபாடுகளால் வந்த விசுவாசமுமல்ல. அது அன்பின் வழியாக செயல்படும் விசுவாசமேயாகும்.

மேலே கூறப்பட்ட ஒவ்வொன்றும் சாத்தானின் தந்திரங்களுக்கும், அவனது பேய்த்தனமான சூழ்ச்சிக்குமான பகுதிகளாகும். இது இயேசு சிலுவையில் அறையப்பட்டதை ஈனப்படுத்துவதாகும். சபையானது ஒரு முறை சிலுவையில் வெற்றி சிறந்தார் என்ற கண்ணோட்டத்தை இழந்தால் அந்த சபை இயேசு சாத்தானின்மேல் வெற்றி கொண்டதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. பில்லிசூனியம் இந்த சபையின் கண்களைக் குருடாக்கி இந்த அத்தியாவசியமான அடிப்படையான உண்மையைக் காணாதபடி மறைக்கிறது. நாம் ஒரு தீர்மானமான முயற்சியை மேற்கொண்டு இந்த பில்லி சூனியத்தின் திரையை நீக்கிவிட்டு சிலுவையின் செயல்களின் மேல் கண்ணோக்கமாய் இருக்க வேண்டும்.

அத்தியாயம் 6

சிலுவையின் செயல்திறன்கள்

"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது."

-(1 கொரிந்தியர் 1:18)

நம்முடைய மனதின் முற்பகுதியில் இந்தப் புத்தகம் முழுவதிலும் நாம் கண்டதை பதித்துவைக்க வேண்டும். சிலுவையிலே இயேசு சாத்தானை முழுமையாகவும், நித்தியமாகவும், மாற்றமுடியாத வகையிலும் தோற்கடித்து வெற்றிசிறந்தார். இதை எப்பொழுதும் எதுவும் மாற்ற முடியாது. இந்த வீழ்ச்சியிலிருந்து சாத்தான் ஒருபோதும் மீள முடியாது. ஆனால் இயேசுகிறிஸ்து தனது வெற்றியை உரிமை பாராட்டுவதை சபைகளிடத்தில் விட்டுவிட்டார். ஆகவே சாத்தானின் தந்திரம் என்னவென்றால் சபையானது வளர்ச்சியடைவதைத் தடுத்து சிலுவையில் நடைபெற்றவைகளை ஈனப்படுத்துவதாகும். நான் முந்தைய அத்தியாயங்களில் குறிப்பிட்டதுபோல, சிலுவையின் சிறப்பினை ஈனப்படுத்தும் பொல்லாத சக்திதான் பில்லிசூனியம் என்றழைக்கப்படுகிறது.

இன்றைய சபையானது, பவுலடிகளார் கலாத்திய சபையைப் பற்றி விளக்குவதைப் போலவே அதே நிலையில் தான் இருக்கிறது.

புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே.

(கலாத்தியர் 3:1)

பில்லிசூனியம் என்ன செய்தது? இயேசு சிலுவையில் அறையப்பட்டதை மறைக்கிறது. சிலுவையின் மேல் வெற்றி சிறந்ததை, அவர் சாத்தானை வெற்றி கொண்டதை ஒருமுறை கண்ணோக்கிப் பார்க்காவிட்டால் இந்த வெற்றியை தனக்கு உரிமையாக்கமுடியாது.

நம்மை நாமே காத்துக்கொள்வதில் நாம் கவனமாக இருக்கவேண்டும். இந்தப் பாதுகாப்பு எப்படி வருகிறதென்றால் சிலுவையின் சிறப்பினை நாம் நம் வாழ்வில் கடைப்பிடிப்பதால்தான். இங்கே இரண்டு காரியங்கள் சிலுவையின் வேலையாகச் சொல்லப்படுகிறது. இயேசு நமக்கு என்ன செய்தார்? அவர் நமக்கு என்ன செய்யப்போகிறார்? முதலாவதாக அவர் நம்முடைய தேவைகளையெல்லாம் சந்தித்து நம்முடைய விரோதிகளையும் தோற்கடித்தார். இதுவே இயேசு நமக்குச் செய்ததாகும். எப்படியாயினும் அநேக மக்கள் அவர் நமக்குச் செய்ததைப் பற்றி ஆச்சரியம் அடைகிறார்களே தவிர சிலுவை நமக்குள் என்ன செய்ய விழைகிறது என்பதைப் புரிந்துகொள்ள ஒருபோதும் முயல்வதில்லை.

சிலுவையானது, நமக்குள்ளே அது செய்யவேண்டிய வேலையைச் செய்யாவிட்டால் நாம் அந்த வெற்றியின் நன்மையை முழுமையாக அனுபவிக்க முடியாது. ஏனென்றால் நம்முடைய சூட்சுமமான, வஞ்சகமான விரோதியானவன்

நம்முடைய போராட்டத்தை ஏற்றுக்கொண்டு நமக்குத் தீங்கு செய்வான்.

"நம்மை நாமே காத்துக் கொள்வதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். இந்தப் பாதுகாப்பு எப்படி வருகிறதென்றால் சிலுவையின் சிறப்பினை நாம் நம் வாழ்வில் கடைப்பிடிப்பதால்"

இப்பொழுது நாம் விசுவாசியின் வாழ்க்கையில் சிலுவையின் ஐந்து விதமான செயல்பாடுகளைக் கண்ணோக்குவோம். ஒரு வகையிலே இது பிரபலமான போதனை அல்ல. நாம் ஐசுவரியத்தை சீக்கிரத்தில் எப்படி அடைவது என்று சொல்லப் போவதில்லை. உங்களுடைய பிரச்சனைகள் எல்லாவற்றையும் நீக்கப்போகிறேன், அல்லது வருகிற ஆறு மாதங்களுக்குள் உங்களுடைய எல்லா ஜெபங்களுக்கும் எப்படிப் பதில் கிடைக்கப்போகிறது என்றும் சொல்லப்போவதில்லை. நான் உங்களுக்காக முக்கியமான உண்மையாகிய சிலுவையின் வெற்றிகரமான செயல்களைச் சுட்டிக்காட்டப் போகிறேன். நான் இதைச் சுருக்கமாக அழுத்தமாகச் சொல்லப்போனால் இயேசு சிலுவையில் தொங்கினபோது பெற்ற வெற்றியைவிட மிகச் சிறந்த வெற்றியை வேறு எப்போதும் பெற்றதில்லை.

பகுதி 1

1. இந்த தற்கால பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து விடுதலை

"பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக;

அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மை தாமே ஒப்புக் கொடுத்தார்."

-(கலாத்தியர் 1:3-4)

தற்போதைய உலகத்தின் முறைமை

இதன் முதலாவது கருத்தாவது, ஆரம்ப இரட்சிப்பை நான் நம்புகிறேன். சிலுவையின் வழியாக இதுதான் தேவனுடைய நோக்கம் என்பதை அறிந்துகொள்ளும் வழியாக நாம் இந்த பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து விடுவிக்கப்படுவோம். உண்மையாக நமக்கு என்ன செய்ய விரும்புகிறார்? நம் மூலமாக என்ன செய்ய விரும்புகிறார்? என்ற அவருடைய சித்தத்திற்கு ஒத்துப்போவதில்லை. சிலுவையின் மூலமாக வந்த நான்கு மற்ற மீட்புகளைப் பற்றி கலாத்தியர் நிருபத்தில் காண்கிறோம். நாம் அவைகளை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம். ஆனால் நான் மற்ற நான்கும் ஆரம்ப மீட்பின் அடிப்படையில் வருவதாக நம்புகிறேன். அவைகள் இந்தத் தற்கால பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து உண்டாகிறது. தேவனின் நோக்கமானது நம்மை இந்தப் பொல்லாத உலகத்திலிருந்து இரட்சிப்பதே என்பதை நாம் முழுமையாக அறிந்துகொள்ளுகிறோமா?

புதிய ஏற்பாட்டிலுள்ள இரண்டு கிரேக்க வார்த்தைகள் நம்முடைய தற்கால சமுதாயத்தைப் பற்றி சித்தரிக்கின்றது, இது எப்பொழுதும் துல்லியமாக மொழிபெயர்க்கப்படவில்லை. முதலாவது வார்த்தை *காஸ்மாஸ்* (Kosmos) இந்த வார்த்தையிலிருந்து காஸ்மோனட் (Cosmonaut) மற்றும் காஸ்மாலஜி (Cosmology) என்ற வார்த்தைகள் பெறப்படுகின்றன. இவைகள் சரியாக "உலகம்" என்று மொழி பெயர்க்கப்படுகிறது. அது புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது போல "இந்த உலகத்தைக்" குறிக்கவில்லை. அது இந்தத் "தற்போதைய உலகத்தின் முறைமை"என்று பொருள்படுகிறது. இந்தத் தற்கால உலகத்தின் முறைமையின் உயர்ந்த தன்மை என்னவென்றால் அது தேவனின் நீதியுள்ள அரசுக்கு ஒப்படைக்கவில்லை. அது தேவனை எதிர்த்து நிற்கும் ஒரு முறைமையாகவே உள்ளது. மற்றொரு வகையாகச் சொல்லப்போனால் சபையானது உலகத்திலிருந்து அழைக்கப்பட்ட ஒரு கூட்ட மக்களாலானது. இதுதான் சபை என்ற வார்த்தையின் அர்த்தமாகிறது. அதாவது "அழைக்கப்பட்ட ஒரு கூட்டம்" என்பதாகும். யோவான் 15ஆம் அதிகாரத்தில் உலகம் என்ற வார்த்தை ஒரே வசனத்தில் 5 முறைகள் வந்திருக்கின்றன.

நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.

(யோவான் 15:19)

இங்கே நாம் இந்த உலகத்திற்கும் சபைக்கும் இடையில் அல்லது மத்தியில் ஒரு முழுமையாகப் பிரிக்கும் கோட்டைக் காணலாம். உலகமானது தேவனுக்கு விரோதமாகப் போராடுகிறது. சபையானது இயேசுவை ஜனங்களின் தேவனாக வரும்படி முழுமையான தெரிந்தெடுப்பாக இருக்கும்படி அழைத்துத் தேவனிடத்தில் ஒப்படைக்கிறது. சபை எவ்வளவு அதிகமாக தேவனிடத்தில் ஒப்படைக்கப்படுகிறதோ அவ்வளவு அதிகமாக உலகமானது

அதைப் பகைக்கிறது.

இயேசு தன்னுடைய சகோதரர்களுக்குச் சொன்னதாவது, *“உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சி கொடுக்கிற படியினாலே அது என்னைப் பகைக்கிறது”* (யோவான் 7:7) இன்று உலகம் சபையை வெறுக்காததற்குக் காரணம் சபையினுள் உலகம் பாதி வழிக்குள் வந்து விட்டதே. உலகம் ஏன் தன்னுடையதை வெறுக்க வேண்டும்? சபை உலகத்தை மேற்கொள்ளப்போகிறது என்ற தற்கால போதனையும் ஒன்றுண்டு. நாம் அதை நம்புவதில்லை. இப்போது அது வேறு விதமாய் உள்ளது. உலகம் சபையை மேற்கொண்டுவிட்டது. சபையை விட்டு, உலகம் வெளியேற்றம் செய்யப்படும்போது, சபை உலகத்தை விட்டுத் தனியாகப் பிரியும்போது உலகம் சபையை எவ்வளவாய் வெறுக்கிறது என்பதை நாம் கண்டு கொள்வோம்.

தற்கால பொல்லாத பிரபஞ்சம்

புதிய ஏற்பாட்டில் தற்கால சமுதாயத்தைக் குறிக்கும் வார்த்தை (aion) ஏயான் என்பது ஆங்கிலத்தில் ஒரு யுகத்தைக்(an age) குறிக்கும் இயான் (eon) என்ற சொல்லாகும். இது காலத்தை அளக்கும் ஒரு அளவாகும். தேவனுடைய நேரத்தின் திட்டமாவது பல காலங்களை உள்ளடக்கியது. அது ஒன்றன்பின் ஒன்றாக வருவது. மேலும் வோதாகமத்திலுள்ள அழுத்தமான வார்த்தை *“நித்திய நித்தியமாக”* என்பது *“காலாகாலமாக”*[1] என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. இதன் பொருளாவது

1 பார்க்கவும்: 1 கொரிந்தியர் 29:10; நெகேமியா 9:5; சங்கீதம் 9:5; 10:16; 21:4; 45:6,17; 48:14; 52:8; 111:8; 119:44; 145:1,2,21; 148:6; ஏசாயா 30:8; 45:17; எரேமியா 7:7; 25:5; தானியேல் 2:20; 12:3; மீகா 4:5; கலாத்தியர் 1:5; எபேசியர் 3:21; பிலிப்பியர் 4:20; 1தீமோத்தேயு 1:17; 2தீமோத்தேயு4:18; எபிரேயர் 1:8; 13:21; 1பேதுரு 4:11; 5:11; வெளி. 1:6; 4:9-10; 5:13-14; 7:12; 10:6; 11:15; 14:11; 15:7; 19:3; 20:10 மற்றும்22:5.

“காலங்கள், ஒவ்வொரு காலமும் காலங்களைக் கொண்டது”. இவ்வாக்கியத் தொடரின் ஆழமான அர்த்தத்தை மனித மனதால் புரிந்து கொள்ள முடியாது.

காலம் என்ற வார்த்தை கலாத்தியரில் காணப்படுகிறது. *“அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்.”* (கலாத்தியர் 1:4)

சில எளிதான பொருட்களின் வழியாக உண்மைகள் வேதத்தில் இந்தக் காலத்தைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது மிக முக்கியமான கருத்து என்னவென்றால் அது ஒரு முடிவுக்கு வரப்போகிறது. அது நீண்டகாலமாக நிலைத்து நிற்கப்போவதில்லை. நாம் எல்லோரும் தனிப்பட்ட முறையில் “நன்றி தேவனே” என்று சொல்ல வேண்டும். இந்த உலகம் தொடர்ந்துசெல்ல நான் விரும்பவில்லை. நான் அது குழப்பம் நிறைந்ததாகவும் மோசமான நிலையிலும் சென்று கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

காலங்களைப் பற்றி மத்தேயு 13ஆம் அதிகாரத்திலும் காணப்படுகிறது. பரலோக இராஜ்யத்தைப்பற்றிய சிறந்த உவமையில் இயேசு கோதுமை மற்றும் களைகள் ஆகியன பற்றி விளக்கிச் சொல்லுகிறார்.

> ***அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவ தூதர்கள்.***
>
> *(மத்தேயு 13:39)*

இந்தக் காலத்தின் முடிவில் அறுவடை இருக்கும் என்று இயேசு சொன்னார். அறுவடை வரும்போது காலங்கள் முடிவடையும் என்று பின்வரும் வசனங்கள் வெளிப்படுத்துகிறது.

> ***ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால்***

சுட்டெரிக்கிறது போல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.

மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய இராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து,

அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.

அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

(மத்தேயு 13:40-43)

நீதிமான், பொல்லாங்கன் ஆகிய இருவரும் காலங்கள் முடிவடையும் வரையிலும் ஒன்றாகவே இருப்பார்கள். அவர்களை வேறாகப் பிரிப்பது நம்முடைய பணியல்ல என்பதை நாம் மனதில்கொள்வது அவசியமாகிறது. அது மிகவும் கடினம் ஆகும். வேலைக்காரர்கள் சொன்னார்கள் "*நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்கு சித்தமா?*" என்று (வசனம்28-29) அதற்கு எஜமான், "*வேண்டாம் களைகளைப் பிடுங்கும் போது நீங்கள் கோதுமையையும் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்பு மட்டும் வளரவிடுங்கள்*" என்றார். ஆனால் இயேசு "உலகத்தின் முடிவில் நான் என்னுடைய தூதர்களை அனுப்புவேன் அவர்கள் களைகளைப் பிடுங்கிவிட்டு, கோதுமையை விட்டுவிடுவார்கள்" என்றார்.

இதே அதிகாரத்தில் மீன்களை வாரிக்கொள்ளும் வலையின் உவமையில் இயேசு இவ்வாறு கூறுகிறார்.

இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவ தூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.

(வசனம் 49-50)

இந்த உலகமானது முடிவிற்கு வந்துவிடும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுவது மிகமிக முக்கியமானதாகும். இந்த உலகம் காலாகாலமாக நிலைத்து நிற்கும் என்று நாம் வாழ்ந்து கொண்டிருப்போமானால், நாம் ஒரு ஏமாற்றத்தில் அல்லது ஒரு மயக்கத்தில் வாழுகிறவர்களாவோம். இந்த உலகம் ஏன் பொல்லாததாக இருக்கிறது என்பதற்குரிய உண்மையான காரணத்தைப் பற்றி அடுத்துப் பார்க்கலாம்.

எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும்.

தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.

(2 கொரிந்தியர் 4:3-4)

இந்தப் பிரபஞ்சத்தின் தேவன்

அவிசுவாசிகளின் மனதைக் குருடாக்குகிறவன் யார்? சாத்தானே! அவன் யார்? அவன் "இந்தப் பிரபஞ்சத்தின் தேவன்". இந்த உலகம் முடிவடைவதை அவன் விரும்பாததில் அதிசயம் ஒன்றுமில்லை. ஏனென்றால் இந்த உலகம் முடிவடைந்தால் அவன் தொடர்ந்து தேவனாக இருக்க முடியாது. ஆனால் சபையின் பொறுப்பு என்னவென்றால் இவ்வுலகம் முடிவடைவதற்குமுன் உரிய காரியங்களைச் செய்ய வேண்டும். அதாவது சாத்தான் தேவனாக இருந்து ஆட்சி செய்வதை முடிவடையச் செய்ய வேண்டும்.

எபிரெயர் 6ஆம் அதிகாரத்தில் அதன் எழுத்தாளர் வருங்கால உலகின் வல்லமைகளை உணர்ந்த ஆவிக்குரிய மனிதர்களின் அனுபவங்களைப் பற்றி எழுதுகிறார்.

ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்,

தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்,

(எபிரெயர் 6:4-5)

இங்கே ஐந்து அனுபவங்கள் காணப்படுகின்றன. நாம் பிரகாசிக்கப்படுகிறோம், பரம ஈவை ருசிபார்க்கிறோம் (நித்திய வாழ்வு), பரிசுத்தஆவியைப் பெற்றிருக்கிறோம், தேவனுடைய நல்வார்த்தையையும் ருசிபார்த்திருக்கிறோம், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் பார்த்திருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில், பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் எடுக்கும்போது இவைகள் அனைத்தும் பெறப்படுகின்றது. பரிசுத்தஆவியினால் நீங்கள் திருமுழுக்கு பெறும்பொழுது நீங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு பிரசன்னத்தில் மூழ்குகிறீர்கள். அது இக்காலத்திற்கு இயற்கைக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் அடுத்து வரும் காலங்களில் இயற்கையாகிவிடும். இதிலே நாம் இனிவரும் உலகத்தின் வல்லமை எவ்வாறு இருக்கும் என்பதை சிறிது ருசி பார்த்திருக்கிறோம். இவ்வுலகத்தின் ருசியைக் கெடுப்பதற்கு தேவன் நமக்குப் பரலோக ருசியைத் தந்திருக்கிறார். இவ்வுலகத்தின் ஆசைகளுக்குப் பின்னாக கிறிஸ்தவர்கள் ஏன் செல்ல வேண்டும். இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்திருக்கிறோமே.

இந்தப் பிரபஞ்சத்தை எதிர்த்து நிற்றல்

முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பெலனற்றுப் போவான்.

(மத்தேயு 13:22)

இந்த மொழிபெயர்ப்பில் “உலகம்” என்று சொல்லப்படுகிற வார்த்தையின் சரியான மொழிபெயர்ப்பாவது “காலம்” என்பதாகும். இந்த உலகத்தின் கவலைகள் தேவனின் வசனத்தை நெருக்கிப்போடுகிறது. இதனால் கனிகொடுக்க முடியாதபடி செய்கிறது. நாம் “இந்தக் காலத்தின்” பகுதியானவர்களாக இருக்க முடியாது. ஏனென்றால் அவ்வாறு நாம் இருந்தோமானால் நாம் உலகத்தின் கவனத்தினாலும் பிரச்சனைகளினாலும் நாம் அதிகாரம் செலுத்தப்படுவோம். அவர்கள் நம்மை ஆவிக்குரிய வகையில் கனி கொடுக்க முடியாதபடி ஆக்கிவிடுவார்கள். நாம் வித்தியாசமான உலகத்திற்குரியவர்களாக வாழ்க்கையை வாழ வேண்டும்.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

(ரோமர் 12:2)

நாம் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரிக்க முடியாது. நம்முடைய பிரச்சனையின் தீர்வு சட்டதிட்டங்களின் பட்டியல் அல்ல. ஏனென்றால் அது உள்ளான மனிதனை மாற்றுவதல்ல. இதற்குத் தீர்வு என்னவென்றால் நம்முடைய மனது மாற்றப்பட வேண்டும். ஏனென்றால் நாம் வித்தியாசமான முறையில் வாழுவோம். இதுதான் மதத்திற்கும் கிருபைக்கும் உள்ள வித்தியாசமாகும். மதம் வெளிப்படையான சட்டங்களை உள்ளடக்கியது. நாம் என்ன உடை உடுக்க வேண்டும்? நம்முடைய முடி எவ்வளவு குட்டையாக இருக்க வேண்டும்? எவ்வளவு உதட்டுச் சாயம் நாம் பூச வேண்டும்? என்பன போன்ற மற்ற கண்ணோட்டங்களாகும். பரிசுத்த பவுல் முக்கியமாகச் சொன்னார் “உலகம் சிந்திக்கிற வகையில் சிந்திக்காதீர்கள். உங்கள் மனதிலே மாறுபட்டவர்களாக இருங்கள். பரிசுத்தஆவியானவர் உங்களுக்கு ஒரு வித்தியாசமான எண்ணத்தை உருவாக்கட்டும். செயல்களை மதிப்பிட்டுப் பார்க்க வேண்டும். வித்தியாசமான முக்கியத்துவங்கள், வித்தியாசமான விருப்பங்கள்,

வித்தியாசமான குறிக்கோள் ஆகியன. பின்பு நீங்கள் வித்தியாசமான முறையில் வாழ்வீர்கள்.

பிறகு பரிசுத்த பவுல் விளக்குவது என்னவென்றால் மனம் புதிதாகும்போது நாம் நன்மையானவற்றை, ஏற்றுக்கொள்ளக் கூடியவற்றை, தேவனுடைய சரியான சித்தத்தைத் தெரிந்து கொள்ள முடியும் என்பதாகும். பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் தங்கள் மனதைப் புதுப்பித்துக் கொள்ளாததினால் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள முடிவதில்லை. மனது தேவனுக்கு எதிரான விரோதியாகும். தேவன் தன்னுடைய இரகசியத்தைத் தன்னுடைய எதிரிகளுக்குத் தெரியப்படுத்தமாட்டார். ஆனால் நம்முடைய மனது புதிதாகும்போது தேவன் தன்னுடைய இரகசியத்தைக் காண்பிக்க ஆரம்பிப்பார். நம்முடைய வாழ்க்கைக்குரிய திட்டங்களையுங்கூட வெளிப்படுத்துவார். இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் பரலோகத்தை அடைவார்கள், ஆனால் நான் பயப்படுவது என்னவென்றால் உலகத்திலிருக்கும்பொழுது அவர்கள் தேவனுடைய திட்டத்தை இழந்துவிட்டார்கள் என்பதாகும். ஏனென்றால் அவர்கள் மனதிலே புதிதாகவில்லை. ஆகவேதான் நாம் இந்த உலகத்திற்குரியவர்கள் அல்ல.

புதிய ஏற்பாட்டிலே 2தீமோத்தேயு பெரிய இழப்புகளில் ஒன்றைப் பற்றிக் கூறுகிறது. பரிசுத்த பவுலின் மிகவும் நம்பிக்கைக்குரிய நீண்டகால உடன் ஊழியக்காரன் அவரை விட்டுப் பிரிந்து சென்று விட்டான். *"ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்"* (2தீமோத்தேயு4:10)

> "நாம் எப்பொழுது வித்தியாசமான முறையில் சிந்திக்கிறோமோ அப்பொழுது வித்தியாசமான முறையில் வாழ்வோம்."

இது தேமா பாவத்தில் மூழ்கிவிட்டான் என்று சொல்லவில்லை. அவன் விபச்சாரம் செய்கிறவனாயாவது குடிகாரனாயாவது மாறவில்லை. ஆனால் அவன் இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்துவிட்டான். அவன் இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்ததினால் ஒரு முடிவிற்கு வந்தான். அதனால், பவுலடியாரோடு மேலும் தொடர்ந்து செல்லுவது அவனுக்கு முடியாமற்போயிற்று. இதுவே கர்த்தருக்குச் சேவை செய்ய அழைக்கப்பட்ட பெரும்பான்மையான மக்களின் உண்மையான அனுபவம் என்று நான் கருதுகிறேன். இப்பிரபஞ்சத்தின் ஆசையானது அவர்களது அழைப்பை நிறைவேற்ற முடியாமல் நெருக்குகிறது. தேவனுடைய ஒரு ஊழியக்காரன் இவ்வுலகத்தில் அன்பு கூற முடியாது. இந்தத் தற்கால உலகத்தை எதிர்த்து நிற்க நாம் நம்முடைய மனதை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இந்தப் பிரபஞ்சத்திலிருந்து மீட்கப்பட்டதின் விளைவுகள்

இப்பிரபஞ்சத்திலிருந்து மீட்கப்பட்டதற்கு முக்கியமான இரண்டு விளைவுகள் உண்டு.

பரலோகத்தில் குடியுரிமைப் பெறுதல்

சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்.

ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன்.

(பிலிப்பியர் 3:17-18)

அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதிகளல்ல. ஆனால் சிலுவைக்கு விரோதிகள். மற்றொரு வகையாகப்

பார்ப்போமானால் எவ்வளவு காலம் அவர்கள் தேவையானவற்றையெல்லாம் அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்கிறார்களோ அவ்வளவு காலம் அவரிடத்தில் நண்பர்களாயிருப்பார்கள்.

அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்.

(வசனம் 19)

சிலுவையை ஏற்றுக்கொள்ள மறுப்பதினால் உண்டாகும் விளைவுகளையும் பவுல் விவரிக்கின்றார். நாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அநேக நற்காரியங்களைச் சொல்ல முடியும், அவரை நம்முடைய இரட்சகர் என்று அழைக்கவும் முடியும். ஆனால் நாம் சிலுவையைத் தழுவவில்லையானால் இப்படியே நம்முடைய முடிவும் இருக்கும். அநேக நவீன கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய வயிறுதான் தேவன். உண்மையைச் சொல்லப்போனால் அவர்கள் தங்கள் வயிற்றுக்குள் புகுத்துவதிலேயே அதிக ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள். தேவனுக்காக என்ன செய்யவேண்டும் என்பதை விட மேலே கூறியதே முக்கியமானதாக இருக்கிறது. எந்த இனத்தினரும் எந்த மரபினரும் அல்லது இராஜ்யமும் இந்தப் பிரச்சனைக்கு விதிவிலக்கானதல்ல.

ஆனாலும் இந்த சோதனையை எதிர்த்து நிற்கிறவர்களுக்குப் பவுல் நம்முடைய **குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது** என்று சொல்லுகிறார். பரலோகத்தின் குடியிருப்பு என்பது நமக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது? எனக்கு பிரிட்டிஷ் குடியுரிமையும் அமெரிக்கக் குடியுரிமையும் உண்டு. இந்தச் சலுகை எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலான குடியுரிமை என்னவென்றால் பரலோகத்தின் குடியுரிமையேயாகும். எனக்குப் பரலோகத்தின் குடியுரிமை உண்டு. இது ஒன்றே ஒன்றுதான் முக்கியமான விஷயமாகும். இதுதான் சிலுவையைத் தழுவிக்கொண்டு இந்த உலகத்தின் பொல்லாப்புகளிலிருந்து பிரித்தெடுக்கப்படுவதின் விளைவாகும். நீங்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால் உங்களுடைய குடியுரிமை பரலோகத்திலிருக்கிறது.

உங்களுக்கு எந்த தேசத்திலாவது குடியுரிமை இருந்தால் அந்த தேசத்தின் பயண இசைவு சீட்டை(Passport) பெற்றுக்கொள்ள உரிமையுண்டு. உங்களுக்குக் குடியுரிமை இருக்கும் தேசத்திற்கு நீங்கள் வரும்பொழுது பயண இசைவு இல்லாத ஜனங்களை விட உங்களை மிகவும் வித்தியாசமான வகையில் சேர்த்துக்கொள்வார்கள். நீங்கள் எப்பொழுதாவது வரிசையில் நின்று இதைக் கவனித்திருக்கிறீர்களா? என்னுடைய மனைவி அமெரிக்கக் குடியுரிமை மட்டுமே பெற்றவள். ஆகவே நான் பிரிட்டனுக்கு வரும்பொழுது, நான் அமெரிக்க நுழைவுச் சீட்டுடன்தான் வந்தேன். “மற்ற பயண இசைவு சீட்டுகள்” என்ற வரிசையில் நாங்கள் நின்றோம். இங்கிலாந்து பயண இசைவு சீட்டு உள்ள ஒவ்வொருவரும் வரிசையில் நிற்காமல் நேராகச் சென்றுவிட்டார்கள். ஆனால் நாங்கள் அமெரிக்க தேசத்திற்குத் திரும்பி வரும்போது மற்ற ஜனங்கள் வரிசையில் நின்று காத்துக் கொண்டிருக்க நாங்கள் நேராக நடந்து சென்றுவிடுவோம். சரியான பயண இசைவு சீட்டு வைத்திருப்பது மிகவும் முக்கியமானதாகும். நீங்கள் சரியான குடியுரிமை பெற்றிருந்தால்தான் உங்களுக்கு சரியான நுழைவுச்சீட்டு கிடைக்கும். நீங்கள் பரலோகத்திற்குள் நுழைவதற்குரிய சரியான நுழைவுச் சீட்டைப் பெற வேண்டுமானால் பரலோகத்தின் சரியான குடியுரிமையைப் பெற்றிருக்க வேண்டும். நீங்கள் எந்த நாட்டின் குடியுரிமையைப் பெற்றிருக்கிறீர்களோ அந்த நாட்டிற்குள் சுதந்தரமாக நுழையலாம்.

இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கல்

நமக்குப் பரலோக இராஜ்யத்தில் குடியுரிமை இருப்பதோடு மட்டுமல்ல, நாம் இயேசு கிறிஸ்துவின்

வருகையை எதிர்நோக்கி இருக்கிறோம். இந்தத் தற்கால பொல்லாத உலகத்திலிருந்து மீட்கப்படுதலே இந்த இரண்டாவது குறியாகும். பரிசுத்த பவுல் இதை இவ்வாறாக வெளிப்படுத்துகிறார்.

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

(பிலிப்பியர் 3:20)

நாம் இயேசுகிறிஸ்துவிற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறோமா? அவர் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்காக மட்டுமே மீண்டும் வரப்போகிறார்.

அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,

கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.

(எபிரெயர் 9:27-28)

அவர் தனது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு முன்னால் தோன்றுவார். நாம் இந்த உலகின் பொல்லாப்பிலிருந்து மீட்கப்படாவிட்டால் நாம் இயேசுகிறிஸ்துவிற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாக இந்தப் பொல்லாத உலகத்திலிருந்து மீட்கப்பட்டிருப்பதால் இந்தச் செயல்முறையின் விளைவாக நமக்குப் பரலோக இராஜ்யத்தில் குடியுரிமையுண்டு. நாமும் பரலோகத்திலிருந்து தேவன் திரும்பவும் வருவதற்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறோம்.

பகுதி 2

நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை

நாம் இப்பொழுது கலாத்தியரையும் சிலுவையினால் வழங்கப்பட்ட இரண்டாவது இரட்சிப்பையும் நோக்கிப் பார்ப்போம். நான் முன்பு கூறியதுபோல மீதியுள்ள இந்த நான்கு இரட்சிப்புகளும் ஆரம்ப இரட்சிப்பிலிருந்து வேறுபட்ட வகையாய் உள்ளது. இந்தப் பொல்லாத உலகத்திலிருந்து என்பதன் பொருளாவது, இந்தப் பொல்லாத உலகத்திலிருந்து முழுமையாக மீட்கப்படுவதேயாகும். நமக்குப்பின் வருகின்ற நான்கு இரட்சிப்புகளும் நமக்கு வேண்டும் என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.

-கலாத்தியர் 2:19

இயேசுகிறிஸ்து மரிக்கும்பொழுது நானும் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன். என்னுடைய பழைய மனுஷனும் சிலுவையிலறையப்பட்டான். ஆகவே சிலுவையின் வழியாகவும் இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாகவும் அது என்னுடைய விசுவாசத்தினாலும் நானும் நியாயப் பிரமாணத்திற்கு மரித்தேன். இதை நாம் புரிந்து கொண்டோமானால் இது அதிசயிக்கத்தக்கதாகும். நியாயப் பிரமாணம் கடைசியாக செய்யக்கூடியது நம்மை மரணத்திற்கு ஒப்புவிப்பதாகும். இதுதான் அதனுடைய இறுதியான தண்டனை. அது நமக்கு மரணத்தைக் கொடுக்கும்போது இதற்கும் மேலாக அது நமக்கு ஒன்றுமே செய்ய முடியாது. ஒருவன் மரணத்திற்கு ஒப்புவிக்கப்படும் போது அவன் அதற்குப் பிறகு நியாயப்பிரமாணத்திற்குட்பட்டவனல்ல. நியாயப்பிரமாணத்தை விட்டு வெளியே வர வேண்டுமானால் அதற்கு ஒரே வழி மரணமாகும். தேவனுடைய கிருபையினால்

நம்முடைய மரணம் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது ஏற்பட்டது. *"தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே."* (கலாத்தியர் 2:19) நியாயப்பிரமாணம் எனக்குச் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. எனக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் இனி எந்த உறவும் இல்லை. நான் இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலே நியாயப்பிரமாணத்திலிருந்து பிரிக்கப்பட்டேன்.

> "நியாயப்பிரமாணம் எனக்குச் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. அதோடு இனிமேல் எவ்விதமான உறவும் இல்லை."

நான் இந்தச் செம்பொருளைப் பற்றிச் சொல்லும்போது, ஜனங்களின் முகத்திலே ஒரு அமைதியான ஆச்சரியம் உண்டாவதை நான் அடிக்கடி பார்த்திருக்கின்றேன். அவர்களுக்குச் சீக்கிரத்தில் தேவனுடைய நோக்கம் நாம் நியாயப்பிரமாணத்திலிருந்து மீட்கப்பட வேண்டும் என்பதை எண்ணிப்பார்க்க முடியவில்லை. ஆனால் அதுதான் உண்மை. அதுதான் அவருடைய நோக்கம். அது வேதாகமத்தில் பலமுறைகள் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இங்கே ஒரு மூச்சைத் திணற வைக்கிற ஒரு வாசகத்தைப் பார்க்கிறோம்.

நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.

(ரோமர் 6:14)

முன்னதாக இந்தப் புத்தகத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு பொருட்களைப் பற்றி எடுத்துக்காட்டு கூறியுள்ளேன். அவை நியாயப்பிரமாணமும் கிருபையுமாகும். நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களானால் நாம் கிருபையின் கீழ் வரமாட்டோம். நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டவர்களானால் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களாகமாட்டோம். நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருப்போமா? அல்லது கிருபையின் கீழ் இருப்போமா? என்று நமது மனதை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். நாம், நமது ஒரு காலை இரண்டு வித்தியாசமான உலகத்தின்மேல் வைக்கமுடியாது.

இந்த உண்மையை நாம் கடைப்பிடிக்கும்போது நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக இருந்தால் பாவம் நம்மேல் அதிகாரம் செலுத்தும். உங்களுடைய தெளிவான முடிவு என்ன? பாவத்தின் அதிகாரத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கான ஒரே ஒரு வழி நியாயப்பிரமாணத்திலிருந்து தப்பித்துக்கொள்வதேயாகும். இந்த தெரிந்தெடுப்பு இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் நமக்கு அருளப்பட்டுள்ளது. "நான் நியாயப்பிரமாணத்தின் மூலமாக அதற்கே மரித்தவனாயிருக்கிறேன்."

நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது.

இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

(ரோமர் 7:5-6)

பரிசுத்த பவுல் இங்கே பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டதைக் கூறாமல், நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டதைப் பற்றியே பேசுகிறார்.

இந்தக் குழப்பமான ரோமர் 7ஆம் அதிகாரத்தின் பகுதியில் பவுல் ஒரு பெண் ஒரு மனிதனை விவாகம் பண்ணியதை உபயோகித்து ஒரு ஒப்புமையைக் காட்டுகிறார். *"ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று*

விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல." (வசனம்3) பவுலடியாரைப் பொறுத்தவரையில் நாம் நியாயப்பிரமாணத்திற்குட்பட்டு மாம்சீகத்தை மணம் புரிந்துள்ளோம். அந்த உறவின் மூலமாக எப்பொழுதும் இந்த மாம்சீகம் எதை உருவாக்குமோ அதையே உண்டாக்குகிறது. அதாவது மாம்சத்தின் கிரியைகளையாகும். அவைகளில் ஒன்றுகூட நல்ல கிரியையாக இருக்காது. ஆனால் பரிசுத்த பவுல் ஒரு நற்செய்தியைக் கூறி அறிவிக்கிறார். அதாவது நம்முடைய மாம்சீக சிந்தையானது இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போதே மரித்துவிட்டது. நாம் இப்பொழுது "வேறொன்றைத்" திருமணம் செய்து கொள்ளச் சுதந்தரமாக இருக்கிறோம். இது விபசாரமாகாது. நாம் யாரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்? கிறிஸ்துவை. நாம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் திருமணம் செய்து கொண்டால் நாம் ஆவியின் கனிகளைக் கொடுக்க முன்வருவோம். இதுவே இந்த உறவின் மூலமாக உண்டாகிறது.

> "கொடிகள் சுயமுயற்சியினால் கனிகளைக் கொடுக்க முடியாது. அவைகள் செடியில் நிலைத்திருந்தால் எந்த உதவியுமின்றி கனிகளைக் கொடுக்கும்."

அங்கே இரண்டு விதமான உறவுகள் உண்டு. நீங்கள் இயற்கையான மாம்சீகக் கிரியைகளோடு உறவு வைத்திருந்தால் மாம்சீகக் கிரியைகளைச் செய்ய முன்வந்தால் அது நியாயப் பிரமாணத்திற்குட்பட்ட திருமணமாகும். ஆனால் நீங்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டால் நாம் பரிசுத்தஆவியினாலே இயேசுவோடு இணைக்கப்பட்ட திருமண உறவிற்கு சுதந்தரமானவர்களாக இருப்போம். இதனால் ஆவியின் கனிகளைக் கொடுக்க முடியும்.

இவ்விரண்டுமே நம்முடைய முயற்சியினாலோ அல்லது நற்காரியங்களைச் செய்வதினாலோ கிடைக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. கிறிஸ்தவமார்க்கமானது

நம்முடைய சிறந்த செயல்களைச் செய்யும் மதமல்ல அல்லது முயற்சியால் வரும் மதமுமல்ல. இதன் முக்கிய வார்த்தை உறவு ஆகும். நாம் எதனோடு உறவு வைத்திருக்கிறோமோ அதற்குரியவற்றையே செய்ய முன்வருவோம். நம்முடைய மாம்சீக தன்மையில் இணைந்தோமானால் நாம் எவ்வளவு கடினமாக முயன்றாலும், எத்தனை சட்டதிட்டங்களை உருவாக்கினாலும் அது ஒரு பெரிய காரியமல்ல. நாம் மாம்ச பிரகாரமான செயல்களைத்தான் செய்ய முற்படுவோம். அவைகளில் ஒன்றுகூட நல்ல செயலாக இருக்காது. ஆனால் மற்றொரு வகையில் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தஆவியோடு உண்மையாக இணைந்தோமானால் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து எந்தவித மனித முயற்சியுமில்லாமல் நாம் இயற்கையாகவே ஆவியின் கனிகளைக் கொடுக்க உதவி செய்வார். அது முயற்சியல்ல அது ஐக்கியம். அது புதிய சட்டங்களின் கோர்வையல்ல ஆனால் உறவு. இந்த கருத்து புதிய ஏற்பாட்டில் வெளிப்படையாக சொல்லப்பட்டுள்ளது. தங்களைக் கிறிஸ்தவர்களாகச் சொல்லிக் கொள்ளுகிறவர்கள் இதை ஒருபோதும் அறியாததால் பெரும்பாலானவர்களுக்கு வியப்பாக உள்ளது.

மற்றொரு எளிமையான முறையில் ஒற்றுமையின் விளக்கம் திராட்சைக் கொடியின் உவமை மூலம் விளக்கப்படுகிறது. இது யோவான் 15 ஆம் அதிகாரத்தில் காணப்படுகிறது. *"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்"* (யோவான் 15:5) இது ஒரு அழகான முதன்மையான உவமையாகும். இயேசு கிறிஸ்து *"நான் மெய்யான திராட்சச் செடி என் பிதா திராட்சைத் தோட்டக்காரர்"* (வசனம் 1) என்று கூறுகிறார். பரிசுத்த ஆவி எங்கேயிருக்கிறது? அவரே தாவரத்தின் உயிர். கிளைகள் அதிக முயற்சி எடுத்தாலும் கனிகளைக் கொடுக்க முடியாது. ஆனால் கொடியில் சேர்ந்திருந்தால் மட்டுமே முடியும். கொடியில் நிலைத்திருக்கும் போது

உதவியில்லாமலேயே கனி கிடைக்கும். இதுவும் முயற்சியினாலல்ல ஆனால் உறவினால் தான். ஆகவே நாம் பார்ப்பது என்னவென்றால் நாம் நியாயப்பிரமாணத்திலிருந்து மீட்கப்பட்டோம். இதனால் நம்மில் உண்டான மாம்சீக கிரியைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும். பரிசுத்த பவுல் சொல்லுகிறார் *“மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாய் இருக்கமாட்டார்கள்”* (ரோமர் 8:8) ஒருமுகமாக நாம் இயேசுகிறிஸ்துவோடு உறவு கொள்ளுவதற்காக நாம் திருச்சட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம். இதனால் தேவனுக்குப் பிரியமாக இருந்து நற்கனிகளைக் கொடுக்க முடியும்.

மூன்று விதமான விடுதலைகள்

நாம் இப்பொழுது நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டதின் மூன்று முக்கிய விளைவுகளை ஆராயப்போகிறாம். முதலாவது நாம் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலை பெறுகிறோம்.

ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலை

ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.

அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

(ரோமர்8:1, 3)

ரோமரின் புத்தகம் வடிகட்டிய காபி இங்கே இரண்டு விதமான காபிகள் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். வடிகட்டிய காபி மற்றும் தயார் நிலை காபி

(Instant). வடிகட்டிய காபி தயாரிக்க நீண்டநேரம் ஆகும். ஏனென்றால் அதைத் தயாரிக்க பல நிலைகள் உள்ளன. ரோமர் புத்தகம் வடிகட்டின காபியைப் போன்றதாகும். நாம் தயார்நிலை காபியை ரோமர் 8ஆம் அதிகாரத்தில் பெற முடியாது. நாம் அதற்கு முந்தின 7 அதிகாரங்களையும் படிக்க வேண்டும். அதுதான் வடிகட்டிய காபி. ஆதலால் இதன் விளைவுகள் விலை உயர்ந்தாக இருக்கும். அந்த அதிகாரங்களை நாம் ஆழ்ந்து படித்திருந்தால்தான் “ஆகவே” என்ற பதத்தைத் தெரிந்து கொள்ளமுடியும். அதற்குப் பின்னால் வரும் அதிகாரங்களில் மனிதவர்க்கத்தின் பாவத்தன்மை முழுமையாக அலசி ஆராயப்படுகிறது. மனிதனுடைய பாவத்தன்மையை மாற்ற முடியாமல் மதமானது தோல்வி அடைந்துள்ளது. இதில் ஆபிரகாம் மற்றும் தாவீதின் உதாரணங்கள் காட்டப்படுகின்றது. (அதிகாரம்4)ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் மத்தியில் ஒரு ஒத்திட்டுப்பார்க்கும் பான்மை உள்ளது (அதிகாரம் 5) பின்பு அதிகாரம் 6இல் இந்த வயதான மனிதனுக்குத் தனது பரிகாரத்தை வெளிப்படுத்துகிறார். திட்டத்தை நிறைவேற்றினார். தேவன் அவனை ஒட்டுப்போடவில்லை. அவனை மாற்றி அமைக்கவில்லை அவனை சபைக்கு அனுப்பவில்லை அவனில் அவரது திட்டத்தை நிறைவேற்றினார். இதில் நற்செய்தி என்னவென்றால் இந்த நிறைவேற்றம் இயேசு சிலுவையில் மரித்தபோது நடைபெற்றது.

ரோமர் 7ஆம் அதிகாரம் நமக்கும் நியாயப் பிரமாணத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது. ஏன் நியாயப்பிரமாணம் வந்தது என்று நான் எப்பொழுதும் யோசிப்பதுண்டு. அது சாதாரணமானதுதான் ஆனால் நான் என் சொந்த அனுபவத்தின் மூலமாகவும் ஜனங்களோடு தொடர்பு கொள்ளுவதினாலும், வேதத்திலிருந்து அறிந்து கொண்டதும் என்னவென்றால் இறுதியான தடை, இந்த நியாயப்பிரமாணத்தோடு நாம் எப்படி தொடர்புள்ளவர்கள் என்பதிலிருந்து நாம் வெளியே வரவேண்டும் என்பதே.

அநேக கிறிஸ்தவர்கள் இதனருகே வெல்லுவதே இல்லை. நாம் இந்த வடிகட்டின காபியைப் போல இல்லாவிட்டால் ரோமர் 8ஆம் அதிகாரத்தில் உள்ளபடி வாழ முடியாது. இதன் முக்கிய நிலை என்னவென்றால் "ஆக்கினைத்தீர்ப்பு இல்லை" நாம் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக வந்தமாத்திரத்தில் நாம் ரோமர் 8ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளபடி ஆவியானவரால் ஆளப்படும் வாழ்விலிருந்து வெளியே வந்துவிடுவோம். பிசாசின் தலையாய குறிக்கோள் நம்மை ஆக்கினைத் தீர்ப்பின் கீழ் கொண்டுவருவதே ஆகும். தேவனுடைய வார்த்தையின் நோக்கமாவது, ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து நம்மை விடுவிப்பதேயாகும் என்று ரோமர் 8இல் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

அன்பு செலுத்துவதற்குச் சுதந்தரம்

நியாயப்பிரமாணத்திலிருந்து இரண்டாவது விடுதலை அன்பு செலுத்துவதில் சுதந்தரத்தைக் கொண்டு வருகிறது. நியாயப் பிரமாணமும் கிருபையும் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பது போல நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதும் அன்பும் உள்ளது. நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும் முறைமையில் அன்பு செலுத்துவது மிகவும் கடினம்.

> ***ஒருவரிடத்திலொருவர் அன்புகூறுகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூறுகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.***
>
> *(ரோமர் 13:8)*

கவனித்துப் பாருங்கள். பிறனிடத்தில் அன்புகூருகிறவன் "நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்". இதற்கு மேல் அவன் செய்து முடிக்க வேண்டியது வேறொன்றும் இல்லை.

> ***எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற***

> ***இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூறுகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூறுவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது.***
>
> ***அன்பானது பிறருக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது.***
>
> *(ரோமர் 13:9-10)*

இது மிகவும் இலகுவானது. உண்மையில் இறையியல் வல்லுநர்களுக்கு பிரச்சனையே இது மிகவும் இலகுவானதாகத் தெரிவதுதான். இருந்தாலும் இது உண்மை. கலாத்தியர் இதே கண்ணோட்டத்தில் இதைக் கூறுகிறது.

> ***கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்.***
>
> *(கலாத்தியர் 5:6)*

இறுதியாக மீண்டும் வகைப்படுத்தினால் மிகவும் அதிகமாயுள்ள செயல், விசுவாசம் அன்பின் மூலமாக வருகிறது. இந்த உண்மையிலிருந்து நாம் வழி விலகுவோமானால் நாம் பக்கவழிக்குச் சென்று விடுவோம். நாம் இவ்வாறாக எல்லாவிதமான தந்திரமான இறையியல் கொள்கைகளிலேயும், விளக்கங்களிலேயும், நம்பிக்கைகளிலேயும் வழிவிலகிச் சென்றுவிடுவோம். ஆனால் நாம் எப்பொழுதாவது அன்பின் வழியாக வரும் விசுவாசக் கிரியைகளிலிருந்து வழி விலகிச் சென்றிருக்கிறோமா? நாம் மத்தியிலிருந்து பின்னால் சென்றுவிட்டோம். நாம் சுவிசேஷ நற்செய்தியின் மத்திய நோக்கத்தை இழந்து விட்டோம்.

> ***"உன்னிடத்தில் நீ அன்புகூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக", என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்.***

(வசனம் 14)

நியாயப்பிரமாணம் நம்மைக் கீழ்படுத்தும்போது இப்படிப்பட்ட அன்புகூருவது முடியாத செயலாகும். ஏனென்றால், நாம் மாம்சீகக் கிரியைகளுக்குட்பட்டிருக்கிறோம். நாம் கவனித்தபடி இந்த மாம்சீகத்தன்மை நல்ல கனிகளைக் கொடுக்காமல் மாறானவற்றையே உருவாக்கும்.

பரிசுத்தஆவியினால் வழிநடத்தப்படுவதற்கு சுதந்தரம்.

நியாயப்பிரமாணத்திலிருந்து மீட்கப்பட்டதற்கான மூன்றாவது சுதந்தரம் பரிசுத்தஆவியினால் வழி நடத்தப்படுவதாகும்.

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.

(ரோமர் 8:14-15)

நான் முன்பு கூறியபடி தேவன் நமக்கு அடிமைத்தனத்தின் ஆவியைக் கொடாமல் புத்திர சுவிகாரத்தின் ஆவியைக் கொடுத்திருக்கிறார். தேவன் அடிமைகளை உருவாக்க விரும்பவில்லை. அவர் குமாரர்களையும், குமாரத்திகளையும் உருவாக்க விழைகிறார். தேவனின் பிள்ளைகளுக்கான அடையாளம் இங்குத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அநேக மக்கள் தொடர்ந்து தேவ ஆவியினால் நடத்தப்படுகிறார்கள் இவர்கள் தேவனுடைய பிள்ளைகள்.

சபையின் பின்னணியிலுள்ள அநேக மக்கள் மறுபடியும் பிறப்பதெப்படி என்ற பிரசங்கங்களைக் கேட்டிருப்பார்கள்.

எப்படி பரிசுத்த ஆவியினால் திருமுழுக்கு எடுப்பது என்றும் கேட்டிருப்பார்கள். இரண்டுமே பயங்கரமான உண்மைகள். மறு பிறப்பு நம்மை தேவனுடைய பிள்ளையாக மாற்றுகிறது. பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெறுவது நம்மை தேவனுக்காக இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் உழைக்க நம்மை மேம்படுத்துகிறது. ஆனால் வளர்ச்சி பெற்ற தேவனுடைய பிள்ளையாவதற்கு பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுவதே ஒரே வழியாகும்.

நான் முன்பு பெரிய சபைகளிடத்தில் பேசியிருக்கிறேன், அவர்களிடத்தில் உங்களில் எத்தனைபேர் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவது எப்படி என்று பிரசங்கம் கேட்டிருக்கிறீர்கள் என்று வினவினேன். அடிக்கடி 25%க்கு மேல் ஒருவரும் ஒருபொழுதும் கை உயர்த்தவில்லை. இது ஒரு பெரிய குறைபாடு ஆகும். நாம் நம்முடைய கவனம் முழுவதையும் ஒருமுறை அனுபவங்களுக்காக ஒரு முகப்படுத்துகிறாமே தவிர பரிசுத்த ஆவியினால் தொடர்ந்து வழிநடத்தப்படுவதின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளவில்லை.

இந்த வசனத்தின் வார்த்தைகள் தொடர் நிகழ்காலத்தில் உள்ளது. “எத்தனைபேர் தேவனின் ஆவியினால் ஒழுங்காக நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்” இந்த வசனத்தை கலாத்தியர் 5:18டுடன் சேர்த்தால் நான் எதைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேனோ அதன் முழுமையான சாரத்தைக் காணலாம். ஆனால் நீங்கள் பரிசுத்தஆவியினால் நடத்தப்படும்பொழுது நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாகமாட்டீர்கள். *“நாம் பரிசுத்தஆவியினால் நடத்தப்பட விரும்பினால் நாம் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ் இருக்க முடியாது.”*

மேலும் நாம் பரிசுத்தஆவியினால் வழி நடத்தப்படாவிட்டால் நாம் தேவனின் பிள்ளைகளாக முடியாது. நியாயப் பிரமாணத்திலிருந்து மீட்பு என்பதற்கு பொருள் தேவனுடைய பிள்ளையாவதற்குரிய ஒரு மீட்பு. இது

பரிசுத்தஆவியின் வழிநடத்துதல் மூலம் வரும். நான் உங்களுக்கு இதைச் சொல்ல விரும்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் என்பவர் ஒரு நபர். அவர் பல சட்டங்களின் தொகுப்பு அல்ல. ஒரு இறையியல் கருத்தானவரும் அல்ல. அவர் அப்போஸ்தல விசுவாசப்பிரமாணத்தின் இறுதி வாக்கியமானவர் அல்லர். அவர் ஒரு மனிதன். நாம் அவரை மனிதனாகக் கொண்டு நம்மை அவரோடு உறவுடையவராக ஆக்கிக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். அவரோடு உணர்ச்சிவசப் பட்டவர்களாக இருக்க வேண்டும்.

> "வளர்ச்சி பெற்ற தேவனுடைய பிள்ளையாவதற்கு ஒரே ஒரு வழி பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுவதேயாகும்."

நான் இதை ஒரு பக்தியுள்ள ஜனங்களின் பயங்கரமான பிரச்சனை என்று கருதுகிறேன். நான் சட்டங்களின் பின்னால் சென்றால் எது என்னைத் தடுக்க முடியும் என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். இது ஆபத்திற்குரிய உவமை மூலம் விளக்குகிறது. குறிப்பிடப்பட்ட வேகத்தைத் தாண்டாமல், கடைப்பிடிப்பதை நான் நம்புகிறேன். ஒரு கீழ்ப்படிதலுள்ள குடிமகனாக நாம் வசிக்கும் தேசத்தில் இருப்பதை நம்புகிறேன். எளிமையாக வாழ்வதின் அவசியத்தையும் நான் நம்புகிறேன். ஒரு குடும்பத்தின் செயல்பாடுகளின் சட்ட திட்டங்களையும் நான் நம்புகிறேன். சபையின் காரியங்களை ஒழுங்குபடுத்துவதில் வழிநடத்தக்கூடிய சில எளிய கருத்துக்களையும் நான் நம்புகிறேன். ஆனால் நாம் இவைகளைக் கடைப்பிடிப்பதின் மூலம் நீதியுள்ளவர்களாகி விட முடியாது. இந்தச் சட்டங்கள் சரியானதாகும். நாம் அவைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் நம்முடைய நீதியானது சட்டங்களைக் கடைப்பிடிப்பதினால் உண்டாகாது. நமக்கிருக்கும் ஒரே ஒரு நீதி சட்டத்தைக் கடைப்பிடிப்பது மட்டும்தான். (இலட்ச இலட்சமான கிறிஸ்தவர்களில் இது உண்மை). தேவன் நம்மிடத்தில் விரும்பும் நீதியை நாம் ஒரு போதும் அனுபவித்தது கிடையாது.

பகுதி 3

"நான்" என்பதிலிருந்து விடுதலை

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

-கலாத்தியர் 2.20

இந்த விடுதலை, ஐந்தில் மையமானது என்று கூறுவது பொருத்தமானது. சிலுவை சுயத்தை அழிக்க நாம் அனுமதிக்கும் வரை, நமது வாழ்வில் தேவனுடைய சித்தத்தைக் கண்டுபிடிக்கவோ அல்லது சிலுவையின் பூரண ஆசீர்வாதங்களைப் பெற்று அனுபவிக்கவோ முடியாது. சபையில் பொதுவாக காணப்படும் கெடுதிகளுக்கெல்லாம் சுயமே மூலகாரணமாய் இருக்கிறது. அவை பெருமை, தான் என்ற ஆணவம், சுயமுன்னேற்றம் மற்றும் குறுகிய வகுப்புவாதம், இனப்பாகுபாடு ஆகிய இவை சிலுவையில் அறையப்படாத ஆணவமே. கிறிஸ்தவ சபையில் அதிக வகுப்புவாதத்தைக் காண்கிறோம்.

1950களில் இங்கிலாந்தில் போதகர் பணி செய்யும் போது எங்கள் சபையில் அன்பான ஓர் "ஆவிக்குரிய சகோதரி" இருந்தார். ஆப்பிரிக்காவின் மக்களுக்காக தேவதூதனைப்போல் ஜெபித்தார். ஆனால் தன் பக்கத்தில் ஓர் கறுப்பு சகோதரன் உட்கார்ந்திருந்தால், அது அவர்களுக்கு உறுத்தலாக இருக்கும். நம்மிடத்திலே மறைவாக இனப்பாகுபாடு அதிகமாக உள்ளது. அது சபைக்காக தேவன் வைத்திருக்கும் நோக்கங்களுக்கு முரணானது.

ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.

(பிலிப்பியர் 2:3)

இங்கே விவரிக்கப்பட்ட மனப்பான்மை நமது ஆணவம் சிலுவையில் அறையப்பட்டதால் ஏற்பட்ட விழைவாகும். ஆனால் நமது ஆணவத்தை சிலுவையில் சாகும்வரை விட்டால்தான், அந்த நிலையைப் பெற்றுக் கொள்ளமுடியும். இரண்டு செயல்கள் சபையின் அடையாளமாக, வெளியரங்கமாக்கப்படுகின்றன. அவையாவன போட்டி மனப்பான்மையும் சுய ஆவல்களுமாகும். ஒரு போதகராக இருந்து நான் இன்றைக்கு கிறிஸ்தவ ஊழியத்தில் மிக அதிக அளவிலான சுய ஆவல்களையும் போட்டி மனம்பான்மையையும் பார்த்திருக்கிறேன். இதன் விளைவு? நம்முடைய நான் என்னும் சுயம் சிலுவையில் இன்னும் அறையப்படவில்லை.

நான் இப்போது உண்மையான சபைக்கும் இன்றைய உலகிற்கும் இடையில் உள்ள கருத்தினைக் கோடிட்டுக் காட்டுகிறேன். 2 தீமோத்தேயுவில் பரிசுத்த பவுல் நமக்கு ஒரு விரிவான விளக்கத்தைக் காட்டுகிறார், மனிதனின் பின்வாங்கிய நடத்தையைக் காட்டுகிறார். இதுவே இந்தக் காலத்தின் முடிவுக்கு அடையாளமாகும். இந்த பதினெட்டு நன்னடத்தைக் காரியங்களில், சன்மார்க்க குறைபாடுகளில் எத்தனை வெளியரங்கமாக்கப்படுகின்றன நம்முடைய தற்கால சமுதாயத்தில்?

மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக.

எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,

சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்,

துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும் . . .

(2 தீமோத்தேயு 3:1-4)

நாம் இவ்வாறு சொல்லலாம். இது ஒரு கொடியபட்டியல் ஆகும்.ஆனால், இவ்வித குறைபாடுகளை திருச்சபையில் காண்பதில்லை. இது ஒரு பெருந்தவறு. அடுத்த வசனத்தில் அது சொல்லப்பட்டுள்ளது.

. . . தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து . . .

(வசனம் 5)

வேதத்திற்கடுத்த அல்லது கிறிஸ்துவுடன் சம்பந்தப்பட்டதைத் தவிர மற்ற காரியங்களில் தெய்வீகம் உள்ளது என்ற பதத்தைப் பவுல் பயன்படுத்தவில்லை. இப்படிச் செய்பவர்கள் நாங்கள் ஆலயத்தின் அங்கத்தினர் என்று மாத்திரம் சொல்லக்கூடியவர்கள். ஆனால்

. . . அதன் பெலனை மறுதலிக்கிறவர்களாவும் இருப்பார்கள்.

(வசனம் 5)

என்று பவுல் கூறுகிறார்.

தேவ பக்தியின் பெலனை மறுதலிக்கிறவர்கள், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாய் பயபக்தியாய் இருப்பதுபோல் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முன்பு எப்படி மதத்தை ஆதாயமாகக்கொண்டு

வாழ்ந்தார்களோ அதேவகையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மேலே குறிப்பிடப்பட்ட பட்டியலானது மக்கள் எதை ஆவலுடன் விரும்புகிறார்களோ அதிலே ஆரம்பித்து அதிலேயே முடிவடைகிறது. இந்த பட்டியலின் முதல் செயலானது தங்களைத் தாங்களே நேசித்துக் கொள்ளுகிறவர்களாயிருப்பது அடுத்தது பண ஆசைக்காரர்களாயிருப்பது. இறுதியாக உல்லாசப் பிரியர்களாயிருப்பது ஆகியனவாகும்.

இப்பொழுது நாம் ஒருவரின் நடத்தைக்குரிய இந்த மூன்று குணங்களைப் பற்றி ஒருகணம் சிந்தித்துப் பார்ப்போம். சுயத்தின் மேல் ஆசை, பணத்தின் மேல் ஆசை, இன்பங்களின் மேல் ஆசை இந்த மூன்று குணங்களே நம்முடைய சமகாலப் பண்பாட்டின் கூறுகளாக சாதாரணமாகக் காணப்படுகிறது. நாம் வேகமாக ஒன்றைச் சேர்த்துச் சொல்லுவது இந்த முதலாவது சுயமே". இதுவே மற்றவற்றிற்கு ஆணிவேராக இருக்கிறது. உண்மை என்னவென்றால் அவர்கள் ஆணையிடுவதில்லை, சூதாட்டம் ஆடுவதில்லை, அல்லது மதுபானம் அருந்துவதில்லை, போதை மருந்துகள் அருந்துவதில்லை, அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று சுட்டிக்காட்டுவதற்கு இவைகள் எல்லாம் அவசியமில்லை. இந்த அடிப்படையின் பேரில் நாம் ஒரு கிறிஸ்தவன் என்று உரிமை பாராட்ட முடியாது. இதன் உண்மையாவது, நாம் இப்படிப்பட்ட வெளியரங்கமான பாவங்களைச் செய்வதில்லை. ஆனால் உதாரணமாக நாம் இன்றும் தன்னலம் உடையவர்களாக இருக்கலாம். இந்த உலகத்திற்கும் உண்மையான சபைக்கும் மத்தியிலான வித்தியாசத்தைக் கோடிட்டுக் காட்டும்பொழுது மக்கள் சுயத்திலே பிரியர்களாக இருக்கிறார்களா அல்லது சுயம் சிலுவையில் அறையப்பட்டுவிட்டதா? மேலும் அவர்கள் தங்களுக்காக

"நம்முடைய ஜெபங்களில் எத்தனைபேர் தன்னையே மையப்படுத்தி ஜெபிக்கிறீர்கள்?"

மட்டுமேயல்லாமல் மற்றவற்றிற்காகவும் வாழ்கிறார்களா என்ற வேறுபாட்டைக் காணவேண்டும்.

அடிக்கடி ஒரு சாதாரண சபை அங்கத்தினரின் போலியான ஜெபத்தை நான் கேட்டிருக்கிறேன். "தேவனே என்னை ஆசீர்வதியும், என்னுடைய மனைவி, என்னுடைய மகன் ஜான், அவனுடைய மனைவி ஆகிய எங்கள் நால்வரை ஆசீர்வதியுங்கள். வேறொன்றுமில்லை, ஆமென்" என்பதாகும். இது பக்திக்குரியதுதான். ஆனால் மிகவும் சுயநலத்திற்கானதாகும். அப்படித்தானே? நம்மில் எத்தனை பேர் நம்முடைய ஜெபத்தில் நம்மையே மையப்படுத்தி ஜெபிக்கிறோம். நம்மில் எத்தனைபேர் இந்தக் குறுகிய வட்டத்தைவிட்டு வெளியே வந்து, அதாவது நம்முடைய சொந்த ஆர்வமான காரியங்களையும், நமக்குத் தேவையானவைகளையும் மட்டும் கேட்பதை விட்டு விட்டு வெளியே வந்து ஜெபிக்கிறோம்? ஆனால் தேவன் நமக்கு இந்த ஒருமுகப்படுத்தப்பட்ட ஜெபத்திலிருந்து விடுதலை பெற ஒரு வழியை உண்டாக்கியுள்ளார். இது சிலுவையின் வழியாகத்தான் வரும். நாம் இந்த தீர்மானத்தையும் உறுதியையும் ஏற்படுத்திக்கொள்வோம். "நான் சபைக்காக சிலுவையில் அறைப்பட்டேன். இனி வாழ்வது நானல்ல கிறிஸ்துவே எனக்குள்ளாக வாழுகிறார்" என்ற உறுதியாகும்.

இந்தப்படிக்கு இரண்டு செயல்கள் அவசியம். முதலாவதாக ஒரு தீர்மானம் இரண்டாவதாக சரியான முறையில் அறிக்கையிடுதல். தனிப்பட்ட முறையில் அறிக்கை செய்வது அவசியம் ரோமர் 6ஆம் அதிகாரத்தில் பரிசுத்த பவுல் நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டானென்று அறிந்திருக்கிறோம் (6ஆம் வசனம்) என்கிறார். இது பொதுவான வாசகம். ஆனால் கலாத்தியர் 2:20 இல் பவுலடிகளார் தனது சொந்த சாட்சியைக் கூறுகிறார். "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்."

சிலுவையில் அறையப்பட்ட நான் என்னும் ஆணவம்

நான் என்னும் ஆணவம் சிலுவையில் அறையப்பட்டதினால் நேரிடையாக மூன்று விளைவுகள் உள்ளன.

சேவை செய்வதற்கு சுதந்தரம்

அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச் செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.

உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

(மாற்கு 10:42 44)

பல ஆண்டுகளுக்கு முன் என்னிடத்தில் ஒரு இளைஞன் வந்தான் அவன் அர்ப்பணிப்புள்ளவனாகவும் அநேக தாலந்துகள் உள்ளவனாகவும் இருந்தான். அவன் என்னிடத்தில் "சகோதரர் பிரின்ஸ் அவர்களே நான் உங்களிடத்தில் பணி செய்ய விழைகிறேன்" என்றான். நல்லது, மொத்தத்தில் அது எனக்கு ஒரு நல்ல செய்தியாக இருக்கவில்லை ஏனென்றால் நான் தன்னிறைவு பெற்ற ஒரு மனிதன். நீ இல்லாமலேயே நான் உண்மையாக நன்றாக இருக்கிறேன்" என்று நினைத்தேன். நீ என்னிடத்தில் பணிபுரியத் தொடங்கினால், அநேக நேரங்களில் நான் எனது சொந்த வழியாக நடக்கையில் உனக்கு நான் ஒரு காட்சிப் பொருளாக மாறிவிடுவேன். மேலும் நீ என்னை நான் விரும்பாத சமயங்களிலும் கவனித்துக்கொண்டிருப்பாய். நான் இவ்வாறு கவனிக்கப்படுவேன். ஆகவே நான் இதைப்பற்றி யோசிக்கிறேன் என்று சொன்னேன். ஆனால் தேவனிடத்தில் நான் ஜெபித்துக் கேட்டபொழுது நீ உன்னிடத்தில் பணிபுரிவதற்கு அந்த இளைஞனுக்கு ஒரு தருணம் கொடுக்காவிட்டால் அவனுடைய நியாயமான முன்னேற்றத்தைத் தடுத்துக் கதவை அடைத்தவனாவாய் என்று தேவன் சொன்னார். உடனே அந்த இளைஞனிடத்தில் சரி என்றேன். அதன் பின்பு நானும் அவனும் ஒரு ஆச்சரியமான உறவை வளர்த்துக்கொண்டோம். தேவன் அவனை அவருடைய ராஜ்யத்திற்கு ஆணித்தரமாக முன்னேறும்படிச் செய்தார். இது எனக்கு எத்தனை பெரிய படிப்பினை?

உயர்வு மனிதனால் வருவதில்லை. அது தேவனிடத்திலிருந்து உண்டாகிறது. நாம் பெரியவர்களாக விரும்பினால் வேலைக்காரராக மாற வேண்டும் என்று இயேசு சொன்னார். நாம் எஜமானாக ஆக விரும்பினால் நாம் அடிமையாக மாற வேண்டும். மற்றொரு வகையாகச் சொல்லப்போனால் நீங்கள் மேலும் மேலும் உயரவேண்டுமானால் நீங்கள் தாழ்ந்த நிலையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். மீண்டும் ஒரு முறை இயேசுவின் வார்த்தைகளை நோக்குங்கள். "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்தேயு 23:12 மற்றும் லூக்கா 14:11) இதுவே உலகத்தை ஆட்சி செய்யும் ஒரு சட்டமாகும். உங்களுக்கு உயர்வு வேண்டுமா? நான் உங்களுக்கு அச்சாரம் கொடுக்க முடியும். உங்களைத் தாழ்ந்த இடத்தில் அர்ப்பணியுங்கள். எங்கேயாவது யாரிடத்திலேயாவது பணி செய்ய நாடுங்கள். ஆனால் உங்களிடத்தில் "நான்" என்னும் ஆணவம் அழிக்கப்படாமல் எவ்வளவு காலம் இருக்கிறதோ அவ்வளவு காலம் இதை உங்களால் செய்ய முடியாது. சிலுவையில்

அறையப்படாத சுயமானது சேவை செய்வதைக் கெடுக்கும்.

சபையின் தலைமைத்துவம் மற்றும் அதிகாரம் செலுத்துவதற்குரிய வழி சேவை செய்வதின் மூலமாகத்தான் வரும். இதைத்தவிர அங்கு நியாயமான வழி வேறு ஒன்றுமில்லை. யாராவது ஒருவர் சபையில் அதிகாரம் வகிப்பதற்கான ஒரு நிலையைப் பெற்றாரானால் அதாவது ஏதாவது வேறு ஒரு வழியில் பெற்றாரானால் அந்த அதிகாரத்தை சரியான முறையில் உபயோகிக்க முடியாது.

சொந்த முயற்சியிலிருந்து விடுதலை

சிலுவையில் அறையப்பட்ட சுயத்தின் இரண்டாவது விளைவு சுயமுயற்சியிலிருந்தும் சுய முன்னேற்றத்திலிருந்தும் விடுதலையாவதாகும். என்ன மகிமையான விடுதலை!

"நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்."

(2 கொரிந்தியர் 4:5)

இது எக்காலத்துக்கும் பொருந்தும் ஓர் சிறப்பான அறிக்கை. இதை யார், யாரிடம் கூறினார் என்று பார்க்கும் போது இன்னும் சிறப்பாக விளங்கும். இதைச் சொன்ன, தர்சு பட்டணத்தை சேர்ந்த சுயநீதி பரிசேயனான பவுலைப் பாருங்கள். தானும் தன் நாடும்தான் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று வளர்க்கப்பட்டு விசுவாசித்தவன். பவுல் ஓர் கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்வதற்கும், அநேக ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுவதற்கும் பயிற்றுவிக்கப்பட்டார். இல்லாவிடில், பரிசுத்தமற்றவரும் அசுத்தமானவருமாய் இருப்பார். புற ஜாதிகளை நாய்கள் என்றுகூட குறிப்பிட்டார். பின்னர் இயேசுவை தமஸ்கு சாலையில் சந்தித்தார். இயேசு அவனை மாற்றினார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், கொடுமையான துறை முகப்பட்டணமான கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு எழுதுகிறார். அம்மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்ற வரிசையைப் பார்க்கும்போது, அதிர்ச்சி உண்டாகிறது. அவர்கள் விபசாரிகள், காமதகர்கள், ஓர் இனச்சேர்க்கை உடையவர்கள், குடிகாரர்கள் மற்றும் பொல்லாத பாவச்செயல்களை தங்களுக்குள்ளே நடத்தினவர்கள். ஆனால் அவர்கள் எல்லாம் சுவிசேஷத்தின் வல்லமையினால் மகிமையாக மாற்றப்பட்டனர்.

> "நான் என்னையே நீதிமானாக்கவில்லை என்று கண்டுகொண்ட பின், பெரிய சுமை என்னைவிட்டு அகன்றது."

இப்பேற்பட்ட மக்களுக்கு சில ஆண்டுகளுக்குப் பின்னர் பவுல் எழுதுவதைப் பாருங்கள். *"நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவை கர்த்தரென்றும் எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்."* அது சிலுவையில் அறையப்பட்ட சுயம்!

1957 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்க பள்ளிகளுக்கு ஆசிரியர்களை பயிற்றுவிக்குமாறு கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள கென்யாவுக்கு ஐந்து ஆண்டுகள் சென்றேன். என்னை ஓர் இன வேறுபாடுள்ள மனிதன் என்று நான் எண்ணுவதில்லை. அந்நேரத்தில் நான் எட்டு வளர்ப்பு மகள்களை உடையவனாய் இருந்தேன். அதில் ஆறுபேர் யூதர்கள். ஒருவர் அரேபியர். மற்றொருவர் ஆங்கிலேயர். நான் அந்நிலையில் இருக்கும்போது, தேவனின் வழிக்கு என்னை ஒப்புக்கொடுக்க அதிகம் விரும்பினேன். நான் யார் என்பதை சிந்திக்கலானேன். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக இருந்தேன். ஈட்டனில் படித்த அறிஞராக இருந்தேன். பிரிட்டனின் கல்வி அறிவு வகையில், நான் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தேன். எனது முன்னோர்கள் ஆங்கில பட்டாளத்தின் அதிகாரிகளாக இருந்தனர். என்னையே நான்

இவ்வாறு வினவினேன். கருப்பு மாணவர்களிடம் நான் அல்ல, இனி கிறிஸ்துவே. நான் உமது ஊழியக்காரன். தேவனின் மகிமைக்கென்று நான் இப்படிச் சொல்ல முடியும், நான் மகிழ்ச்சியோடு அதைச் செய்தேன். கிழக்கு ஆப்பிரிக்காவில் தான் மற்ற இடங்களை விட அதிக மகிழ்ச்சியாக ஊழியத்தில் இருந்தேன்.

சுயநீதியிலிருந்து விடுதலை

இறுதியாக, சுயத்தை சிலுவையில் அறைவதின் கடைசி விளைவு என்னவென்றால் நான் நீதிமான் என்று நிரூபிக்கத் தேவையில்லை. எத்தனை அருமையான விடுதலை! என்ன ஆசீர்வாதம்! மக்கள் ஏற்றுக்கொள்ளாமல் போகலாம். வாதிடலாம். “காத்திருந்து, எது சரி என்று பாப்போம். ஒரு வேளை தவறாக இருக்கலாம்.” இது ஆச்சரியமாக இருக்கலாம். ஒரு பிரசங்கியார் தவறாக இருக்கலாம். என்னை நானே நியாயப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என்பதை அறிந்த போது என்னை விட்டு ஓர் சுமை விலகிற்று.

பகுதி - 4

மாம்சீகத்திலிருந்து விடுதலை

“கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்”

-கலாத்தியர் 5:24

நாம் இயேசுகிறிஸ்துவினுடையவர்கள் என்பதற்கு, “நாம் நமது மாம்சத்தை சிலுவையில் அறைந்துவிட்டோம்” என்பதே அடையாளமாய் இருக்கிறது.

1 கொரிந்தியர் 15:23ல் பவுல் தம்முடையவர்களுக்காகவே அவர் திரும்ப வருகிறார் என்று கூறுகிறார். அவருடையவர்கள், தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்தவர்கள் மட்டுமே என்று கலாத்தியரிலுள்ள இந்த வசனம் நமக்குச் சொல்லுகிறது. யாருக்காக இயேசு திரும்ப வருகிறார்? மாம்சத்தை சிலுவையில் அறைந்தவர்களுக்காக. கிறிஸ்தவன் என்று சொல்லியும், மாம்சீக, தன்னலமுள்ள மற்றும் தன் விருப்பப்படி வாழும் எவருக்காகவும் அவர் வரவில்லை. தங்களின் மாம்சீக சுபாவத்தில் சிலுவையைக் கிரியை செய்ய அனுமதித்தவர்களுக்காய் அவர் திரும்பவருகிறார்.

“மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.”

(கலாத்தியர் 5:17)

தேவன் நமது மாம்சீக இயல்பை மாற்றும் முன்னர், அது தேவனுடைய ஆவிக்கு முற்றும் விரோதமாயிருக்கிறது.

“மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப்

பிரியமாயிருக்கமாட்டார்கள்"

(ரோமர் 8:8)

தங்களின் முந்தின மாம்சீக மற்றும் மறுபிறப்பு இல்லாத சுபாவம் உள்ளவர்கள் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. அவர்கள் பக்தி உள்ளவர்களோ, பக்தி அற்றவர்களோ அது முக்கியமில்லை.

ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்திற்குக் கடனாளிகளல்ல. மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்.

(ரோமர் 8:12-13)

மாம்சத்தின் கிரியைகளை மரணத்திற்குட்படுத்துவது நமது பொறுப்பு. கிறிஸ்து அதை சாதகமாக்கினார். அதை நாம் பயன்படுத்த வேண்டும்.

மாம்சம் எவைகளையெல்லாம் உள்ளடக்கியிருக்கிறது என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். அது சிலர் எண்ணுவது போல் விபசாரம் மட்டுமல்ல. அது மாம்சத்தின் முக்கியமான தெரிவித்தல் அல்ல. பயம், கசப்பு, கோபம், பேராசை, இச்சித்தல், பாலின இச்சை மற்றும் மாறிக் கொண்டிருக்கும் மனநிலை - இவையெல்லாம் மாம்ச சுபாவத்தின் வெளிப்பாடு. உற்சாகமற்ற கிறிஸ்தவன், முதன் முதலில் விசுவாச மறுதலிப்பைப் பிரதிபலிக்கிறான். இரண்டாவதாக மாம்சம் சிலுவையில் அறையப்படவில்லை என்பதற்கு அவரே சாட்சி. தேவனின் கிருபையால், நான் அப்பேற்பட்டவன் என்று சொல்ல முடியும். ஏனெனில், சிலுவை என்னில் தன் வேலையை செய்யவும், எனது உற்சாகமிழந்த காரியங்களைச் செயல்படுத்தவும் நான் அனுமதித்துள்ளேன். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் போராடுகின்றன என்பதை நாம் அறிய வேண்டும்.

பகுதி - 5

உலகத்திலிருந்து விடுதலை

"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்."

-கலாத்தியர் 6:14

தேவனுடைய நீதியான அரசிற்கு உட்படாத சமுதாயத்தினின்று சிலுவை நம்மைப் பிரித்து, விடுதலையாக்குகிறது. "உலகத்தினின்று நான் உங்களை அழைத்தபடியால் நீங்கள் உலகத்தில் இல்லை" என்று இயேசு சொன்னார். நமது கண்களையும் காதுகளையும் மூடிக்கொண்டு இயற்பியல் மற்றும் பொருட்கள் கொண்ட உலகம் இல்லாதது போல் நடக்க வேண்டும் என்று தேவன் நம்மைக் கேட்கிறார் என்று இது பொருள்படாது. உலகிலிருந்து பிரிக்கப்படுவதற்கு ஒரே வழி உண்டு. இது நமது வாழ்வில் தேவனுடைய அரசிற்கு முழுமையாய் அர்ப்பணிப்பதேயாகும். உலகம் அப்படி இருப்பதில்லை.

உலகத்தை உற்று நோக்கும்போது, உலகத்திற்கும், நமக்கும் இடையே சிலுவையில் ஒரு சரீரம் தொங்கிக்கொண்டிருக்கிறது. உலகம் நம்மைப் பார்க்கும்போது, அதைத்தான் காண்கிறது. முழுமையான பிரிவினை அங்கே உண்டு. அது உலகில் அல்ல, ஆவிக்குரிய தளத்தில் உள்ளது. நாம் முற்றும் மாறுபட்ட ஆட்சிக்குரியவர்கள். உலகத்தின் எண்ணங்கள், மதிப்பீடுகள், நியாயங்கள், அழுத்தங்கள், வஞ்சித்தல் மற்றும் ஏமாற்றும் காரியங்களிலிருந்து நாம் விடுவிக்கப்படுகிறோம். இப்பிரபஞ்சத்தைச் சாத்தான் தன் ஆளுகைக்குள் வைத்திருக்கின்றான்.

“உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.”

(1 *யோவான் 5:19*)

“உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் . . . ”

(வெளிப்படுத்தின விசேஷம் 12:9)

உலகின் சக்திக்குள் கிறிஸ்தவர்கள் வர ஆரம்பிக்கும் போது, அவர்கள் வஞ்சனைக்குள் வருகிறார்கள். ஏனெனில் தேவனுடைய ஆவியும் இவ்வுலகின் ஆவியும் வேறுபட்டவைகள்.

“நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையேப் பெற்றோம்.”

(1கொரிந்தியர் 2:12)

உலகத்திலிருந்து விடுதலைப் பெற்றதின் பயன்கள்

இவ்வுலகத்தின் ஆவி நமக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட எல்லாவற்றையும் மங்கலாக்கிவிடும். தேவனுடைய ஆவி அவர் நமக்குக் கொடுத்த எல்லாவற்றையும் வெளிப்படுத்தும்.

கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு அர்ப்பணம்

இவ்வுலகிலிருந்து நாம் விடுதலை பெறுவதின் முதற்பயன் தேவனுடைய ராஜ்யத்திற்கு நம்மை அர்ப்பணிப்பதே ஆகும்.

“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.”

(மத்தேயு 6:33)

நான் விரும்பினதுபோல், தேவனுக்கு முழுவதுமாய் உண்மையாயிருக்கவில்லை. ஆனால் பின்னோக்கிப் பார்த்து, எனது சொந்த அனுபவத்தில் அநேக ஆண்டுகளாக மேற்கூறிய வேத வசனம் உண்மை என்று நிரூபித்திருக்கிறேன். அது உண்மை. அது கிரியை செய்யும்.

“இவ்வுலகத்தின் ஆவி நமக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட எல்லாவற்றையும் மங்கலாக்கிவிடும்.”

சாத்தானின் தந்திரங்களிலிருந்து விடுதலை

இரண்டாவதாக, சாத்தானின் தந்திரங்களிலிருந்தும் ஏமாற்றுகளினின்றும் நீங்கள் விடுவிக்கப்படுகிறீர்கள். இது உண்மை. சிறப்பாக இக்காலத்தில் மக்கள் தொடர்பு சாதனங்களில் நமது மனது பொய்யான பிரச்சாரங்களினால் தொந்தரவு செய்யப்படுகின்றது. உண்மையான கருத்தில், அவையாவும் ஆவிக்குரிய விஷயத்தில் உண்மையற்றவை.

பணிந்துகொள்ள மறுப்பதில் விடுதலை

இவ்வுலக அதிகாரத்தினின்று மீட்கப்படுதல் என்பது சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ என்பவர்களைப் போல், உலக விக்கிரகங்களுக்குப் பணிய மறுப்பதாகும். சிறப்பாக இளைஞர் மத்தியில் உலகத்தின் விக்கிரகங்களுக்குப் பணிய அதிக அழுத்தங்கள் உள்ளன. உலக பிரகாரமான வெற்றி, செல்வாக்கு, செல்வம், அதிகாரம், உல்லாசம் மற்றும் வசதி இவைகள் எல்லாம் விக்கிரகங்களில் அடங்கும்.

எபிரெயரில் உள்ள பயபக்தியான வார்த்தைகள் நம்மை உற்சாகப்படுத்தும் சவாலாக அமைகிறது.

ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னும் கொஞ்ச காலத்தில் வருவார், தாமதம்

பண்ணார். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். நாமோ கெட்டுப் போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.

(எபிரெயர் 10:35-39)

இப்பகுதியில் மூன்று முக்கிய எச்சரிக்கைகளைக் காண்கின்றேன். முதலாவது நமது நம்பிக்கையை விட்டுவிடக் கூடாது. திடமான விசுவாசமுள்ளவர்கள் தேவனிடத்திலிருந்து பெற்ற நலமானதை விட்டுவிடாமலிருக்க கவனமாய் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விடாமுயற்சி தேவை. நிபந்தனைகளை நிறைவேற்றுவது ஒன்று. வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்வது மற்றொன்று. வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் செய்வதற்கும், அவை நிறைவேறுதலுக்கும், இடைவேளை நேரம் உண்டு என்பதை அனுபவத்தில் நாம் எல்லோரும் அறிவோம். அந்த இடைவேளை நேரத்தில் நாம் விடாமுயற்சியை அப்பியாசப்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக, வெகுமதி நம் முன்னால் தான் இருக்கிறது என்பதை ஞாபகத்திற்கொள்ள வேண்டும். அப்போதுதான் இறுதி வெகுமதி வரும். அது மட்டும் நாம் தொடர வேண்டும். இப்பாகம் இரண்டே மாற்று நிலைகளைத்தான் தரும். நாம் விடாமுயற்சி செய்ய வேண்டும் அல்லது பின்வாங்கிப் போக வேண்டும். நாம் விடாமுயற்சி செய்தால், வாக்குத்தத்தத்தை சுதந்தரிப்போம். பின்வாங்கினால், அழிக்கப்படுவோம். இது கடினமான வார்த்தை. ஆனால் தேவனுடைய வார்த்தை நம்மை நேரடியாக சந்திக்கும் உண்மையுள்ளதாய் இருப்பதற்காக நான் நன்றியுடையவனாக இருக்கிறேன். நாம் என்ன செய்யப்போகிறோம்? விடாமுயற்சி செய்யப்போகிறாமா? அல்லது பின் வாங்கப்போகிறோமா?

போர் செய்வதற்கு நமது அழைப்பு

தேவனின் சாயலான மனுக்குலத்தை அழிக்கும் முயற்சியில் சாத்தான் பில்லிசூனியத்தை உபயோகிப்பான். எனவே நீங்கள் கண்ணுக்குத் தெரியாத ஓர் விரோதியோடு அவனது இராஜ்யத்தில் போராடுகிறீர்கள். தேவன் சிருஷ்டித்ததை சாத்தான் அகந்தையாலும், குற்றத்தாலும் அழிக்க முயற்சிக்கிறான். ஆனால் தேவன் தனது ஏக மைந்தன் இயேசு கிறிஸ்துவின் ஒரே தியாகபலியால், தான் குனிந்து, தான் சிருஷ்டித்ததை மீட்டுக் கொண்டார். அவருக்கே நன்றி. தனது மரணத்தினால், இயேசு சாத்தானின் துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு உங்களைத் தேவனிடமிருந்து பிரித்துக் குற்றம் மற்றும் பாவத்தை அவித்துப்போட்டார்.

பாவம் இனி நம்மை மேற்கொள்ளாது ஏனெனில் நாம் நியாயப்பிரமாணத்தின் கீழல்ல, கிருபையின் கீழே உள்ளோம் என பவுல் கூறினார்.

விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.

(ரோமர் 10:4)

நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நமக்கு நீதி கிடைக்கும்படிக்கு அவர் நியாயப் பிரமாணத்தின் முடிவானார். கர்த்தரின் வார்த்தையின் பாகமாக அவர் நியாபப்பிரமாணத்தின் முடிவாகவில்லை. இஸ்ரவேலின் பண்பாட்டுச் சரித்திரத்தின் பாகமாக இப்படி ஆகவில்லை. தேவனோடு நீதியைப்பெற்றுத் தருவதற்கு, நியாயப் பிரமாணத்தின் முடிவானார். யூதரோ,

"இயேசு சொன்னதற்கு உங்களை அர்ப்பணிப்பீர்களா? உங்களை வெறுத்துவிடுங்கள். சிலுவையை எடுங்கள் அவரை பின்பற்றுங்கள்.

பிற இனத்தவரோ, பிராட்டஸ்டண்ட் அல்லது கத்தோலிக்கரோ, விசுவாசிக்கிற எவருக்கும் அப்படியேயாகும். சிலுவையில், இயேசுவின் மரணத்தினால் நீதிமானாக எண்ணப்பட வேண்டுமானால், அது நியாயப்பிரமாணத்தின் முடிவு என்று அர்த்தமாகும்.

சிலுவையில் நிறைவேற்றின செயலே, சாத்தானின் மேல் கிறிஸ்து பெற்ற வெற்றியை நிலைநாட்டுகிறது. இக்காலத்தின் பொல்லாப்பிலிருந்தும், இந்த உலக சமுதாயத்தின் அழுத்தங்களிலிருந்தும் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள அதுவே வழி.

ஆனால், நமது முழுமையான விடுதலையைப் பெற்றுக் கொள்ள அதைத் தினமும் நாம் பயன்படுத்த வேண்டும். உங்கள் வாழ்வில் சிலுவையைப் பயன்படுத்த வேண்டும். இப்பொல்லாத காலத்திலிருந்து நீங்கள் மீட்கப்படுவீர்கள் மேலும் நியாயப்பிரமாணம், சுயம், மாம்சம் மற்றும் உலகத்திலிருந்தும் கூட மீட்கப்படுவீர்கள்.

சாத்தானை நீங்கள், படைக்கலங்களினால் நீக்கலாம். சிலுவையை உங்கள் ஆயுதமாக உபயோகித்து சாத்தானின் படைக்கலங்களை நீக்கி, இறுதிப் பாதுகாப்புக்குள் வரலாம். சிலுவையின் அப்பக்கத்திலுள்ள ஓர் இடத்திற்கு வரலாம். கர்த்தரின் வழியைப் பின்பற்ற அர்ப்பணம் செய்யும் போது, நமக்கு அந்தப் பாதுகாப்பு வருகிறது. நம்மை வெறுத்து, சிலுவையை எடுத்து அவரைப் பின்பற்றும் போது அது நமக்குக் கிடைக்கிறது.

இயேசு சொன்னதை நீங்கள் செய்ய உங்களை அர்ப்பணிப்பீர்களா? சிலுவையை எடுங்கள் அவரை பின்பற்றுங்கள்.

பொது அறிக்கையைப் பற்றி டெரிக் பிரின்ஸ்

புதிய ஏற்பாட்டின் மொழியில் இரண்டு வார்த்தைகள் சம்பந்தமுள்ளவை.

அறிவித்தல் அல்லது அறிவி

அறிக்கையிடுதல் அல்லது அறிக்கை

அறிக்கையிடுதல் என்பது“சொன்னதையே சொல்லுதல்” என்பதாகும். வேதத்தை விசுவாசிக்கிறவர்களாகிய நமக்குத் தேவன் தமது வார்த்தையில் சொன்னதை நமது வாயால் சொல்லுவதே. நமது வாயின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளோடு இணங்குகின்றன. இம்முறையில் இயேசுவின் சார்புதலையும் அதிகாரத்தையும் நாம் பெற்றுக் கொள்கிறோம். எபிரெயர்3:1இல் அதின் ஆக்கியோன் இவ்வாறு கூறுகிறார். நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள். இது ஓர் மிக முக்கியமான அறிக்கை. **நாம் அறிக்கை பண்ணாவிடில், நமக்குப் பிரதான ஆசாரியர் இல்லை.**

அறிவித்தல் என்பது அறிக்கையை திடனாய்க் கூறுவதாகும். ஆவிக்குரிய போராட்டத்தில் அறிவித்தல் ஒரு முக்கியமான வார்த்தை. அது தேவனுடைய வார்த்தையை ஒரு சூழ்நிலையில் பிரயோகப்படுத்துவதாகும். நமது வாழ்வில், சபை வாழ்வில் மற்றும் அரசியல் சூழ்நிலையிலும். ஓர் சூழ்நிலையில், **தேவனின் வல்லமையை அறிவிப்பு மூலமாகவே பயனுள்ளதாய் உபயோகிக்க முடியும்.**

ஜெயங்கொள்ளுவோருக்கான அறிவித்தல்

எனது சரீரம் பரிசுத்தஆவியானவர் தங்கும் ஆலயம்[1]. இயேசுவின் இரத்தத்தால் நான் மீட்கப்பட்டு,[2] சுத்திகரிக்கப்பட்டு,[3] பரிசுத்தப்படுத்தப்பட்டேன்[4]

எனது சரீரத்தின் அவயவங்களான உறுப்பினர்கள் நீதியின் ஆயுதங்கள்.[5]

தேவனின் பணிக்கென்றும், மகிமைக்கென்றும் ஒப்புக் கொடுக்கப்பட்டவர்கள்.

என்னிடத்தில் சாத்தானுக்கு இடமில்லை. என்மேல் அவனுக்கு வல்லமை இல்லை. எனக்கு விரோதமாய் தீர்க்கப்படாத உரிமை அவனுக்கு இல்லை. இயேசுவின் இரத்தத்தால் சகலமும் தீர்க்கப்பட்டது.[6]

ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தாலும், சாட்சியின் வசனத்தினாலும் நான் சாத்தானை மேற்கொள்ளுகிறேன். நான் மரணத்திற்காக எனது வாழ்வை விரும்பவில்லை.[7]

எனது சரீரம் ஆண்டவருக்கே
ஆண்டவர் என் சரீரத்திற்கே[8]

ஆமென்.

1. 1 கொரிந்தியர் 6:19
2. எபேசியர் 1:7
2. சங்கீதம் 107:2
3. 1 யோவான் 1:7
4. எபிரேயர் 13:12
5. ரோமர் 6:13
6. ரோமர் 8:33-34
7. வெளிப்படுத்தின விசேஷம் 12:11
8. 1 கொரிந்தியர் 6:13

அறிவித்தலின் தெய்வீக பரிமாற்றம்

நாம் **மன்னிக்கப்படும்படி**	இயேசு **தண்டிக்கப்பட்டார்**
நான் **சுகம் பெறும்படி**	இயேசு **காயப்பட்டார்**
அவருடைய நீதியினால் நாம் **நீதியாகும்படி**	இயேசு நமது பாவங்களினால் **பாவமாக்கப்பட்டார்**
நாம் அவருடைய **வாழ்வை வாழும்படி**	அவர் நமது **மரணத்தை** **அடைந்தார்**
அவருடைய **பரிபூரணத்தில் நாம்** **பங்கு கொள்ளும்படி**	இயேசு நமது **வறுமையை** **ஏற்றுக்கொண்டார்**
நாம் அவருடைய **மகிமையில் பங்கு** **கொள்ள**	இயேசு **இகழப்பட்டார்**
பிதா நம்மை **ஏற்றுக்கொள்ளும்படியாக**	அவர் நம் நிமித்தம் **ஒதுக்கித்** **தள்ளப்பட்டார்**
நாம் **ஆசீர்வாதத்தைப்** **பெறும்படி**	இயேசு **சாபமானார்**

1&2. ஏசாயா 53:4-5
3. 2 கொரிந்தியர் 5:2
4. எபிரெயர் 2:9
5. 2 கொரிந்தியர் 8:9
6. எபிரெயர் 12:2
7. எபேசியர் 1:5-6
8. கலாத்தியர் 3:13

தனிப்பட்ட நிலையில் சாத்தானிடம் வசனம் இரத்தம் எனக்கு எதைச் செய்கிறது என்பதனைச் சாட்சியாக கூற விரும்புகிறேன்.[1]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் நான் பிசாசின் கரத்திலிருந்து மீட்கப்பட்டேன்.[2]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் என்னுடைய அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்பட்டன.[2அ]

தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நான் எல்லாப் பாவத்திலிருந்தும் தொடர்ந்து சுத்திகரிக்கப்படுகிறேன்.[3]

இயேசுவின் இரத்தத்தினாலே நான் நீதிமானாக்கப்பட்டுப் பாவம் செய்யாதவனைப் போல கருதப்பட்டு மீட்கப்பட்டேன்.[4]

இயேசுவின் இரத்தத்தினால் நான் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு தேவனுக்கென்று பிரத்யேகப்படுத்தப்பட்டுள்ளேன்.[5]

என் சரீரம் தேவனுடைய ஆலயம். அவருடைய இரத்தத்தாலே சுத்திகரிக்கப்பட்டு மீட்கப்பட்டேன்.[6]

சாத்தானுக்கு என் மேல் இயேசுவின் இரத்தத்தினால் அதிகாரம் கிடையாது, வல்லமை கிடையாது.

1. வெளி 12:11
2. எபேசியர் 1:7
2அ. சங்கீதம் 107:2
3. 1 யோவான் 1:7
4. ரோமர் 5:9
5. எபிரெயர் 13:12
6. 1 கொரிந்தியர் 6:19-20

நான் தேவனின் கைவேலைப்பாடு. நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய் உருவாக்கப்பட்டிருக்கிறேன்.[1]

அவருடைய இரத்தத்தின் மூலமாக எனக்குப் பாவ மன்னிப்பு உண்டானதால் நான் மீட்பைப் பெற்றுள்ளேன்[2]. வாக்களிக்கப்பட்ட தூயஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டிருக்கிறேன்.[3]

கிறிஸ்து என்னை மெய்யாகவே விடுதலையாக்கியுள்ளார்.[4] அவர் என் அகக் கண்களை (அறிந்து கொள்தலை) ஒளிபெறச் செய்துள்ளதால் அவருடைய அழைப்பினால் உண்டான நம்பிக்கையையும், நான் நினைப்பதற்கும் கேட்டுக்கொள்வதற்கும் அதிகமான அவருடைய ஒப்புயர்வற்ற வல்லமை[5] நிறைந்த பெலனையும் மகிமையின் உரிமைகளையும் நான் அறிந்து கொள்கிறேன்.[6]

தூயஆவியானவர் மூலமாக தேவனுடைய வல்லமையைப் பெற்றுக் கொண்டேன்.[7] இதனால் பிசாசுகளைத் துரத்தவும்,[8] எதிரியின் அனைத்து அதிகாரத்தினையும் மேற்கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளேன்.[9]

என்னைப் பெலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றலைப் பயன்படுத்த முடியும்.[10]

அவர் செயல்களிலும் பெரிய செயல்களைச் செய்ய என்னால் இயலும் என விசுவாசிக்கிறேன்.[11]

என்னில் வசிக்கும் இயேசு உலகத்திலுள்ள பிசாசை

விடப் பெரியவர்.[12] வாழ்வு தரும் தூயஆவியின் சட்டம் என்னில் செயலாற்றுகிறது.[13] கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே என் பெலன்.[14]

1. எபேசியர் 2:10
2. எபேசியர் 1:7
3. எபேசியர் 1:13
4. கலாத்தியர் 5:1
5. எபேசியர் 1:18
6. எபேசியர் 3:20
7. அப்போஸ்தலர் 1:8
8. மாற்கு 16:17,18
9. லூக்கா 10:19
10. பிலிப்பியர் 4:13
11. யோவான் 14:12
12. 1 யோவான் 4:4
13. கலாத்தியர் 5:18; ரோமர் 8:2
14. நெகேமியா 8:10

தேவ பாதுகாப்பிற்கான அறிக்கை

எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். எனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும் என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.[1]

எனக்கு விரோதமாய் யார் பேசினாலும் அல்லது விரோதமாய் ஜெபித்தாலும் அல்லது என்னை ஒதுக்கித் தள்ளித் தீங்கிழைக்க நினைத்தாலும் அவர்களை நான் மன்னிக்கிறேன். மன்னித்த நான் கர்த்தருடைய நாமத்திலே அவர்களை ஆசீர்வதிக்கிறேன்.[2]

கர்த்தாவே, நீர், நீர் மாத்திரமே என் தேவன். உம்மைத் தவிர எனக்கு நீதியுள்ள தேவனும் இரட்சகரும் யாருமில்லை. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியே நான் உம்மை ஆராதிக்கிறேன்.

நிபந்தனையற்ற கீழ்ப்படிதலுக்கு என்னைப் புதிதாக ஒப்புக்கொடுக்கிறேன். உம்மிடம் ஒப்புக்கொடுத்த நான், உம்முடைய வார்த்தையின்படி நடப்பேன். கர்த்தாவே, நான் பிசாசுக்கு எதிர்த்து நிற்கிறேன். அவன் தொல்லைகள், தாக்குதல்கள், ஏமாற்றுதல், பயன்படுத்தும் ஆயுதம், எனக்கு விரோதமாய் எழச் செய்யும் நபர் போன்றவற்றிற்கு எதிர்த்து நிற்கிறேன். அதற்கு என்னை ஒப்புக்கொடுக்க மாட்டேன். நான் எதிர்த்து நின்று அவனை விரட்டியடிப்பேன். இயேசுவின் நாமத்தில் என்னிலிருந்து அகற்றுவேன். சிறப்பாக நான் பெலவீனம், வலி, வீக்கம், பாதிப்புகள், கேன்சர், அலர்ஜி, வைரஸ் மேலும் எல்லாவித பில்லிசூனியங்கள், அழுத்தங்களுக்கு எதிர்த்து நிற்கிறேன்.

இறுதியாகக் கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவின் சிலுவை தியாக மரணத்தால் சாபத்திலிருந்து விலகி நீர் எல்லா

வகையிலும் ஆசீர்வதித்த ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்குள் கடந்து வருகிறேன்.[3]

உயர்வு, ஆரோக்கியம், பலுகிப்பெருகுதல், செழிப்பு, வெற்றி, தேவ தயவு, தேவ நட்பு எனக்குச் சொந்தமாகும். ஆமென்.

1. ஏசாயா 54:17
2. மத்தேயு 5:43-45
   ரோமர் 12:14
3. கலாத்தியர் 3:13-14
   ஆதியாகமம் 24:1

சோர்வினை மேற்கொள்ள அறிக்கை

தேவனே, இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே[1] தேவனுடைய வார்த்தையின்படி மனபாரம் என்னும் ஆவியிலிருந்து என்னை விடுவிக்க வேண்டுகிறேன்.[2]

சகலமும் நன்மைக்கேதுவாக என் வாழ்வில் நடப்பதற்காக நன்றி. ஏனென்றால் உமது நல்ல நோக்கத்திற்காக நான் அழைக்கப்பட்டதால், உம்மை நேசிக்கிறவன்.[3]

இயேசுவின் நாமத்தில் மேட்டிமையான அனைத்து எண்ணத்தையும் சிறைப்படுத்தி தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படுத்துகிறேன்.[4] நான் இரட்சண்யம் என்னும் தலைக் கவசத்தை அணிகிறேன்.[5]

பரிசுத்தஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.[6]

பரிசுத்தஆவியானவரே சகல சத்தியத்திற்குள்ளும் என்னை நடத்தும்.[7] பிசாசின் எல்லாப் பொய்யினின்றும்[8] என்னை விலக்கி சத்தியத்திற்குள் நடத்தும்.[9]

கர்த்தாவே உதவி செய்யும். உலகத்திற்குரிய வேடம் தரிக்காமல் மனம் புதிதாவதாலே மாற்றமடையச் செய்யும்.[10]

நன்றி இயேசுவே. இயேசுவின் நாமத்தில், ஆமென்.

1. யோவேல் 2:32
2. ஏசாயா 61:3
3. ரோமர் 8:28
4. 2 கொரிந்தியர் 10:5
5. 1 தெசலோனிக்கேயர் 5:8
6. ரோமர் 15:13
7. யோவான் 16:13
8. யோவான் 8:44அ
9. மத்தேயு 6:13
10. ரோமர் 12:2

நீர் என் பாரிகாரியான கர்த்தர்

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறார்.[1]

கர்த்தாவே நான் உமக்காய் காத்திருக்கிறேன். நீர் என்னைப் பெலப்படுத்துகிறதினாலே கழுகைப் போல உயர எழும்புவேன். நான் ஓடினாலும் இளைப்படையேன், நடந்தாலும் சோர்ந்து போகமாட்டேன்.[2]

மெய்யாக அவர் எனது பாடுகளை ஏற்றுக் கொண்டு எனது துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். என்னுடைய மீறுதல்களினிமித்தம் நீர் காயப்பட்டு, என்னுடைய அக்கிரமங்களினிமித்தம் நீர் நொறுக்கப்பட்டீர். எனக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை உம் மேல் வந்தது, உம்முடைய தழும்புகளால் நான் குணமாகிறேன்.[3]

நீர் என்னை விசாரிக்கிறபடியால் என்னுடைய வியாகுலங்களையும், பிரச்னைகளையும் உம் மேல் வைக்கிறேன்.[4] நீரே என்னை சுகப்படுத்தும் தேவன்.[5]

1. சங்கீதம் 103:2-4
2. ஏசாயா 40:31
3. ஏசாயா 53:4-5
4. 1 பேருரு 5:7
5. யாத்திராகமம் 15:26

மன்னிப்பு

பிதாவே! நான் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவனாய் உம்மிடம் வருகிறேன். நான் காயப்பட்டவனாய் இருதயத்தில் சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ள உம்மிடத்தில் வருகிறேன்.[1]

கசப்பினை என் உள்ளத்தில் அனுமதிக்கமாட்டேன். ஏமாற்றங்கள், கோபம், எதிர்மறையான காரியங்கள் அனைத்தையும் என்னை விட்டுத் தவிர்க்கிறேன்.[2]

என்னுடைய மல்யுத்தம் மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல. வானலோகத்துப் பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் போராடுகிறேன்.[3]

நான் வஞ்சம் தீர்த்துக்கொள்ள முற்படாமல் அதனை உம்மிடம் ஒப்படைக்கிறேன்.[4] ஆகவே, என்னைச் சபித்தவர்களை நான் மன்னித்து அவர்களை ஆசீர்வதிக்கிறேன்.[5]

நீர் மனதுருக்கமும், இரக்கமும் உள்ள தேவன்.[6] இதனை உம்மிடத்திலிருந்து நான் கற்றுக்கொள்வதால் என் ஆத்துமா இளைப்படையும்.[1]

1. மத்தேயு 11:29
2. எபேசியர் 4:31
3. எபேசியர் 6:12
4. ரோமர் 12:19
5. ரோமர் 12:14
6. நெகேமியா 9:17

தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வதின் மூலம் என்னை நான் பரிசுத்தமாய்க் காத்துக் கொள்ள முடியும்.[1]

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.[2]

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.[3]

என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைவாயிருப்பதெப்படி?[5]

பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.[6]

நான் ஜீவனைத் தெரிந்துகொண்டு வேசித்தனத்திற்கு விலகியோடுகிறேன்.[7] ஆதலால், நானும் என் பிள்ளைகளும் நீடித்து வாழ்வோம்.[8]

என் சரீரம் பரிசுத்தஆவியின் ஆலயம். நான் எனக்குச் சொந்தமானவன் அல்ல.[9]

தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.[10]

இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.

1. சங்கீதம் 119:9
2. சங்கீதம் 51:10
3. சங்கீதம் 51:2
4. யோபு 31:1
5. மத்தேயு 18:9
6. யாக்கோபு 1:15
7. 1 கொரிந்தியர் 6:18
8. உபாகமம் 30:19
9. 1 கொரிந்தியர் 6:19
10. சங்கீதம் 139:23,24

நமது தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வெற்றி நமக்கு கிடைக்கிறது.[1]

பிசாசின் தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும், வெற்றியுடன் முறியடிப்பதற்கு தேவனுடைய சர்வாயுதங்களை அணிந்துகொள்கிறேன். எனது மல்யுத்தம் ஊன் உடலோடும், மாம்சத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும், இவ்வுலகின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளுடன் உள்ளது. சர்வ வல்லமையுள்ள தேவனே என் உதவியாளர்.[2]

நான் மனிதனில் என் நம்பிக்கையை வைக்க மாட்டேன்.[3]

பிசாசின் பொய்களை வெளிச்சம் போட்டுக் காட்டும்படி[5] சத்தியத்தை இடைக்கச்சையாக இருக்கக் கட்டிக்கொண்டு ஒளியில் நடக்கிறேன்.[4]

நீதியின் கவசத்தில் என் அகத்தைப் பாதுகாக்கின்றேன்.[6] இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தில் நான் தேவனுக்கு முன்பாக நீதிமான் ஆக்கப்பட்டுள்ளேன்.[7]

தேவ சமாதானத்தின் ஆயத்தம் என்னும் காலணிகளை என் கால்கள் அணிந்துள்ளன.[8] விசுவாசம் என்னும் கேடயத்தைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளை அணைக்கின்றேன்.[9]

மீட்பின் நம்பிக்கைகளைத் தலைச்சீராவாக அணிந்து எனது மனதையும் எண்ணங்களையும் பாதுகாக்கிறேன்.[10] என்னைப் பற்றி தேவனுடைய திட்டம் வளமான வருங்காலத்தையும், நம்பிக்கையையும் தருகிறது.[11]

ஆவியின் பட்டயமாகிய தேவ வசனம் எனது போராயுதம்.[12] அதைக்கொண்டு குதர்க்க வாதங்களையும் தேவ அறிவிற்கு எதிராகத் தலை தூக்கும் அனைத்து மேட்டிமையையும் தகர்த்தெறிகிறேன்.[13] எல்லாச் சமயங்களிலும் பிரார்த்தனையோடும் ஆவியினால் விண்ணப்பத்தோடும் பொறுமையுடன் பாரத்துடன் அனைத்து விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்கிறேன்.[14]

அவரில் நான் வெற்றி மேல் வெற்றியடைகிறேன்![15]

1. 1 கொரிந்தியர் 15:57
2. எபேசியர் 6:11-18
3. சங்கீதம் 118:8
4. எபேசியர் 6:14
5. யோவான் 8:44; எபேசியர் 5:11
6. எபேசியர் 6:14
7. ரோமர் 3:22,கலாத்தியர் 2:16
8. எபேசியர் 6:15
9. எபேசியர் 6:16
10. எபேசியர் 6:17; 1 தெசலோனிக்கேயர். 5:8
11. எரேமியா 29:11
12. எபேசியர் 6:17
13. 2 கொரிந்தியர் 10:4,5
14. எபேசியர் 6:18
15. ரோமர் 8:37

இம்மானுவேல் நம்மோடிருக்கும் தேவன்

இஸ்ரவேலின் தேவனாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில் அவர் தம் மக்களைத் தேடி வந்து விடுவித்தருளினார்.[2]

நமக்குக் கர்த்தராகிய இயேசு என்னும் இரட்சகர் பிறந்திருக்கிறார்.[3] அவர் தமது மக்களின் பாவங்களிலிருந்து அவர்களை மீட்டு இரட்சிப்பார்.[4]

ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேலிருக்கும்.[5] விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் அவருக்கு அருளப்பட்டிருக்கிறது.[6] அவரது அரசு என்றுமுள்ளது. அவரது ஆட்சியுரிமை நிலைத்திருக்கும்.[7]

இயேசு ஒளியாக உலகத்திற்கு வந்தார். அவரை விசுவாசிக்கிறவன் இருளில் இரான்.[8]

தேவன் இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுவித்துத் தம் அன்பார்ந்த மகனின் ஆட்சிக்குட்படுத்தினார்.[9]

அவர் மூலமாக வல்லமையும் செல்வமும் ஞானமும் ஆற்றலும் மாண்பும் பெருமையும் புகழ்ச்சியும் பெறுகிறோம்.[10]

ஆகவே உம்மை நான்:

அற்புதமான ஆலோசகர், ஆற்றல் நிறைந்த தேவன் என்றுமுள தந்தை, சமாதான அரசர் என அழைக்கிறேன்.[12]

இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்முடன் இருக்கின்றார் என்று பொருள்.[1]

1. மத்தேயு 1:23
2. லூக்கா 1:68
3. லூக்கா 2:11
4. மத்தேயு 1:21
5. ஏசாயா 9:6
6. மத்தேயு 28:18
7. தானியேல் 4:3
8. யோவான் 12:46
9. கொலேசெயர் 1:13
10. வெளி 5:12
11. ஏசாயா 9:6
12. யூதா 1:25

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்."

"கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்."

(2 நாளாகமம் 7:14; கொலோசெயர் 1:27)

கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் பெருமையை நிராகரித்து கிறிஸ்துவின் தாழ்மையை நான் தரித்துக் கொள்கிறேன்.[1]

விரோதத்தை நீக்கி கிறிஸ்துவின் மனரம்மியத்தை ஏற்றுக்கொள்கிறேன்.[2]

பேராசையை ஒழித்து கிறிஸ்துவின் தாராளமனப்பான்மையை ஏற்றுக்கொள்கிறேன்.[3]

பெருந்தீனியை விட்டு கிறிஸ்துவில் ரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்கிறேன்.[4]

இச்சையை ஒழித்துக் கிறிஸ்துவின் தூய்மையை நான் கடைப்பிடிக்கிறேன்.[5]

கோபத்தைத் தவிர்த்து கிறிஸ்துவின் அன்பை கடைப்பிடிக்கிறேன்.[6]

சோம்பேறித்தனத்தை நீக்கி கிறிஸ்துவின் ஊழிய மனப்பான்மையைக் கடைப்பிடிக்கிறேன்.[7]

புறங்கூறுதலை ஒழித்து கிறிஸ்துவின் மூலம் வரும் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்கிறேன்.[8]

1 யாக்கோபு 4:6
2 பிரசங்கி 4:4 1 தீமோ 6:6
3 எபேசியர் 5:5; நீதி 21:26
4 நீதி 23:20, 21; பிலிப்பியர் 4:12
5 யோபு 31:1; மத்தேயு 5:6
6 நீதி 15:1; 19:11; 1கொரி 13:4
7 ரோமர் 12:11
8 லேவியராகமம் 19:16; 1கொரிந்தியர் 4:12

பிசாசுகளைத் துரத்துதல்

"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்." மாற்கு 16:17

இங்குக் கிறிஸ்து கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு ஏற்படும் இரண்டு இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகளைக் குறித்து சாட்சி கொடுக்கிறார். முதலாவது, பிசாசுகளைத் துரத்துதல்; இரண்டாவது நவமான பாஷை பேசுதல் (பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதின் பிரதான அடையாளமாக) உள்ளதை அதிகமாகக் கேள்விப்படுகிறோம். ஆனால் பிசாசுகளைத் துரத்துகிறது பற்றிக் குறைவாகவே கேள்விப்படுகிறோம். இவ்விரு வெளிப்பாடுகளும் ஒன்றிலிருந்து மற்றொன்று முற்றிலும் மாறுபட்டது.

மக்கள் முழுவதும் பிசாசிலிருந்து விடுபட்டால்தான் பின்பு ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று நவமான பாஷை பேச முடியும்

உண்மையைச் சொல்லப் போனால் பிசாசுகளைத் துரத்துவதை நவமான பாஷையைப் பேசுவதற்கு முன்பாக வைத்து கிறிஸ்து கூறுகிறார். இப்படிக் கூறுவதில்

ஒரு முக்கியத்துவம் உண்டு. இதன் நோக்கம் என்னவென்றால், மக்கள் முழுவதும் பிசாசிலிருந்து விடுபட்டால்தான் பின்பு ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று நவமான பாஷை பேச முடியும். இதனைச் சரியாக நிதானித்துப் புரிந்து கொள்ளாததினால்தான் இது சபைகளில் செய்யப்படுவது இல்லை. இதன் விளைவு என்னவென்றால், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு நவமான பாஷை பேசும் மக்களும் கூட பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள். சபையானது திறந்த மனதுடனும் ஊக்கமான ஜெபத்துடனும் இந்த பிசாசின் இயலைக் கவனிக்க வேண்டிய காலம் வந்துள்ளது.

"பிசாசு" என்பதற்கான புதிய ஏற்பாட்டு கிரேக்க சொல் *டெய்மானியான்* (daimonion) இச்சொல் "டெய்மான்" என்னும் மூல வார்த்தையிலிருந்து பிறந்தது. கிரேக்க புராணக் கதைகளில் இவ்வகையான கூட்டம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆதிக்கமும் வல்லமையும் உள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. சில பொய்யான மதங்களும் மூடப்பழக்கங்களும் பிசாசுகளின் அடிப்படையில் எழுந்துள்ளது. சாதாரண மக்களின் பொது வாழ்வில் இது முக்கியத்துவம் பெறுகிறது.

கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் டெய்மானியான் என்ற சொல் "பிசாசு" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. பிசாசு (devil) என்னும் சொல் கிரேக்கச் சொல்லான டயபோலாஸ் (diabolos) என்ற சொல்லிலிருந்து பிறந்தது. இச்சொல்லுக்கு அர்த்தம் குற்றஞ்சுமத்துபவன் (slanderer). வேதத்தில் இச்சொல் சாத்தானைக் குறிப்பதாக உள்ளது.

புதிய ஏற்பாட்டில் வரும் டெய்மானியன் என்னும் பெயர்ச்சொல் டெய்மானிசோமாய் (daimonizomai) என்ற வினைச் சொல்லிலிருந்து பிறந்தது. இது பிசாசினுடைய ஆதிக்கத்திற்குள் வரும் பிசாசு பிடித்தலைக் குறிக்கும். இந்த வினைச் சொல் நன்கு அறியப்பட்ட சொல். கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் இந்த பிசாசினால் தாக்கப்படுதல், தீய

சக்திகளினால் வருத்தத்திற்கு உள்ளானதால் என்ற அர்த்தத்தில் வருகிறது. ஆரம்ப கிரேக்க மொழியில் வரும் சொல் ஒரே அர்த்தத்தில் வந்தாலும் ஆங்கிலத்தில் பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில பிரசங்கிமார் பிசாசு பிடித்தல், பிசாசினால் தாக்கப்படுதல், பிசாசினால் அலைக்கழிக்கப்படுதல் என்று வகைப்படுத்திப் பேசுகின்றனர். இப்படிப்பட்ட வித்தியாசம் கிரேக்கச் சொல்லில் இல்லை.

புதிய ஏற்பாட்டில் வழங்கப்படும் மற்ற இரு சொற்கள், அசுத்த ஆவி, பிசாசு என்பதாகும். வெளிப்படுத்தின விசேஷம் 16:13-14 வசனங்களைப் பார்க்கும்பொழுது இவ்விரு சொற்களும் ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. மனோதத்துவ ரீதியில் பார்க்கும் பொழுது ஆள்தத்துவம் (personality) என்ற சொல்லின் மூன்று கூறுகள் அறிவு, சித்தம், உணர்ச்சி ஆகும். இந்த மூன்று கூறுகளும் புதிய ஏற்பாட்டில் உள்ள பிசாசைக் குறித்த காரியத்தில் வருகிறது.

பிசாசுக்கு அறிவு உண்டு. மாற்கு 1:24இல் வரும் ஆலயத்திலுள்ள பிசாசு பிடித்த மனிதன் கிறிஸ்துவினிடத்தில் "உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்." அப்போஸ்தலர் 19:15இல் எபேசுவில் பிசாசு பிடித்த மனிதன் ஸ்கேவாவின் ஏழு புத்திரரை நோக்கி "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்?" என்று சொன்னான்.

பிசாசுக்கு சித்தமுண்டு. மத்தேயு 12:44இல் ஒரு மனிதனிலிருந்து நீங்கிய அசுத்த ஆவி, இளைப்பாறுதல் காணாது "நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன்" என்று சொல்கிறது. லூக்கா 8:31-33இல் கதரேனருடைய நாட்டு மனிதனைப் பிடித்த பிசாசு பாதாளத்திற்குத் தங்களை அனுப்ப வேண்டாமென்று வலுவாய்க் கூறி பன்றிகளுக்குள் அனுப்பும்படி வேண்டுகிறது.

பிசாசுக்கு உணர்வு உண்டு. யாக்கோபு 2:19இல் பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிசாசுக்கு ஆள்தத்துவமுண்டு என்பதை நிரூபிக்கும் இன்னொரு காரியம் அதன் பேச்சு. இது அநேக புதிய ஏற்பாட்டுப் பகுதியில் கூறப்பட்டுள்ளது. மனோதத்துவ ரீதியில் பார்க்கும்பொழுது, ஒரு மனிதனுடைய பேச்சு, அவருடைய ஆள்தத்துவத்தில் வெளிப்படுகிறது. அர்த்தம் நிறைந்த பேச்சில் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

பிசாசின் ஆள்தத்துவம் அதன் பேச்சில் வெளிப்படுகிறது. இது முக்கியமானது. கிறிஸ்தவ விசுவாசிகள் பிசாசை வெற்றிகரமாய் வெளியேற்ற வேண்டுமாயின் அவைகள் ஆள்தத்துவமுள்ளவைகள் பொருட்களல்ல என்று உணர வேண்டும். பிசாசு என்பது ஒரு நபர். ஒரு நிலையில் பிசாசினுடைய கிரியைகளைப் பகுத்தறிவது 1 கொரிந்தியர் 12:10இல் கூறப்பட்ட “ஆவிகளைப் பகுத்தறிதல்” என்னும் இயற்கைக்கப்பாற்பட்ட பரிசுத்த ஆவியின் செயற்பாடாகும். அநேக கிறிஸ்தவர்கள் ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட வேளையில் இதை ஓரளவு புரிந்து கொள்கின்றனர். ஆனால் ஆவியானவரின் செயல்பாட்டை முக்கியமாக அறியாததினால் இந்த வரத்தை வெற்றிகரமாக பயன்படுத்த முடிவதில்லை. ஆகவேதான், எபிரெயர் 5:14இல் விசுவாசிகளைப் பற்றி “பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்” என்று சொல்லப்பட்டுள்ளது. இக்கால சபையில் சில விசுவாசிகள் இந்த ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ளவர்களாயிருக்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய புலன்களைப் பயன்படுத்த ஆரம்பிக்கும்பொழுது, பிசாசு இருக்கிறது, பிசாசு செயல்படுகிறது என்பதற்கான பல அறிகுறிகளைத் தெரிந்து கொள்ள முடியும். பொதுவான வெளிப்படையான அடையாளங்களை இரண்டு தலைப்பின் கீழ் கொண்டு வரலாம். ஒன்று ஆள்தத்துவத்திற்குரிய மனோதத்துவ வெளிப்பாடுகள் இரண்டாவது சரீரத்திற்கடுத்த நிலையில்

வெளிப்படையாகக் காணப்படும் உடல் நிலையும் அசைவுகளும்.

I. மனோதத்துவக் கூறுகள்

(a) தொடர்ச்சியாக அல்லது விட்டுவிட்டு வரும் தீய அல்லது அழிவின் உணர்வுகள் அல்லது ஒரு மனிதனைக் கட்டுப்படுத்தும் எண்ணங்கள். இவ்வெண்ணங்கள் சித்தத்திற்கும் இயற்கை சுபாவத்திற்கும் மாறுபட்டதாய் வரும். உதாரணமாக எதிர்த்து நிற்பது, விரோதம், பயம், பொறாமை, பெருமை, சுய பரிதாபம், அழுத்தம், பொறுமையற்ற தன்மை.

(b) பல்வேறு மனநிலை காரணமற்ற திடீரென்று உண்டாகும் மனநிலை மாற்றம். உதாரணமாக, விடாமல் பேசிக்கொண்டேயிருப்பதிலிருந்து மிகுதியான பேசாத மனச் சோர்வு

(c) பலவிதமான மதத்திற்கடுத்த தவறுகள் அல்லது கட்டுக்கள்: வசனத்துக்கு முரணான காரியத்துக்கு ஒப்புக்கொடுத்தல் இயற்கைக்கு அப்பாற்பட்ட சாதுவாகும் மனப்பான்மை. இயற்கையான உணவை சாப்பிட மறுப்பது. பலவித மூடப்பழக்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பது, பலவித வணக்கங்கள்.

(d) மந்திரச் செயலின் தொடர்பு, குறி சொல்லுதல், ஜோதிடம், ஆவி உலகத் தொடர்பு

(e) அடிமைப்படுத்தும் பழக்கங்கள், உதாரணமாக, பெருந்தீனி, ஆல்கஹால், நிக்கோடின், மயக்க மருந்து அருந்துதல், ஒழுக்கக்கேடாக நடப்பது, தாறுமாறான பல காரியங்கள், கட்டுப்பாடற்ற தூய்மையற்ற எண்ணங்களும் பார்வைகளும்

(f) தேவ தூஷணம், கேலி செய்தல், தூய்மையற்ற மொழி பேசுதல்

(g) பரிசுத்தஆவியானவரின் கிரியைகளுக்கும் அல்லது வசனத்தின் சத்தியங்களுக்கும் பயங்கரமாய் எதிர்த்து நிற்பது

II. சரீரத்திற்கடுத்த காரியங்கள்

(a) இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒய்வற்ற தன்மை, சலசலவென்று பேசிக்கொண்டேயிருப்பது, முறுமுறுப்பது

(b) கண்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் காண்பது, சரியாகப் பார்க்க முடியாத தன்மை. முன் தள்ளப்பட்ட கண்கள்.

(c) வாயில் நுரை தள்ளுதல் மூச்சுத்திணறல்

(d) அதிகமான இதயத் துடிப்பு அல்லது இயற்கைக்கு மாறாக இருதயம் செயல்படுதல்.

(e) ஒதுங்கியிருத்தல், எதிர்ப்பு தெரிவித்தல், பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கு எதிராகச் செயல்படுதல்

அநேக பிரச்சனைகளில் இவ்விதமான பக்க விளைவின் அறிகுறிகள் மூலமாக மாத்திரமே பிசாசு இருந்து செயல்படுகிறது என்று தீர்மானமாக சொல்ல முடியாது. ஆனால் இவ்விதமான பல அறிகுறிகள் காணப்படும் போது அது பெருமளவு பிசாசின் தாக்குதல்தான்.

இது தவிர புதிய ஏற்பாட்டில் சரீர நோய்களும், பெலவீனங்களும் பிசாசினுடைய தாக்குதலின் அறிகுறிகளே என்று கூறுகிறது. லூக்கா 13:11இல் நாம் "பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்." இப்பெண் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டபொழுது சரீரம் பூரணமாய் ஆரோக்கியமடைந்ததைக் காண்கிறோம். இயேசுவே அவளை ஆபிரகாமின் குமாரத்தி என அழைக்கிறதைக் காண்கிறோம். இதன் மூலம் அவள் மெய்யான விசுவாசி என அறிகிறோம்.

அவள் எந்தக்குறிப்பிட்ட பாவத்திற்கும் இலக்கானவள் அல்ல என்பது தெரிகிறது. பிரதானமாக பிசாசின் கிரியையே அவளுடைய சரீரத்தில் வெளிப்பட்டது.

இவ்விதமான பல அறிகுறிகள் காணப்படும் போது அது பெருமளவு பிசாசின் தாக்குதல்தான்.

அப்போஸ்தலர் 19:11இல் எபேசுவில் பவுலின் ஊழியத்தைப் பற்றி வாசிக்கும் பொழுது "பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன" எனப் படிக்கிறோம். இங்கு "அசுத்த ஆவிகளுக்கும்" "நோய்களுக்கும்" ஏதோ உறவும் தொடர்பும் இருக்கிறது என்பது தெளிவாகிறது.

கீழ்க்கண்ட சில அறிகுறிகள் சரீரத்திலும் மனதிலும் பிசாசு தாக்கியுள்ளதைக் காட்டுகிறது: பைத்தியம் பிடித்தல், தூக்கமின்மை, திமிர்வாதம், வலிப்பு, உடலின் பகுதியில் உணர்வற்ற தன்மை, ஒற்றைத் தலைவலி, சைனஸ் தாக்குதல், கட்டிகள், அல்சர்கள், இதய நோய், ஆர்தரைடீஸ், முடக்குவாதம், ஊமைத்தன்மை, செவிடாகுதல், குருட்டுத்தன்மை.

இவ்விதமான பிசாசின் அழிவின் சக்தியிலிருந்து விடுதலை பெறுவதற்கான நிபந்தனைகள் என்ன?

முதலாவது நிபந்தனை *நோயின் தராதரத்தைச் சரியாய்க் கணிப்பது.* 1 கொரிந்தியர் 9:26இல் பவுல் தனது ஊழியத்தை "ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்" கிறிஸ்தவர்கள் பிசாசினால் தாக்கப்படும்பொழுது, தாக்குகின்ற பிசாசின் தன்மையை உணர்வதில்லை. இது ஒரு குத்துச்சண்டை வீரன் எதிரியின் சரீரத்தைத் தாக்குவதாக நினைத்துக்கொண்டு காற்றில் குத்துவது போல் உள்ளது.

அவர்கள் அதிக நேரத்தையும், சக்தியையும் தன் விரோதிக்கு எதிராக செலவிட்டும், தங்களை எதிர்க்கும் காணப்படாத விரோதியை "தாக்காமற்" போகிறார்கள். ஆகவேதான் அவர்களுடைய சாதனை தோல்வியடைகிறது. பிசாசு இருக்கிறதையும் அவன் செயல்பாட்டையும் சரியாக கணிக்கும் பொழுது விடுதலைக்குரிய நிபந்தனைகளை அறிந்துகொள்ள முடியும். இந்த நிபந்தனைகளை விடுதலை ஊழியத்தில் உள்ளவரும் விடுதலைபெற விரும்புபவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

வசதியின் காரணமாக விடுதலை ஊழியத்தைச் செய்வோரை "ஊழியக்காரர்" (The Minister) என்று அழைப்போம். அவர் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஊழியக்காரர் இயேசுவின் நாமத்தினாலே தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை அறிந்திருக்க வேண்டும். இயேசு தாமே சொன்னார் "என்னுடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவீர்கள்" லூக்கா 10:17இல் நாம் இவ்வாறாக வாசிக்கிறோம். "பின்பு அந்த எழுபது பேரும் சந்தோஷத்தோடே திரும்பி வந்து: ஆண்டவரே உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்." அப்போஸ்தலர் 16:18இல் பவுல் பிலிப்பு பட்டணத்தைச் சார்ந்த குறிசொல்லும் ஆவியை உடைய பெண்ணிடம் "இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இவளை விட்டு வெளியே வரும்படிக் கட்டளையிடுகிறேன்" என்று கூறினார்.

2. ஊழியக்காரருக்கு பரிசுத்தஆவியின் வல்லமை தேவைப்படுகிறது. மத்தேயு 12:28இல் "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" இவ்வாறாக அவர் பரிசுத்தஆவியானவரின் வல்லமையினாலே பிசாசுகளைத் துரத்தும் வல்லமையை வெளிப்படுத்தினார். இதைப்போலவே லூக்கா 4:18இல் "கர்த்தருடைய ஆவியானவர் என் மேல்

இருக்கிறார்; தரித்திரருக்கு சுவிஷேசத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்" என்று சொல்லப்பட்டுள்ளது.

3. ஊழியக்காரர் ஒவ்வொருவரும், வேதத்தில் கூறப்பட்ட பொருத்தமான திட்டங்களை அறிந்துகொண்டு அதை உபயோகப்படுத்த வேண்டும். இதனால் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக பாவ மன்னிப்பையும் சட்ட ரீதியான மீட்பையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலையையும் வரையறை செய்துகொள்ள வேண்டும்.

4. ஊழியக்காரர் அடிக்கடி உறுதுணையாக இருந்து தனிப்பட்ட ஆலோசனைகளைக் கூறுவதற்கான நேரம், இடம் ஆகிய இரண்டையும் கொடுப்பதற்காக ஆயத்தமாக இருக்க வேண்டும். பொதுவாக சொல்லப் போனால், ஆலயத்தில் பொது ஆராதனை நடக்கும் பொழுது பரிசுத்த ஸ்தலத்தின் அருகிலுள்ள இடமோ, நேரமோ கொஞ்சங்கூட பொருத்தமானதாக அமையாது. எனவே பொருத்தமான இடத்தையும் நேரத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

5. ஊழியக்காரருக்கு எந்த விதத்திலும் ஆவிக்குரிய பெருமை வராதபடி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். விடுதலையைப் பெற்றுக் கொள்ளுவதற்கான தேவையுடன் இருக்கும் ஒருவரிடத்தில் பொறுப்புள்ள, தேவனால் கொடுக்கப்பட்ட உருக்கத்துடன் தூண்டப்பட்டவராக இருக்க வேண்டும். இன்று சபையினால் செய்யப்படும் எல்லா வெளி ஊழியங்களிலும், பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்கு அவசியமானவர்களைவிட வேறு தேவைப்பட்டவர்களோ பரிதபிக்க வேண்டிய வகுப்பைச் சேர்ந்த மக்களோ இருக்க முடியாது.

நாம் இப்பொழுது விடுதலை பெற வேண்டிய ஒருவர் பக்கமாக திரும்புவோம். நம்முடைய வசதிக்காக இவரை நாம்

'நோயாளி' என்று அழைக்கலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள சில விடுதலைக்குத் தேவையானவையாகும்.

1. **தாழ்மை:** நோயாளியானவர் பிசாசை எதிர்த்து நிற்பதற்கு முன் தாழ்மையுடன் தன்னை தேவனுக்கு முன்பாக அர்ப்பணிக்க வேண்டும். (யாக்கோபு 4:6,7ஐப் பாருங்கள்)

2. **வாய்மை:** இதற்கு முழுமையாக வெளிப்படையான ஒப்பளிப்பு தேவைப்படுகிறது. நோயாளியின் நிலைமையும் அந்நிலையில் ஏதாவது பாவம் செய்திருத்தலையும் ஆகிய இரண்டையும் கவனிக்க வேண்டும் (சங்கீதம் 32:1-5 ஐப் பார்க்கவும்).

3. **அறிக்கையிடுதல்:** நோயாளி குறிப்பாக தேவனிடத்தில் தான் அறிந்த எல்லாப் பாவத்தையும் அறிக்கையிட வேண்டும் (1 யோவான் 1:9 ஐப் பார்க்கவும்) இதோடு கூட அவன் தனக்கு விடுதலை கொடுக்க வந்து ஜெபிக்கிறவனோடுகூட, அவனிடத்தில் அறிக்கை செய்தல் வேண்டும். (இது யாக்கோபு 5:16இல் உள்ள வசனங்களால் அறியப்படுகிறது) "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." இது தேவனிடத்தில் மட்டும் அறிக்கையிட்டால் போதாது. ஆனால், மனிதனிடத்திலும் அறிக்கையிட வேண்டும் என்று சொல்லுகிறது.

4. **துறந்து விடுதல் அல்லது விட்டுவிடுதல்:** பாவத்தை அறிக்கையிட்டால் மட்டும் போதாது, அதை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும் "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதிமொழிகள் 28:13) "துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன் அவர் அவன்மேல் மனதுருகுவார். நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிப்பதற்கு

தயை பெருத்திருக்கிறார்" (ஏசாயா 55:7) துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பினால் மட்டும் போதாது. (அவனது வெளியரங்கமான செயல்களையும் கூட) அவனுடைய நினைவுகளையும் விட்டுவிட வேண்டும். (உள்ளத்தில் ஏதாவது பாவமான ஆசைகள் இருந்தால், இவை வெளியரங்கமாக காட்டுவதற்கு முடியாத செயல்கள்) இரக்கத்திற்கும் மன்னிப்பிற்கும் முன்பாக விட்டுவிடுதல் வர வேண்டும்.

5. **மன்னித்தல்:** தேவனிடத்திலிருந்து மன்னிப்பை விரும்புகிற ஒருவன் முதலாவது தன்னுடைய பிறனையும் மன்னிக்க வேண்டும். கசப்புணர்ச்சியும் மன்னிக்க முடியாத ஆவியுமாகிய இரண்டும் விடுதலை பெறுவதற்குத் தடைகளாக இருக்கும் பொதுவான செயல்கள் ஆகும். எபிரெயர் 12:15இல் "ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்" என்று காண்கிறோம். கர்த்தருடைய ஜெபத்தில் அமைந்துள்ள வார்த்தைகளின் வரிசைக் கிரமத்தில் சிறப்பான முக்கியத்துவம் உண்டு. முதலாவதாக "பிறர் குற்றங்களை நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்" (நாம் மற்றவர்களுக்கு எந்த அளவு மன்னிக்கிறோமோ அந்த அளவு தேவனும் நமக்கு மன்னிப்பார் என்பது அறிந்து கொள்ளப்படும்) பிறகு "தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" என்பதாகும். ஆகவே மன்னிப்பு விடுதலைக்கு முன்பு வரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. மன்னிப்பு இல்லாமல் விடுதலைக்கு உரிமை பாராட்ட முடியாது.

6. இப்படிப்பட்ட நோயாளி மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து நிபந்தனைகளையும் சந்தித்த பின்பு அவன் யோவேல் 2:32இல் உள்ள வாக்குத்தத்தத்திற்கு உரிமை பாராட்டக்கூடிய நிலைக்கு வருவான் "அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" சாதாரணமாக கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவின் நாமத்தை சத்தமிட்டுக் கூப்பிடும் பொழுது விடுதலையாகிய செயல், செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

சாதாரணமாக விடுதலை பெறுதல் ஒரு முறைமையான செயல், அதாவது படிப்படியாகச் செல்லக்கூடிய செயல் என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியமாகிறது. இந்த முறைமையானது சுருக்கமாகவும் இருக்கலாம் அல்லது நீண்டு கொண்டும் செல்லலாம். மேலும் இழுத்துக்கொண்டும் செல்லலாம். அது ஆழமானதாகவும் நாடகம் நடிப்பது போலவும் அல்லது அமைதியாகவும் அரிதாக புலன்களால் உணரத்தக்கதாகவும் இருக்கும். ஆனால், எங்கெல்லாம் ஒரு மனிதன் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுகிறானோ அங்கெல்லாம் ஒரு சில திட்டவட்டமான அனுபவங்களும் எதிர் விளைவுகளும் இருக்கும். எங்கே இப்படிப்பட்ட சில திட்டவட்டமான அனுபவமோ அல்லது எதிர் விளைவுகளோ ஏற்படாவிட்டால் அங்கே விடுதலை பெற்றது உண்மையாகவே செயல்படுகிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கும்.

> "பொதுவாக ஒரு பிசாசு அது இருப்பதை வெளிக்காட்டி அதை வெளியே வரும்படிக் கட்டாயப் படுத்தினாலும் அது மறைந்து கொண்டிருப்பதையே தேடும்."

இதன் தொடர்பாக மிகவும் எளிமையான சில குறிப்பிட்ட பொது அறிவுப்பூர்வமான நோக்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அங்கே, ஒரு மனிதனுக்குள் எங்கேயாவது பிசாசு பிடித்திருந்தால், பிறகு அந்த பிசாசு வெளியே வரவேண்டும். உண்மையாகவே பிசாசு வெளியே வராவிட்டால் அங்கே விடுதலையும் இருக்காது. பொதுவாக ஒரு பிசாசு அது இருப்பதை வெளிக்காட்டி அதை வெளியே வரும்படிக்குக் கட்டாயப்படுத்தினாலும் அது மறைந்து கொண்டிருப்பதையே தேடும்.

இப்பொழுது பிசாசு என்பது ஒரு 'ஆவியாகும்.' ஆவி

என்பதற்கு கிரேக்க வார்த்தை 'நியூமா' என்பதாகும். இது சுவாசம் அல்லது மூச்சு என்றும் கூட பொருள்படும்.

சாதாரணமாக ஒரு மனிதனுடைய மூச்சானது அவனுடைய சரீரத்திற்குள்ளே நுழைவதோ அல்லது வெளியே வருவதோ அவனுடைய வாய் வழியாகவோ அல்லது மூக்கு வழியாகவோதான் இருக்கும். இதே கருத்தானது பிசாசுகள்/பொல்லாத ஆவிகளுக்கும் உண்மையாக இருக்கும். ஒரு பிசாசு ஒருவனுடைய சரீரத்தை விட்டு வெளியே வரும் போது அது சாதாரணமாக அவனுடைய வாயின் வழியாகத்தான் வெளியே வரும். இந்த கருத்தின் அடிப்படையில் அங்கே வழக்கமாக சில திட்டவட்டமான வெளிப்பாடுகளும் இருக்கும். இவ்வாறு வாயின் வழியாக வெளிவரும்பொழுது அதோடு சம்பந்தப்பட்ட கீழே குறிப்பிடப்படும் சில வெளிப்பாடுகளும் உண்டாகும். பொதுவாக அவைகள் விடுதலையடைவதின் படிகளில் உச்சக்கட்டத்தை அடைவதற்கான அறிகுறிகளாகும்.

அவையாவன பாம்பின் சீறல் போன்ற ஒலி எழுப்புதல், இருமுதல், ஏங்கி ஏங்கி அழுதல், ஓலமிடுதல், சிங்கம் போல கர்ஜித்தல், ஏப்பம் விடுதல், துப்புதல் மற்றும் வாந்தியெடுத்தல் ஆகியனவாகும்.

இந்த ஓலமிடுதல், கர்ஜித்தல் போன்ற அபூர்வமான செயல்கள் அப்போஸ்தலர் 8:7இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. எப்படியும் இந்த இரண்டும் பலவகையான அபூர்வ செயல்களில் சிலவாக வாயோடு சம்பந்தப்பட்டதாக உள்ளது. என்னுடைய அனுபவத்தின் மூலமாக என்னை நம்பச் செய்தது என்னவென்றால் பலவகையான பிரிவைச் சேர்ந்த பிசாசுகள் வித்தியாசமான நடத்தைகளை வெளிக்காட்டுகின்றனவாக இருக்கின்றன என்பதாகும். உதாரணமாக பாலியல் சம்பந்தப்பட்ட அசுத்தங்களை உடைய பிசாசுகள் பொதுவாக சிலவகையாக துப்புதல் அல்லது வாந்தியெடுத்தல் இவற்றைக்

கொண்டு வெளியே வரும். (இந்த முறையில் ரொம்ப அடிக்கடி அதிக அளவான சளி போன்ற ஒரு பொருள் வெளியே வரும்) பொதுவாக பயத்தின் ஆவியையுடைய பிசாசு மூர்ச்சையுற்று வலிப்பு நோயுடன் ஏங்கி அழுதல், அல்லது சிணுங்கி அழுதல், தேம்பி அழுதல் ஆகியவற்றை உண்டாக்கி வெளியே வரும். படுக்கையில் கிடத்தும் அல்லது வெறுப்புணர்ச்சியை உடைய பிசாசு பெருத்த கர்ஜித்தல் போன்ற சத்தத்தை உண்டாக்கும். புகைப்பிடிக்கும் போதை மருந்து பிசாசு இருமலோடும் திக்கு முக்காடச் செய்தும் வெளியே வரும்.

சில வேளைகளில் பிசாசுகள் நோயாளியினுடைய தனித்தன்மையை அப்புறப்படுத்திவிட்டு தங்களுடைய சொந்த தன்மையை வெளிப்படுத்தி உண்மையில் ஆட்சி செலுத்தும் ஒருவர் போலக் காட்டும். சில வேளைகளில் நோயாளியின் பேசக்கூடிய உறுப்புகளைக் கட்டுப்படுத்தி, தங்களுடைய சொந்த வார்த்தைகள் மூலமாக பேச வைக்கும். சில வேளைகளில் திட்டவட்டமாக குரலில் மாற்றம் ஏற்படுவதும் உண்டாகும். ஒரு பெண்ணினுடைய தொண்டையிலிருந்து உண்டாகும் அவளது குரலானது ஒரு ஆணினுடைய குரலைப் போன்று முரட்டுத்தனமாகக் கேட்கும். மற்றும் சில வேளைகளில் ஒரு மனிதனுக்குள் இருக்கும் பிசாசானது அந்த மனிதனுக்கே தெரியாத வேறு மொழியிலே பேசவும் அதனைப் புரிந்து கொள்ளவும் கூடியதாக இருக்கும். இப்படிப்பட்ட நோயாளிகளுக்கு ஊழியக்காரர் இயேசுவின் நாமத்தினாலே தனக்குக் கிடைக்கப் பெற்ற அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். மேலும் ஒவ்வொரு பிசாசும் தன்னுடைய பெயரைச் சொல்லும்படி கட்டளையிட வேண்டும். இவ்வாறாகப் பிசாசின் தன்மையையும் அதனது செய்கைகளையும் வெளிக்குக் கொண்டு வரவேண்டும். கீழே வருகின்ற சில நான் கேட்டுத் தெரிந்து கொண்டு நான் சூட்டிய பெயர்களாகும். அவையாவன பயம், வெறுப்புணர்ச்சி, பொய்கள், சந்தேகம், விரோதம், பொறாமை, மனக்குழப்பம், மோசமான பாவங்கள், மூளைக் கோளாறு,

மரணம், தற்கொலை செய்தல், விபச்சாரம், கேலி செய்தல், தூஷித்தல், பில்லி சூனியம் ஆகியனவாகும். இவைகளைத் தவிர எண்ணிக்கையில் அதிகமான மற்ற பெயர்களையும் நான் கேட்டிருக்கிறேன். அந்தப் பெயர்களை அச்சடித்தால் அது மிகவும் அசிங்கமானதாக அல்லது அருவருப்பானதாகக் காணப்படும். எனவே அவைகளை விட்டுவிட்டேன்.

ஆசிரியரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் 1915-2003 இந்தியாவிலுள்ள பெங்களூர் பட்டணத்தில் ஐரோப்பிய இராணுவக் குடும்பத்தில் பிறந்தார். அவர் பழமை வாய்ந்த கிரேக்கம், லத்தீன், எபிரெயம், அராமியம் போன்ற மொழிகளைக் கற்று முதலில் இங்கிலாந்திலுள்ள ஈட்டன் கல்லூரி, கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலும் கற்றார். பின்பு இஸ்ரவேலிலுள்ள எபிரெய கலாசாலையிலும் கற்றார். மாணவராக இருந்த காலங்களில் அவர் ஒரு தத்துவ ஞானியாகவும், தன்னை நாத்திகராகவும் அறிவித்தார், கேம்பிரிட்ஜிலுள்ள கிங்ஸ் கல்லூரியில் பழைய நவீன தத்துவங்களை உதவித் தொகை பெற்றுப் படித்தார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஆங்கிலேய மருத்துவத் துறையில் பணி செய்யும் பொழுது வேதத்தைத் தத்துவப் புத்தகமாகப் படித்தார். அவ்வேளையில், இயேசு கிறிஸ்து நேர்முகமாக எதிர்பட்டதால் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றார். பின்பு, பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டார். இவ்வனுபவம் அவரின் வாழ்க்கைப் பாதையை திசை திருப்பியது. அது முதல் தேவனுடைய வார்த்தையாகிய வேத புத்தகத்தைப் படிக்கவும் கற்றுக் கொடுக்கவும் ஆரம்பித்தார்.

1945இல் எருசலேமின் இராணுவப்பணியிலிருந்து விடை பெற்று, குழந்தைகளுக்கு அனாதை விடுதி நடத்தி வந்த லீதியாள் கிறிஸ்டன்சன் என்ற பெண்ணை மணந்தார். திருமணத்திற்குப் பின்பு லீதியாளின் எட்டு தத்தெடுத்த குழந்தைகளுக்கு தந்தையானார். ஆறுபேர் யூத குழந்தைகள் ஒன்று பாலஸ்தீன அராபிய குழந்தை, ஒன்று ஆங்கிலேய குழந்தை, இவர்கள் அனைவரும் 1948ஆம் ஆண்டு இஸ்ரவேல் தனி நாடாகப் பிறந்ததைக் கண்டனர். 1950ஆம் ஆண்டு கென்யாவில் ஒரு கல்லூரியில் முதல்வராக இருந்த பொழுது, இன்னொரு மகளைப் பிரின்ஸ் தத்தெடுத்தார்.

1963ஆம் ஆண்டு பிரின்ஸ் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சென்று, சியாட்டில் என்ற பட்டணத்தில் ஒரு திருச்சபைக்குப் போதகரானார். ஜான் F. கென்னடியின் படுகொலைக்குப் பின்பு அமெரிக்கர்களுக்குத் தன் நாட்டிற்காக பரிந்து மன்றாடுவது எவ்வாறு என்று கற்றுத்தர ஆரம்பித்தார். ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் சரித்திரத்தை உருவாக்குவது எவ்வாறு என அவர் எழுதிய புத்தகம் உலகம் அனைத்திலுமுள்ள மக்களுக்குத் தங்களுடைய அரசாங்கத்திற்கு ஜெபிப்பது எவ்வாறு என்ற பொறுப்பை உணர்த்தியது. இவ்வாறு ரகசியமாய் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகம் USSR, கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லோவேகியா போன்ற நாடுகளில் கம்யூனிசம் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாயிருந்தது.

1975ஆம் ஆண்டு லீதியாள் பிரின்ஸ் மரித்த பின்பு, டெரிக் (3 தத்தெடுத்த குழந்தைகளுக்குத் தாயான) ரூத் பேக்கரை 1978ல் திருமணம் செய்தார். அவர் தமது இரண்டாம் மனைவியை, முதல் மனைவியைச் சந்தித்தது போல எருசலேமில் பணிபுரிந்த காலங்களில் சந்தித்தார். 1998 டிசம்பரில் ரூத் எருசலேமில் 1981லிருந்து வசித்து வந்த இடத்தில் நித்திரையடைந்தார். தன்னுடைய 2003ம் ஆண்டு மரணத்திற்கு முன்பு தனது 88ம் வயதில் உற்சாகமாய் ஊழியத்தைத் தொடர்ந்தார்.

தேவ அழைப்பின்படி, வசனத்தின் ஒளியில் கண்ட தீர்க்க தரிசனங்களை வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை உலகமனைத்திலும் சென்று, கற்றுத் தந்ததுமன்றி

நோயுற்றவர்களுக்காகவும், துயரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் ஜெபித்து வந்தார். அவருடைய 50 புத்தகங்கள் 60 மொழிகளுக்கு மேல் மொழி பெயர்க்கப்பட்டு உலகமனைத்திலும் விநியோகம் செய்யப்பட்டது. தலைமுறைதோறும் தொடரும் சாபங்களை முறிப்பது, இஸ்ரவேல் நாட்டின் முக்கியத்துவம், பிசாசுகளைப் பற்றிய விவரங்களை ஆரம்ப காலத்தில் அறிமுகப்படுத்தினார்.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் தலைமைக் காரியாலயம் வட கரோலினாவில் உள்ள சார்லட் என்ற பட்டணத்தில் உள்ளது. அங்கிருந்து அவரின் போதனைகள் மிஷினரிகளைப் பயிற்றுவிக்கவும் திருச்சபையின் தலைவர்களை உருவாக்கவும் உலகமனைத்திலுமுள்ள பல கிளை அலுவலகங்களின் மூலம் சபையின் மக்களுக்கும் ஆசீர்வாதமாக உள்ளது.

அவருடைய வானொலி நிகழ்ச்சி “வெற்றியுள்ள வாழ்வின் திறவுகோல்கள்” (Now Known as Derek Prince Legacy Radio) என்பது 1979ஆம் ஆண்டு பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு ஒளிபரப்பாகிறது. இவ்வாறான, தெளிவான சபை சார்பற்ற, எந்தப் பிரிவையும் சாராத, வேத போதனைகள் உலகத்தின் பாதிக்கும் மேலான மக்களை சென்றடைந்து வருகிறது.

உலகமனைத்திலும், வேத பண்டிதராகவும், தந்தையாகவும் விளங்கிய டெரிக் பிரின்ஸ் தமது போதனையின் ஊழியத்தை ஆறு கண்டங்களில் எழுபது ஆண்டுகளாக செய்து முடித்தார். 2002ம் ஆண்டில் டெரிக் இவ்வாறு கூறினார்: “இது என்னுடைய ஆசை. கர்த்தருடைய ஆசை என்றும் நம்புகிறேன். 60 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பமான இவ்வூழியம் இயேசுவின் வருகை வரை தொடருமென்று நம்புகிறேன்.”

டெரிக் பிரின்ஸின் மற்ற தமிழ் புத்தகங்கள்

1. தேவனின் மருந்து புட்டி	ரூ.25/-
2. உங்களில் உள்ள தூய ஆவியானவர்	ரூ.30/-
3. தெய்வீகப் பரிமாற்றம்	ரூ.20/-
4. சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருதல்	ரூ.40/-
5. ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள் நீ தெரிந்து கொள்ளலாம்	ரூ.85/-
6. வாழ்வளிக்கும் விசுவாசம்	ரூ.60/-
7. அவர்கள் பிசாசுகளைத் துரத்தவார்கள்	ரூ.90/-
8. ஆவிக்குரிய போராட்டம்	ரூ.35/-
9. ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல்	ரூ.25/-
10. அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்	ரூ.25/-
11. சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள்	ரூ.60/-
12. பிசாசுகளைத் துரத்துவார்கள்	ரூ.20/-
13. நீதியான வாழ்க்கைக்கு அடித்தளங்கள்	ரூ.230/-
14. விட்டுக்கொடுத்தலின் கிருபை	ரூ.30/-
15. வாழ்வை மாற்றும் ஆவிக்குரிய ஆற்றல்	ரூ.110/-
16. அறிக்கையிடுதலின் ஆற்றல்	ரூ.65/-
17. சோதிக்கப்படுதல்	ரூ.25/-
18. வாழ்வின் கசப்பான ஊற்று	ரூ.30/-
19. அளவற்ற பேரன்பு	ரூ.25/-
20. உங்கள் பணத்தைக் குறித்த தேவ திட்டம்	ரூ.25/-
21. தேவனின் சிறப்பு ஈவினை நீங்கள் விரும்பினால்	ரூ.25/-

Write for a free catalogue of Books, Teaching DVDs VCDs and MP3s of Derek Prince

DEREK PRINCE MINISTRIES - INDIA,

18/32, Mangammal Salai,

Renga Nagar,Trichy - 620 021,

Tamil Nadu, India.

Phone: 00 - 91 - 431 - 2459464 / 2459664

Fax: 00-91 - 431-2459564

E-mail: rhemavg@gmail.com